பக்கங்கள்: பன்னிரண்டு +VI=18

பொதுசன நூலகம்

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 தை 21 செவ்வாய்க்கிழமை (03.02.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:069

## நாளைய சுதந்திர தினத்தை முன்னிட்டு

# தலைநகரில் உச்சப் பாதுகாப்பு

# படையினர், பொலிஸார் குவிப்பு!

## தமிழர்கள் வாழும் பகுதி எங்கும் சல்லடை!!

கொழும்பு, பெப்ரவரி 03

இலங்கையின் 61 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நாளை நடைபெறவுள்ளதை முன்னிட்டு தலைநகர் கொழும்பில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டிருக்கின்றது.

கொழும்பில் பல்லாயிரக்கணக்கான பொலிஸாரும், படையினரும் குவிக்கப்பட்டிருக்கின்றனர்.

கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை போன்ற தமிழர்கள் செறிவாக வாழும் பகுதிகள் உட்பட பல இடங்களில் தேடுதல்களும், சோதனைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. காலி வீதி உட்பட தலைநகரின் முக்கிய வீதிகள் போக்குவரத்துக்குத் தடைசெய்யப்பட்டிருக்கின்றன. (11 ஆம் பக்கம் பார்க்க)

## கோத்தபாயவின் மிரட்டல் குறித்து ஜேர்மன் கருத்து

ஜேர்மனி, சுவிற்ஸர்லாந்து தூதுவர்கள் உட்பட ஏனைய சில இராஜதந்திரிகள், சர்வதேச ஊடகவியலாளர்கள் இலங்கையிலிருந்து வெளியேற்றப்படுவார்கள் என பாதுகாப்புச் செயலாளர் விடுத்த எச்சரிக்கையைத் தாம் பெரிதுபடுத்தவில்லையென ஜேர்மனி தெரிவித்துள்ளது.

"புரிந்துணர்வின்மை மூலம் எழக்கூடிய பிரச்சினைகளுக்கு பேச்சுகள் மூலம் தீர்வு (12 ஆம் பக்கம் பார்க்க)

## உடையார்கட்டு, விசுவமடு, துணுக்காயில் கடந்த இரண்டு நாள்கள் விட்டுவிட்டு மோதல்கள்

கொழும்பு, பெப்.3

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு தெற்கு, உடையார்கட்டுக்குளம், விசுவமடு, துணுக்காய் ஆகிய பகுதிகளில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று அதிகாலை முதல் மாலை வரை கடும் மோதல்கள் இடம்பெற்றன என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

இந்த மோதலில் படைத்தரப்புக்கு சிறியளவு சேதம் ஏற்பட்டபோதும், புலிகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை-

முல்லைத்தீவு நந்திக்கடலுக்கு மேற்கேயும் உடையார் கட்டுப்பகுதிகளிலும் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் கடுஞ்சண்டை இடம்பெற்றுள்ளது என்று இராணுவப் பேச்சாளர் உதயநாணயக்கார நேற்றுத் தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரி மீது ஷெல் வீச்சு; ஐ.நாவும் செஞ்சிலுவைக்குழுவும் அதிர்ச்சி!

கொழும்பு, பெப்.3

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மீது தொடர்ச்சியாகப் பீரங்கித் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதை உறுதி செய்துள்ள ஐக்கிய நாடுகளும் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவும் இது தொடர்பாக பலத்த அதிர்ச்சியை வெளியிட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு மருத்துவமனை ஞாயிற்றுக்கிழமை முழுவதும் தொடர்ச்சியான ஆட்லறித் தாக்குதல்களுக்கு இலக்கானது என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வைத்தியசாலை மீது ஷெல் வீச்சு என்பது வெறும் வதந்தி என்கின்றது அரச தரப்பு

கொழும்பு, பெப்.3

புதுக்குடியிருப்பு மருத்துவமனை மீது மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலுக்கு இராணுவம் பொறுப்பல்ல என்று தெரிவித்துள்ள பாதுகாப்பு அமைச்சு, விடுதலைப் புலிகள் மீது குற்றம் சுமத்தியுள்ளது.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மன் குலுகல்ல புதுக்குடியிருப்பு மருத்துவமனை மீது ஷெல் தாக்குதல் நடத்தப்படவில்லை என்று தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலை தாக்கப்பட்டது எனவும், அங்கு பொதுமக்கள் உயிரிழந்தனர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்களுக்கு இந்திய அரசிடமிருந்து மருந்துப் பொருள்கள்

கொழும்பு பெப்.3

வன்னியில் மோதல்களினால் பாதிப்படைந்த மக்களுக்கு இந்திய அரசின் ஒரு தொகுதி மருத்துவ உதவிப்பொருள்கள் நேற்று இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்டன.

இதுகுறித்து நேற்று மாலை கொழும்பிலுள்ள இந்தியத் (12 ஆம் பக்கம் பார்க்க)

**க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கென உதயன் தனியாக வழங்கும் 6 பக்கங்கள் கொண்ட கல்வி இணைப்பிதழ் உள்ளே**

## நிலத்துக்கடியில் இருந்த கட்டடம் பிரமந்தக் குளத்தில் கண்டுபிடிப்பு

### பிரபாகரன் மறைந்திருந்த இடம் என்கிறது பாதுகாப்பு அமைச்சு

கொழும்பு பெப்.3

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு மற்றும் நந்திக்கடல் பகுதிகளில் இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக் கும் இடையில் கடும் சண்டைகள் இடம்பெற்று வருவதாகவும் பிரமந்தக்குளம் எனும் இடத்தில் 2 ஏக்கர் பரப்புக் காணியில் நிலத்திற்கடியில் 2 மாடிக் கட்டடத்தில் அமைந்திருந்த குளிரூட்டி வசதியுடன் கூடிய இடமொன்றை இராணுவத்தினர் தம்வசப்படுத்தியிருக்கின்றனர் என்றும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருக்கிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளித்துக்கொண்டிருந்த தாதி ஒருவர் ஷெல் விழுந்து துடிதுடித்து மரணம்!

### உடையார்கட்டில் நேற்றுப் பரிதாபம்

கிளிநொச்சி, பெப்.3

உடையார்கட்டு வைத்தியசாலை மீது நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் கடமையில் இருந்த தாதிய உத்தியோகத்தரான தவராசா கஜேந்தினி அந்த இடத்தில் துடிதுடித்து மரணமானார். மற்றும் இருவர் ஆஸ்பத்திரிக்குள் பலியாகினர்.

கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ரி.சத்தியமூர்த்தி இதனைத் தெரிவித்தார்.

வைத்தியசாலையில் மூன்று ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன. இரண்டாவது ஷெல் வெடித்ததில் தாதிய உத்தியோகத்தர் கொல்லப்பட்டார்.

அங்கு நோயாளர்களுக்கு அவர் சிகிச்சை அளித்துக் கொண்டிருந்தபோதே அவர் கொல்லப்பட்டுள்ளார்.

அரசு பிரகடனம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் பகுதியிலிருந்து படகில் சென்ற 9 பேரை காணவில்லை என முறைப்பாடு

கொழும்பு பெப்.3

முல்லைத்தீவு மாவட்டம் வள்ளிபுனம் பகுதியிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்வதற்காகக் கடந்த மாதம் 19 ஆம் திகதி கடல் வழியாகப் புறப்பட்டுச் சென்ற தமது மகன், மகள் ஆகியோருடைய குடும்பங்கள் உட்பட தமது உறவினர்களான 9 பேர் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்துத் தகவல் தருமாறு வவுனியா கற்குழியைச் சேர்ந்த வி.க. நாகேந்திரன் (56) என்பவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய அதிகாரியிடம் கோரியுள்ளார்.

வி.க. நாகேந்திரனின் மகன் துதஸ்குமாரின் மனைவி வித்யா (22) அவர்களது பிள்ளைகளாகிய (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழருக்காக தீக்குளித்த மற்றொரு இளைஞரும் மரணம்!

சென்னை, பெப்.3

ஈழத்தில் போரை நிறுத்துமாறு கோரி தமிழகத்தில் கடந்த சனிக்கிழமை தீக்குளித்த மற்றொரு இளைஞரான பள்ளப்பட்டி ரவி என்பவர் நேற்று உயிரிழந்தார்.

கடந்த மூன்று நாள்களாக மதுரை அரச மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வந்த இவர், சிகிச்சை பலனளிக்காமல் நேற்று உயிரிழந்தார்.

ரவியின் மனைவி இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில்-

எனது கணவர் இலங்கைத் தமிழர்களின் அவலங்களைப் பத்திரிகை, வானொலி (12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நேற்று (02.02.2009) 60ஆவது அகவையைப் பூர்த்தி செய்த பொன்னாலையின் மைந்தன்
வடமாகாண பிரதம செயலர்
**உயர் திரு.கு.பொ.சிவகுருநாதன் ரங்கராஜா**
அவர்களை மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பொன்னாலை வாழ்மக்கள்**



இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
**றோயல் குளுக்கோஸ்**
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
**றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.**
PACKED BY: **ROYAL** Industries Colombo 12 T.P. 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
ஸ்ரீ றஞ்சனி நர்சிங் ...ஸ்ரீ ...
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்

✱ முதலாம் வருட அரையாண்டுப் பரீட்சை - 2007
முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான மேற்படி பரீட்சைகள் பின்வரும் நேர அட்டவணைப்படி நடைபெறும்.

| திகதி | நேரம் | பாடம் |
|---|---|---|
| 03.02.2009 | 9.00 - 11.00 | Social Studies |
| 03.02.2009 | 1.30 - 03.30 | Business English |

✱ 2007/2008 கல்வியாண்டின் மாணவர்களுக்கான விரிவுரைகள் 25.02.2009 ஆம் திகதி ஆரம்பமாகின்றன.
✱ சிரேஷ்ட மாணவர்கள் (2ஆம், 3ஆம், 4ஆம் ஆண்டு) புதிய கல்வியாண்டுக்கான மீள் பதிவுகளை 25.02.2009 இல் இருந்து மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

பதில் பதிவாளர்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி மகேஸ்வரி குகதாசன்**



மலர்வு: 31.03.1936
உதிர்வு: 03.02.2007

எங்கள் குடும்பத் தலைவியின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணக் கல்லூரி,
விவசாய நிறுவனம், மருதனார்மடம்.

த.குகதாசன்
குடும்பத்தினர்.

## கால்நடை வளர்ப்பு பயிற்சி இன்று

வண்ணை, பெப்.3

மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு ஆடு வளர்ப்புக்கான அறிவூட்டல் கருத்தரங்கு கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கால்நடை வைத்தியர் செல்வி சி.பி.மரியதாஸ் தலைமையில் மேற்படி கருத்தரங்கு நடைபெறும்.

சண்டிலிப்பாய், ஊர்காவற்றுறை, மானிப்பாய், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கரவெட்டி, உடுவில், தென்மராட்சி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 75 பயனாளிகள் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்வர். (1-160)

## சிமெந்து விநியோகம் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.3

யாழ்.வணிகர் கழகத்தினூடாக மக்கள் பாவனைக்குரிய சிமெந்து விநியோகம் நேற்று திங்கட்கிழமை தொடக்கம் நடைபெற்று வருகின்றது.

இந்த விநியோகம் தொடர்ந்து நடைபெறும் என்றும் பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், பொது அமைப்புக்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களின் வேண்டுகோளுக்கமைய அவர்களுக்கான சிமெந்து விநியோகம் இன்றிலிருந்து நடைபெறும்.

தேவையானவர்கள் பணத்தைச் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும் என யாழ்.வணிகர் கழகம் தெரிவித்துள்ளது. (1)

## பெண் சாரணிய வழிகாட்டுநர் கூட்டம் வியாழனன்று

யாழ்ப்பாணம், பெப்.3

பெண் சாரணிய வழிகாட்டுநர்களுக்கான கூட்டம் நாளைமறுதினம் வியாழக்கிழமை நண்பகல் ஒரு மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளதாக யாழ். மாவட்ட ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இக் கூட்டம் ''பேடன் பவல் சிந்தனை நினைவு நாள்'' என்ற தொனிப்பொருளில் இடம்பெறவுள்ளதாகவும் இதில் அனைத்துப் பெண் சாரணிய வழிகாட்டுநர்களையும் கலந்து கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (6-7)


**★ தேவா ★**
**முறிவு நெரிவு சிகிச்சை நிலையம்**

சகல வித நோவு, முறிவுகளுக்கும் தசை நெரிவுகளுக்கும் புக்கை கட்டுமிடம்.

சென்.பற்றிக்ஸ் சந்தி, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.
செ.தேவராஜா (முறிவு, நெரிவு வைத்தியர்).


### தவறிவிட்டது

முள்ளி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடைய குருசாமி பாலமுரளி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (692574060V) மற்றும் இராணுவத்தால் வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் ஆகியன யாழ்ப்பாணத்திற்கும்கொக்குவிலுக்கும் இடையில் தவறிவிட்டன.

கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து யாழ். பெருமாள் கோவில் குருக்கள் வீட்டில் ஒப்படைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.


## Walk in Interview

**Post of Instrustors** (Chavakachchri Branch)

Suitable young and energetic candidates possessing Diploma or Certificate from recognized Institutes here or abroad.

An attractive salary will be offered to the ideal candidate and preference will be given to persons residing within chavakachcheri limits.

If you are confident that you satisfy the above requirement, please be present for a walk in Interview on **Friday** the 06th **February** 2009 from 10.00am to 3.00pm.

INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES (IBMS)
#209,Manipay Road,Jaffna.
T.P No 021 222 8232



# டிலன் ஹொட்டல்

எமது வாடிக்கையாளரின் விருப்பப்படி மீண்டும் அனுபவமிக்க உணவு தயாரிப்பாளரைக் கொண்டு தயாரிக்கப்படும்.
★புரியாணி வகைகள் ★பிறைட் றைஸ் வகைகள்
★நூடில்ஸ் வகைகள் ★டெவல்ஸ் வகைகள்
★சூப் வகைகள் ★இந்தியன் உணவு வகைகள்
★உள்நாட்டு உணவு வகைகள்
என்பனவற்றை ஒருமுறை வந்து சுவைத்துப் பாருங்கள்

**டிலன் ஹொட்டல்**
இல.133, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/558760)


### யாத்திரைப் பெருவிழா

வடமராட்சி பெப்.3

யாழ்.குடாநாட்டிலுள்ள கத்தோலிக்க யாத்திரைத் தலங்களில் ஒன்றான பருத்தித்துறை தும்பளை லூர்த்து மாதா ஆலய வருடாந்த உற்சவம் நேற்று 2 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (50-236)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன் து.தேவநிரோஜனின் அன்புத் தந்தை
**பண்டாரி துரைசிங்கம்** அவர்களின்
மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

2010 விஞ்ஞான பிரிவு மாணவர்கள்,
மானிப்பாய் இந்துக் கல்லூரி.



## கண்ணீர் அஞ்சலி

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் ஆண்டி சிதம்பரநாதன் அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி ஆண்டி நாகேஸ்வரி**
அவர்கள் நேற்று (02.02.2009) திங்கட்கிழமை இறைபதமடைந்ததையிட்டு அன்னாரது இழப்பினால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு எமது கண்ணீர் அஞ்சலியினையும் காணிக்கையாக்குகின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
உதவி அரசாங்க அதிபர் பணிமனை, காரைநகர்.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஜெகசோதி மகாதேவா (சோதி ரீச்சர்)

(ஓய்வுபெற்ற விளையாட்டுத்துறை ஆசிரியை)



வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் கோவில் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகசோதி மகாதேவா நேற்று (02.02.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான செல்லத்துரை - மங்கையர்க்கரசி (அம்பியக்கா) தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற விஜயரத்தினம் (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்), கணேசரட்ணம் (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், நல்லூர் பிரதேச செயலகம்), பரஞ்சோதி (பரம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பராசக்தி மற்றும் விமலாதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2009) செவ்வாய்க்கிழமை பி.ப. 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*435, கோவில் வீதி, நல்லூர்.*

தகவல்: செ.கணேசரட்ணம் (சகோதரன்).

### மாதன் வீரகத்தி

(ஓய்வுபெற்ற ஊழியர், யாழ்.போதனா வைத்தியசாலை)



புத்தூர் கிழக்கு, குமாரசாமி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாதன் வீரகத்தி கடந்த (30.01.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாதன் - கறுப்பம்மா தம்பதியினரின் மூத்த புதல்வனும் பூமணியின் அன்புக் கணவரும் சுவர்ணதேவி (ஜேர்மனி), தேவமலர், சேகர் (கனடா), கேஜிந்தி (வவுனியா), ஈசா ஆகியோரின் அன்புத் தந்தையும் குமரேஸ்வரன் (ஜேர்மனி), செல்வகுமார், கல்யாணி (கனடா), சதீஸ் சந்திரன் (ஆண் தாதியர், வவுனியா போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் இலட்சுமி, தம்பிராசா, கந்தசாமி (வடமராட்சி தெற்கு பிரதேசசபை, கரவெட்டி), சின்னம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சின்ராசு, கண்மணி, பார்வதி, பரமானந்தன், பரமநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.02.2009) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் கிழக்கு அந்திரானை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குமாரசாமி வீதி, புத்தூர் கிழக்கு, புத்தூர்.*

தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி நடராசா பாக்கியம்



பூநகரியைப் பிறப்பிடமாகவும், சுதுமலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா பாக்கியம் 01.02.2009 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், இராஜேஸ்வரி (சுதுமலை), யோகேஸ்வரி (ஆசிரியை, புனித மரியாள் கல்லூரி- கொழும்பு-13) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தனபாலசிங்கம், பாலச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் இரத்தினம் (பிரான்ஸ்), கந்தசாமி- சங்கானை(ஓய்வுபெற்ற கிராம சேவகர்), காலஞ்சென்ற நடராசா (பூநகரி), காலஞ்சென்ற சிவஞானம் (திருநெல்வேலி), வீரபாகு (பூநகரி), மகேஸ்வரி (திருநெல்வேலி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராதாகிருஷ்ணன் (ஆசிரியர், யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்), ரகுபாலன் (லண்டன்), கிருஷ்ணபிரியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2009) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மதவடி லேன், சுதுமலை தெற்கு, மானிப்பாய். 060 221 8936*

தகவல்: த.இராதாகிருஷ்ணன் (பேரன்).

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# கிளர்ச்சியுற்று எழுந்துள்ள தமிழகத்தின் இளம் சமூகம்

ஈழத் தமிழர்களின் உயிர்களைக் காப்பாற்றக் கோரித் தமிழகத்தில் ஏற்பட்டுவரும் கிளர்ச்சியும், எழுச்சியும் நாம் இப்பத்தியில் ஏற்கனவே சுட்டிக்காட்டியபடி மாநிலத்தை ஆளும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும், இந்திய மத்திய அரசுக்கும் பெரும் தலையிடியாக மாறிவருகின்றமை வெளிப்படையாகத் தோற்றுகின்றது.

முல்லைத்தீவில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தினசரி படுகொலை செய்யப்படும் சிவிலியன்களின் எண்ணிக்கை டசின் கணக்கைத் தாண்டி நூறுகளை எட்டும் நிலைமை. அதுபோலக் காயமடைவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கின்றது.

சிந்தப்படும் இரத்தம் தமிழ் உதிரம் என்பதாலோ என்னவோ தென்னிலங்கையில் இவ்விடயம் குறித்து அதிகம் அலட்டிக்கொள்ளப்படுவதாகவே தெரியவில்லை.

அரசுத் தரப்புக் குற்றம் சாட்டுவது போல புலிகள் இந்த சிவிலியன்களை மனித கேடயங்களாக மறித்து வைத்திருப்பதால்தான் இந்த அனர்த்தம் நேருகின்றதா, அல்லது -

புலிகளும் ஏனைய தமிழ் தரப்புகளும் சுட்டிக்காட்டுவது போல சிவிலியன் குடியிருப்புகள் மீது அரசுப் படைகள் கண்,மண் தெரியாமல் - கண்மூடித்தனமாக - நடத்தும் குரூரத் தாக்குதல் காரணமாக இந்தப் பேரவலம் இடம்பெறுகின்றதா என்பது சர்ச்சைக்குரிய விடயம்தான். ஆனால், சிவிலியன் உயிரிழப்புகளும், படுகாயங்களும் பெரிய எண்ணிக்கையில் - அதிர்ச்சி தரும் கணக்கில் - கொடூரமாக அதிகரித்துள்ளன என்பது மட்டும் யதார்த்தம். அதனைத் தென்னிலங்கை மூடி மறைப்பது - அல்லது அது குறித்து அலட்டிக் கொள்ளாமல் - பெரும் இராணுவ வெற்றிகளை மட்டும் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுவது, இந்த யுத்தத்தில் நேரடியாகவும், மோசமாகவும் பாதிக்கப்படும் சிறுபான்மையினரான தமிழர்களின் மனதை நெருடி, காயப்படுத்தி, ரணகளமாக்கும் விவகாரமாகும்.

இந்த யுத்தத்தின் பின்னராவது, தமிழருக்கு நீதி - நியாயம் செய்யும் உண்மையான எண்ணம் தென்னிலங்கைக்கு இருக்குமானால், இந்த யுத்தத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டு, அடக்கி, முடுக்கப்படும் தமிழினத்தின் பால் அதற்குப் பரிதாபமும், பச்சாதாபமும், தமிழினத்தை அரவணைக்கும் பற்றும் பிறக்க வேண்டும். ஆனால் யதார்த்தத்தில் நிலைமை அதுவல்ல என்பதே வெளிப்படை.

யுத்த வெற்றிகளைத் தமிழர்களின் வர்த்தக நிலையங்களின் முன்னால் ஆர்ப்பாட்டமாக வெடி கொளுத்திப்போட்டு, எதிரி நாட்டை மண்கவ்வ வைத்து ஆக்கிரமித்த புளங்காகிதத்தோடு கொண்டாடும் போக்கே தென்னிலங்கையில் காணப்படுகின்றது. இந்த வெற்றியின் பின்புலத்தில் சிங்களத்தின் அடக்குமுறை ஆணவத் திமிர் பீறிட்டு வெளிப்படுவதை நோக்கும் போது, இந்த இராணுவச் சமரின் முடிவு தமிழர்களின் அடிமைப் பட்டயத்தில் நிரந்தரக் குறியைப் பொறிக்கப் போகின்றது என்ற அச்சம் தமிழர்களுக்கு ஏற்படுகின்றது.

இத்தகைய பேரச்சத்தின் விளைவே, தமிழகத்திலும் ஈழத் தமிழர் தொடர்பான இத்துணை கிளர்ச்சிக்குக் காரணமாகும்.

பொதுவாகத் தமிழகத்தில் அரசியல் சார்ந்த போக்கைத் தீர்மானிக்கின்ற அரசியல் தலைமைகள், அரசியல்வாதிகள், அவர்களோடு நெருங்கிய கட்சிக் கட்டமைப்புகள் போன்ற தரப்புகளின் பிடியிலிருந்து ஈழத் தமிழர் விவகாரத்தை வழிநடத்தும் - அல்லது கையாண்டு தீர்மானிக்கும் - பொறுப்பு, மெல்ல மெல்ல, தமிழக இளம் சமுதாயத்திடம் - குறிப்பாக மாணவ சமூகத்திடம் - கைமாறி வருவது நோக்கற்பாலது.

தமிழ்நாட்டில் கட்சிச் சாயங்கள், சார்பு நிலைகள், கருத்துப் போக்குகள், கொள்கை நிலைப்பாடுகள் போன்றவற்றைக் கடந்து இளம் சமுதாயம் இப்பிரச்சினையை ஒட்டி 'கெம்பி' எழுந்திருப்பதால் நிச்சயம் இந்த விடயம் மாநில, மத்திய அரசுகளுக்கு நெருக்கடியைத் தரப் போகின்றது என்பதும் துலாம்பரம்.

ஈழத் தமிழரைக் காப்பாற்றக் கோரி - இலங்கையில் விரைந்து யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்த வலியுறுத்தி - கட்சிகளும், அவை சார்ந்த கூட்டமைப்புகளும் நடத்தும் ஆர்ப்பாட்டங்கள், கண்டனப் பேரணிகள், பொதுக் கூட்டங்களுக்கு அப்பால் மாணவர்கள் - குறிப்பாகப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் இளநிலை மாணவர்கள் - ஒன்று திரண்டு நடத்தும் உண்ணாவிரதங்கள், வகுப்பு பகிஷ்கரிப்புகள், மௌனப் போராட்டங்கள் போன்றவைதான் மாநில அரசைப் பெரும் பீதிக்குள்ளாக்கியிருக்கின்றன.

மாணவர் சமூகத்தின் எழுச்சி எத்தகைய நெருக்கடிகளையும், விளைவுகளையும் தரக்கூடியது என்பது தமிழக அரசியலில் 'பழமும் தின்று கொட்டையும் போட்ட' முதிர்ந்த அரசியல் சாணக்கியரான தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு நன்கு தெரியும்; புரியும்.

அதுதான் நேரத்துடன் உஷாராகி, கல்லூரிகள், பள்ளிகளை மூடவும், விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்களை வீடுகளுக்கு அனுப்பவும் விரைந்து நடவடிக்கை எடுத்தார் கலைஞர் கருணாநிதி.

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகப் பெருக்கெடுக்கும் இளம் சமூகத்தின் உணர்ச்சி வெள்ளத்தை, அணை போட்டு மறைக்கும் தமிழக முதல்வரின் எத்தனம் பயன்தருமா? அல்லது அடித்துப் பீறிட்டு, கரைபுரண்டு ஓடிவரும் அந்த உணர்ச்சி வெள்ளத்தில் கலைஞரின் அரசியல் எதிர்காலமும் அடிபட்டுப் போகுமா? காலம் தான் பதில் கூறும். ஆனால் அதற்கும் நீண்ட காலம் பிடிக்கப் போவதில்லை என்பதும் உண்மை.

# வன்னியில் வாழும் எமது உறவுகள் சுதந்திரமாக வெளியேறுவதற்கு புலிகள் அனுமதிக்கவேண்டும்

## ஈ.பி.டி.பி. வலியுறுத்துகிறது

யாழ்ப்பாணம்,பெப்.3

வன்னி வாழ் எமது உறவுகள் சுதந்திரமாக வெளியேறுவதற்கு விடுதலைப்புலிகள் அனுமதிக்க வேண்டும் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வலியுறுத்தி உள்ளது.

இது தொடர்பாக அக் கட்சி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எமது மக்கள் தாம் விரும்பிய இடங்களுக்கு சுதந்திரமாக வெளியேறிச் செல்வது என்பது அவர்கள் கொண்டிருக்க வேண்டிய ஜனநாயக உரிமை. மனித உயிர்களின் விருப்பங்களுக்கு விரோதமாகவும், மனச்சாட்சிகளுக்கு மாறாகவும் வன்னியில் வாழும் எமது உறவுகளை புலித்தலைமை சுயலாப இருப்புக்காக தமது பலாத்கார பிடிக்குள் தொடர்ந்தும் சிறைவைத்திருக்கின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வன்னியில் புலித் தலைமையின் பலாத்காரச் சிறைக்குள் சிக்கியிருக்கும் எமது மக்களை அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருவதற்காக 48 மணிநேர அவகாசத்தினை வழங்கி யிருந்தார். இதன் மூலம் தமது நல் லெண்ண சமிக்ஞையை ஜனாதிபதி காட்டியிருந்தமை மிகவும் வரவேற்கத் தக்க விடயமாகும்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வரும் பொது மக்களின் பாதுகாப்பும், சுதந்திரமும், அமைதியான வாழ்வும், உரிமைகளும் உறுதிசெய்யப்படும் எனவும் நம்பிக்கை கொடுத்து ஜனாதிபதி விடுத்திருந்த கால அவகாசத்தை இந்தியாவும் வரவேற்றிருந்தது.

ஆனாலும், மக்களின் உயிர்களை விடவும் தமது சுயலாப இருப்பையும், தமது சொந்த உயிர் பாதுகாப்பையும் முதன்மைப்படுத்தும் புலித்தலைமை இந்த 48 மணிநேர கால அவகாசத்தை எமது மக்களுக்காக பயன்படுத்தி இருக்கவில்லை. இதனால் எமது மக்கள் மிகவும் மனத்துயரங்களோடு கலங்கி நிற்கிறார்கள்.

வன்னியில் தமது உறவுகளுக்கு என்ன ஆகுமோ என்ற ஏக்கங்களோடு வன்னிக்கு வெளியிலும், புலம்பெயர் நாடுகளிலும் வாழும் எமது மக்கள் ஊண், உறக்கமின்றி தேய்ந்து கொண்டு இருக்கின்றார்கள்.

எமது மக்களின் மன உணர்வுகளுக்கு மதிபளிக்காத புலித் தலைமை தொடர்ந்தும் வன்னி வாழ் எமது உறவுகளை மனிதக் கேடயங்களாகவே பயன்படுத்தி வருகின்றது. அது மட்டுமன்றி வன்னி மக்களின் மன விருப்பங்களுக்கு மாறாக அவர்களைத் தாம் தடுத்து வைத்திருக்கவில்லை என்ற பொய்யான பரப்புரைகளையும் மேற்கொண்டு வருகின்றது.

1995 இல் யாழ்.குடாநாட்டை விட்டு ஓடிப்போன புலித்தலைமை தமது சொந்தப் பாதுகாப்பிற்காக யாழ்.குடாநாட்டு மக்களையும் தம்மோடு வருமாறு வற்புறுத்தி, அச்சுறுத்தி இருந்த வரலாற்றை யாரும் மறந்து விடப் போவதில்லை.

மீண்டும் வன்னியில் இருந்து யாழ். குடாநாடு நோக்கி திரும்பி வர விருந்த மக்களின் சுதந்திரமான வெளியேற்றத்தை புலித்தலைமை தடுத்து நிறுத்தியிருந்தமையும் மறக்க முடிந்த வரலாறல்ல.

மனச்சாட்சிக்கு மதிப்பளித்து, மனிதாபிமான அடிப்படையில் வன்னி வாழ் மக்கள் வெளியேற புலித்தலைமை அனுமதிக்க வேண்டும் என்பதை நாம் தெரியப்படுத்துகின்றோம். அதற்கான அழுத்தங்களை அனைத்து மனிதநேய அமைப்புகளும், எமது அயலக நட்பு நாடாகிய இந்தியாவும், சர்வதேச சமூகமும் விடுதலைப்புலிகள் மீது பிரயோகிக்க வேண்டும் என நாம் எமது வன்னி வாழ் உறவுகளின் சார்பாக மனிதாபிமான வேண்டுகோள் விடுக்கின்றோம் - என்று உள்ளது. (அ)

# பாதுகாப்பு செயலாளர் வெளியிட்ட கருத்தினால் இராஜ தந்திர வட்டாரங்களில் பெரும் பரபரப்பு

கொழும்பு, பெப்.3

ஜேர்மனி, சுவிற்ஸர்லாந்து தூதுவர்கள் மற்றும் பிரபல சர்வதேச நிறுவனங்களின் ஊடகவியலாளர்கள் தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வெளியிட்ட கருத்துக் காரணமாக இராஜ தந்திர வட்டாரங்களில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

''விடுதலைப் புலிகளைக் காப்பாற்றும் வகையில் பொறுப்புணர்வற்ற விதத்தில் செயற்படும் இராஜதந்திரிகள், செய்தி நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அவர்கள் நாட்டை விட்டு வெளியேற்றப்படுவார்கள்'' எனப் பாதுகாப்புச் செயலர் ஆங்கில வார இதழொன்றுக்குத் தெரிவித்திருந்தார்.

இந்தச் செய்தி நேற்றைய உதயனிலும் வெளியாகி இருந்தது.

பாதுகாப்புச் செயலாளர் பெயர் குறிப்பிட்டு மிகவும் உறுதியான தொனியில் தெரிவித்த கருத்துகள் தொடர்பான அரசின் நிலைப்பாட்டை அறிவதற்கு இராஜதந்திர வட்டாரங்களும் ஊடக நிறுவனங்களும் தீவிர முயற்சியை மேற்கொண்டன. பாதுகாப்பு செயலாளரை தொடர்பு கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் பலனளிக்கவில்லை எனத் தகவல்கள் வெளியாகின.

இதேவேளை, அரசு இது குறித்த தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி அறிக்கையொன்றை வெளியிடவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வன்னியிலிருந்து சர்வதேச மனிதாபிமான அமைப்புகள் வெளியேற்றப்பட்டமை மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான தொடர் அச்சுறுத்தல்களின் பின்னணியில் பாதுகாப்புச் செயலாளரின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளமை இராஜதந்திர வட்டாரங்கள் மத்தியில் பதற்றத்தை உண்டு பண்ணியிருந்தது.

# அரியாலையில் 'கோப்சிற்றி' அமைப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப்.3

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அரியாலைப் பிரதேச மக்களின் நலன் கருதி 'கோப்சிற்றி' ஒன்றை விரைவில் அமைக்கவுள்ளது.

சங்கத்தின் கிளை விற்பனை நிலையம் ஒன்று செயற்பட்டு வரும் கட்டடத்தை மீளப் புனரமைப்புச் செய்து இந்தக் 'கோப்சிற்றி' அமைக்கப்படவுள்ளது.

சங்கத்தின் நிதியில் இருந்து ஆரம்பிக்கப்படும் 'கோப் சிற்றி' முழுமையாக நவீன வசதிகளைக் கொண்டதாக அமைக்கப்படவுள்ளதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த 'கோப்சிற்றி' மூலம் அரியாலை பிரதேச மக்கள் பெரிதும் நன்மையடைவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (50-224)

## மாவைக் கந்தன் ஆலயத்தில் தைப்பூசத் திருவிழா ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப்.3

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் தைப்பூசத் திருநாள் பூசைகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெறும் என்று ஆலய ஆதீன கர்த்தாவும் பிரதம குருவுமான மஹாரஜஸ்ரீ சு.து.சண்முகநாதக்குருக்கள் தெரிவித்தார்.

காலையில் 7 மணியளவில் விசேட அபிஷேகம் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து விசேட அலங்கார பூசைகளும், அர்ச்சனைகளும் நடைபெற உள்ளன. முற்பகல் 10 மணிக்கு முருகப் பெருமான் வீதி உலா வருவார். அதன் பின்னர் மகேஸ்வர பூசை நடைபெறும்.

அடியார்கள் ஆலயத்துக்குச் சென்று வர தெல்லிப்பழை சோதனை நிலையத்திலிருந்து விசேட வாகன சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஆதீனகர்த்தா அறிவித்துள்ளார். (அ)

## நாளை

| | |
|---|---|
| தை 22 | 04.02.2009 |
| | புதன்கிழமை |
| திதி: | நவமி |
| | மு.ப.10.35 வரை |
| நட்சத்திரம்: | கார்த்திகை |
| | மு.ப.11.24 வரை |
| சுபநேரம்: | 05.05 - 06.35 |
| ராகுகாலம்: | 12.35 - 02.05 |

# வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் சிறுபோகச் செய்கை அறுவடை ஆரம்பம்

மானிப்பாய்,பெப்.3

வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட நவாலிப் பகுதியில் சிறுபோக நெற்செய்கையின் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நெல் அறுவடை இடம்பெற்ற பகுதிகள் ஈரலிப்பாக உள்ளதனால் மேட்டு நிலப்பகுதிகளில் வைத்தே சூடுமிதிக்கப்படுவதாக அறுவடை பகுதி விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

அடுத்தமாத பிற்பகுதியில் இருந்து பெரிய இனங்களின் அறுவடைகள் ஆரம்பிக்கப்படவுள்ள தாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில் - அறுவடையின் பின்னர் அனைத்து விவசாயிகளும் சிறுதானியப் பயிர்ச்செய்கைகளில் ஆர்வம் காட்ட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் அறுவடையின் பின் கடும் வரட்சி நிலவியதால் எள்ளு, பயறு, கௌபி செய்கைகள் வெற்றியளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (203-95)

## கூரைத் தகடுகள் வந்துசேர்ந்தன

யாழ்ப்பாணம்,பெப்.3

தென்மராட்சிப் பிரதேசத்தில் உலக வங்கியினால் மேற்கொள்ளப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டப் பயனாளிகளுக்கு வழங்கவென கூரைத் தகடுகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இதுவரை கூரைவேலை பூர்த்தி செய்தவர்களுக்கு கூரைத் தகடுகள் விநியோகிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-207)

# மரக்கறிகளின் விலைகள் மீண்டும் உயர்வடைந்து செல்கின்றன

யாழ்ப்பாணம், பெப்.3

மரக்கறிகளின் விலைகள் மீண்டும் உயர்வடைய ஆரம்பித்துள்ளன.

திருமண வைபவங்கள், சுபகாரியங்கள் ஆகியவை தற்போது அதிகளவில் இடம்பெறுகின்றமை காரணமதகவே இந்த விலை உயர்வு என சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஒரு கிலோ கத்தரிக்காய் 240 ரூபாவாகவும், கோவா 110 ரூபாவாகவும், பயிற்றங்காய் 120 ரூபாவாகவும், தக்காளிப்பழம் 220 ரூபாவாகவும், போஞ்சி 100 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது. பச்சை மிளகாய் ஒரு கிலோ 400 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. (203-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரவெட்டியில் அம்புலன்ஸ் சேவை

யாழ்ப்பாணம்,பெப்.3

கரவெட்டிப் பிரதேச வைத்தியசாலையால் அம்புலன்ஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டிப் பிரதேச வைத்தியசாலைக்கு சுகாதாரத் திணைக்களத்தால் அம்புலன்ஸ் வண்டியொன்று வழங்கப்பட்டுள்ளது.

சாரதிகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் உடனடியாக இவ்வைத்தியசாலைக்கு முழுநேர சாரதியை நியமிக்க முடியவில்லையென்று தெரிவிக்கப்பட்டது. எனினும் இரவுக் கடமைக்கென சாரதி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளார்.

இரவுவேளைகளில் அவசர நோயாளர்களை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே இப்பிரதேச மக்கள் இவ்வைத்தியசாலையை நாடி இச் சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம் என்று என்று பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (203)

## அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு

யாழ்ப்பாண பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தினால் 28.01.2009 புதன்கிழமை அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு நடத்தப்பட்டது. இதில் பரிசுக்குரிய சீட்டிலக்கங்களின் விவரம் வருமாறு:

| பரிசு | | சீட்டை இல. |
|---|---|---|
| 1ஆம் பரிசு | - | 632 |
| 2ஆம் பரிசு | - | 2004 |
| 3ஆம் பரிசு | - | 134 |

ஆறுதல் பரிசுகள் (10)
2954, 3174, 2724, 211, 2104, 1768, 2292, 2343, 2148, 2033.

*மேற்படி பரிசுக்குரிய அதிஷ்டசாலிகள் 03.02.2009 அன்று மு.ப. 10.30 மணிக்கு யாழ்.பிரதேச செயலகத்திற்கு குறிப்பிட்ட சீட்டுத்துண்டுடனும், அடையாள அட்டையுடனும் சமுகம்தந்து பரிசில்களைப் பெற்றுச்செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

செயலாளர்,
நலன்புரிச் சங்கம், யாழ்.பிரதேச செயலகம்.

(82413)

## வீட்டுக் கிருத்திய அழைப்பு



செல்வன் கோணேசன் சுஜீவன்

தோற்றம்
21.08.1989

மறைவு
21.01.2009

கடந்த (21.01.2009) அன்று இறைவனடி சேர்ந்த எமது மகன் செல்வன் கோணேசன் சுஜீவன் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் (05.02.2009) வியாழக்கிழமை மு.ப.11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
கோணேசன் *(தந்தை)*, சுசிலாதேவி (தாய்),
நாதஸ்வர வித்துவான்
R.சிவகுமார் *(மாமா)*.

வழக்கம்பரை,
தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.

*(82411)*

### வாராந்த சொற்பொழிவு

வடமராட்சி,பெப்.3

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த ஆன்மீக நிகழ்வு வரிசையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ''இ'' என்னும் தலைப்பில் சைவப்புலவர், பண்டிதர் பொன். சுகந்தன் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

இந்நிகழ்வு பேரவைத் தலைவர் கே.அருள்லிங்கம் தலைமையில் நடைபெறும்.

(203-236)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை - அறிவித்தல்

### பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான அனுமதிப் பரீட்சை

31.01.2009 அன்று நடைபெறவிருந்த ஈராண்டு பட்டப்பின் கல்வி டிப்ளோமா (பகுதிநேரம் - 2007/09), பட்டப்பின் கல்வி டிப்ளோமா (முழுநேரம் - 2007/08) ஆகிய கற்கை நெறிகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான அனுமதிப்பரீட்சை 07.02.2009 சனிக்கிழமை மு.ப. 9.30 தொடக்கம் பி.ப.12.30 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

விண்ணப்பதாரிகள் ஏற்கனவே தபால் மூலம் பெற்ற பரீட்சை அனுமதி அட்டையுடனும், தேசிய அடையாள அட்டையுடனும் பரீட்சைக்குத் தோற்றுமாறு வேண்டப்படுகின்றனர்.

மேலதிக விவரங்களுக்கு 0212226714 தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

பதில் பதிவாளர்

(சி/557016)

## சட்டதரணிகளாகிட !

### சட்டக் கல்லூரி நுழைவுப் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி வகுப்புகள்

இவ்வருடம் ஆனி மாதம் நடைபெற இருக்கும் சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கான வழிகாட்டி வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளது. போட்டிப் பரீட்சையில் தேர்ச்சி பெறுபவர்கள் 2012 இல் சட்டத்தரணியாக வெளியேற முடியும். பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டு சட்டத்தரணியாக உருவாக ஆர்வம் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சட்டக்கல்லூரி நுழைவுப்பரீட்சைக்கான வழிகாட்டி வகுப்புகளை கொழும்பில் நடாத்தி வரும் அனுபவமிக்க, பல சட்டத்தரணிகளை கடந்த வருடங்களில் உருவாக்கிய, சட்டத்தரணிகள், சட்டக்கல்லூரி விரிவுரையாளர்கள், பல்கலைகழக விரிவுரையாளர்கள் மற்றும் சட்டக்கல்லூரி மாணவர்கள் இணைந்து இவ் வழிகாட்டல் வகுப்புகளை நடாத்த உள்ளார்கள்.

**சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் வழிகாட்டி வகுப்புகள் நடாத்தப்படும்.**

**அடிப்படை தகைமைகள்**

- க.பொ.த (சாதாரண) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் தமிழ்/சிங்களம் திறமைசித்தி (C) உடன்.
- க.பொ.த (உயர்தர) பரீட்சை பழைய பாடத்திட்டம் ஆயின் 4 பாடங்களில் சித்தி, புதிய பாடத்திட்டம் ஆயின் 3 பாடங்களில் சித்தி.
- வயதெல்லை கிடையாது.

வழிகாட்டி வகுப்புக்கான விண்ணப்பங்கள் 15.02.2009 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

இவ்விடயம் தொடர்பான இலவச விழிப்புணர்வுக் கருத்தரங்கு 07.02.2009 ( சனிக்கிழமை) அன்று மு.ப 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது. சட்டத்துறையில் ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொள்ளலாம்.

கீழ் குறிப்பிடும் முகவரியில் 06.02.2009 முன் தங்கள் ஆசனங்களை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

ACADEMY FOR LEGAL ENVIRONMENT,
No: 01, Brown Road, Navalar Road Junction,
Jaffna.

Tell : 021-222-7646
E.Mail : afle@gmail.com


# யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வ.து

கொழும்பிலிருந்து விமானம் மூலம் எடுத்துவரப்பட்டு எமது கூட்டுறவு நகர் 1, 2 கிளை நிலையங்களில் பின்வரும் பொருள்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன

Co-op City
கூட்டுறவு நகர்

**எலிபென்ட் ஹவுஸ் ஐஸ்கிறீம் வகைகள்**
**ELEPHANT HOUSE ICE CREAM**

**பழ வகைகள்**
**FRUIT ITEMS**
APPLE (TOP RED)
ORANGE





**மாசிக் கருவாடு**
**MALDIVES FISH**
100g - 150/-
50g - 75/-

**பிறிமா கோழி இறைச்சி**
PRIMA WHOLE CHICKEN
1kg - 580



**கோழிப் பாகங்கள்**
**CHICKEN PARTS**

| | |
|---|---|
| Liver | 600/- |
| Drumsticks | 700/- |
| Gizzard | 670/- |
| Whole Leg | 675/- |
| Neck | 530/- |
| Chicken Bourn in Thigh | 670/- |
| Back Quarter | 645/- |

**பிறிமா சொசேஜஸ்**
PRIMA CHICKEN SAUSAGE
150g - 225/-
250g - 295/-



**குறிப்பு:**

இந்த இறைச்சிப் பொதிகள் கொழும்பிலிருந்து விமானம் மூலம் உடனுக்குடன் தருவிக்கப்பட்டு குளிரூட்டிகள் மூலம் பாதுகாக்கப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

வைபவங்கள் மற்றும் விசேட நிகழ்வுகளுக்கு மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு கொள்வனவு செய்யும் தொகைக்கேற்ப விசேட கழிவு வழங்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி யுத்த நடவடிக்கைகளால் சிறுவர்களே அதிகளவில் பாதிப்பு

## ஐ.நா.ஆழ்ந்த கவலை

கொழும்பு, ஜன.3

வன்னியில் இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான மோதல் காரணமாக சிறுவர்கள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றமை குறித்து ஐக்கிய நாடுகளின் அமைப்புகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

அதிகளவு சிறுவர்கள் கடந்த 10 நாட்களில் மோதல்கள் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரு சில மாதங்களே ஆன குழந்தைகளும் உள்ளன என யுனிசெவ் அமைப்பின் பேச்சாளர் ஜேம்ஸ் எல்டெல் அல்-ஜசீரா தொலைக்காட்சிச் சேவைக்குத் தெரிவித்தார்.

இவ்வாறு மோதலில் காயமடைந்த 50 சிறுவர்களை ஐக்கிய நாடுகள் சபை வன்னியிலிருந்து அழைத்து வந்தது. அவர்களது உடல்களில் குண்டுச் சிதறல்களும் எரிகாயங்களும் காணப்பட்டன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சிறுவர்கள் மோதல்களின் நடுவில் சிக்கியுள்ளனர்; மிகுந்த ஆபத்தில் உள்ளனர் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

மோதல்கள் காரணமாக ஏற்பட்ட காயங்கள் காரணமாக கை, கால்கள் துண்டிக்கப்பட்ட பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் பலரை தாம் கண்டார் என்று எல்லையற்ற மருத்துவர்கள் அமைப்பின் மருத்துவ ஒருங்கிணைப்பாளர் லிசாடெத்லிடை தெரிவித்தார்.

இரு கைகளும் துண்டிக்கப்பட்ட இளஞ் சிறார்களைக் கண்டேன். மந்தபோசனையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைக் கண்டேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(சி)

# வன்னியிலிருந்து வருவோருக்காக வவுனியாவில் மூன்று கிராமங்கள்

## அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தகவல்

கொழும்பு, ஜன.3

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வரும் மக்களைத் தங்கவைப்பதற் காக வவுனியாவில் மூன்று கிராமங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன என்று மீள்குடியேற்ற அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியாவுக்கு வரும் மக்களைத் தங்க வைத்து அவர்களுக்குத் தேவையான உணவுப்பொருள்கள் மற்றும் மருந்துப் பொருள்கள் ஆகியவற்றை நாம் வழங்கி வருகின்றோம்.

தற்போது அதிக எண்ணிக்கையிலான மக்கள் வவுனியா மெனிக்பார்மிலும் நெலுக்குளத்திலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து இடம்பெயர்ந்து வரும் மக்களைத் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை நாம் செய்துகொண்டு வருகிறோம்.

அந்த வகையில் வவுனியாவில் மூன்று தற்காலிக கிராமங்கள் அமைக்கும் பணியில் நாம் ஈடுபட்டுள்ளோம்.

இடம்பெயர்ந்து வரும் மக்கள் மீண்டும் அவர்களின் சொந்த இடங்களுக்குத் திரும்பும் வரை இந்தக் கிராமங்களில் தங்கவைக்கப்படுவார்கள். அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் மருந்துப்பொருள்களை அரசு தொடர்ந்து வழங்கும் - என்றார். (சி)

## தையல் பயிற்சிப் பாடசாலை திறப்பு

வடமராட்சி,பெப்.3

வடமராட்சி செவிப்புலனற்றோர் சங்கத்தின் தையல் பயிற்சிப் பாடசாலைத் திறப்பு விழா எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதியில் உள்ள சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டு பெயர்ப்பலகையும் பயிற்சி நிலையத்தையும் திறந்து வைப்பர்.

இத்தையல் பயிற்சி நிலையத்திற்கு சமூகசேவைகள் அமைச்சின் உதவியுடன் கரவெட்டிப் பிரதேச செயலர் தளபாடங்களையும், பருத்தித்துறை பிரதேச செயலர் 4 தையல் மெஷின்களையும் வழங்கியுள்ளனர்.

(203-236)

# வாசகர் திருமுகம்

## எரிபொருள் விற்பனை நிலையத்திலும் கூடிய விலையில் பெற்றோல் விற்பனை

வலி.தென்மேற்கில் இயங்கிவரும் எரிபொருள் நிலையம் ஒன்றில் ஒரு லீற்றர் பெற்றோல் ரூ.135/= ஆக விற்பனை செய்யப்படுகின்றது.

இந்நிலையம் அமைந்துள்ள வளவினுள் வைத்தே இந்த விலைக்குப் பெற்றோல் விற்பனையை நிலைய உரிமையாளர் மேற்கொண்டு வருகிறார்.

காரணம் கேட்டால், பெற்றோலை, மின்சாரம் இல்லாத காரணத்தால், 'பம்ப்' பண்ணி எடுக்க முடியவில்லை, எனக் கூறுகிறார்.

நடைபாதை, மற்றும் தனியார் கடைகளில் ரூபா 135/= முதல் ரூ 140/= வரை பெற்றோல் வாங்கக் கூடியதாக இருக்கும்போது, எரிபொருள் நிலையத்திலும் இவ் விலைக்கு பெற்றோல் வாங்க வேண்டியுள்ளதாகப் பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த நடவடிக்கையை தடுத்து நிறுத்துபவர்கள் எவருமில்லையா என்று பெற்றோல் பாவனையாளர்கள் கேட்கிறார்கள்.

*சங்கானை.* *ஒரு வாகனப் பாவனையாளர்.*

## பாராட்டுக்குரிய செயற்பாடு


நான் நல்லூர் பிரதேசத்தில் ஒரு சாதாரண பொது மகன். கடந்த 01.01.2009 அன்று காலை நல்லூர் - பிரதேச செயலக நிதிக் கிளைக்கு வாகன வரி செலுத்துவதன் பொருட்டு சென்றிருந்தேன். அலுவலகத்தின் உள்ளே சென்ற நான் ஐந்து அல்லது ஆறு நிமிடங்களில் வெளியே வந்து விட்டேன். ஏனெனில் எனது தேவை அந்த நிமிடங்களிலேயே பூர்த்தி செய்யப்பட்டுவிட்டது.

நல்லூர்ப் பிரதேச செயலகத்தின் நிதிக் கிளையில் இதற்கெனவே ஐந்து அலுவலர்களிடம் அதற்கான பொறுப்புகளும், அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கையானது பொது மக்கள் தமது ஆவணங்களைச் சரிவர சமர்ப்பிக்கும் பட்சத்தில் ஐந்து அல்லது ஆறு நிமிட நேரங்களில் தமது தேவையை நிறைவேற்றிக் கொண்டு வெளியேற வழி சமைத்துள்ளது. இவ்வாறே சராசரியாக ஆகக் கூடியது ஒவ்வொரு ஒன்றரை அல்லது இரண்டு நிமிடங்களில் ஒவ்வொருவர் வெளியேற முடிகின்றது. ஒருவர் தனது தேவையை ஒரு சில நிமிடங்களில் அடையும் போது வீணான நெருக்கடிகளும் நேர விரயமும் தவிர்க்கப்படுகின்றது. அத்துடன் அலுவலர்களிடம் கடமைகளை பகிர்ந்தளித்துள்ளதாலும் அதிகாரங்களை பரவலாக்கியதாலும் அலுவலர்களும் மனச்சோர்வின்றி முழுமனத்துடன் கடமை புரிவதனை அவதானிக்க முடிந்தது.

இது வெறும் புகழ்ச்சியன்று. என் போன்று அதே அலுவலகத்திற்குச் சென்று வந்தவர்கள் கூறும் போது இதன் உண்மைத்தன்மையை உணரலாம். இது பிரதேச செயலகங்களுக்கு மட்டுமன்றி அனைத்து அரச அலுவலகங்களுக்குமே முன்னோடியான ஒரு செயற்பாடாக அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

*திருநெல்வேலி.* [illegible]

# வங்கிகள் மற்றும் காப்புறுதி நிறுவனங்களில்...



மக்கள் வங்கி சுன்னாகம் கிளையின் புதுவருடக் கொண்டாட்டமும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் வங்கி மண்டபத்தில் உதவி முகாமையாளர் சு.இராசமனோகரன் தலைமையில் நடைபெற்றது.

அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற ஜயஸ்ரீ சீட்டிழுப்பில் பரிசில் பெற்ற அப்பாத்துரைக்கு குளிர்சாதனப் பெட்டியை நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் வழங்குவதையும் அருகில் கிளை முகாமையாளர் மா.சந்திரகாந்தன், உதவி முகாமையாளர் சு.இராசமனோகரன் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.



இலங்கை வங்கியின் வட மாகாண செயற்பாட்டு முகாமையாளராக அண்மையில் பொறுப்பேற்ற ஆர்.ஜெயேந்திரா, புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட 'ஸ்மாட் இன் வெஸ்ரர்' கணக்கை திருநெல்வேலி கிளையில் ஆரம்பித்து வைத்து வாடிக்கையாளர் ஒருவருக்கு வைப்புச் சான்றிதழ் வழங்குகின்றார். அருகில் கிளை முகாமையாளர் ஈ.பிரேமராஜனும் காணப்படுகின்றார்.




'நிஷா' புயல் மற்றும் வெள்ளத்தால் சேதமடைந்த வாகனமொன்றுக்குக் காப்புறுதி தொகையை ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் வழங்கியுள்ளது.

வாகனத்தின் உரிமையாளர் ஜெயராஜசிங்கத்திடம் காப்புறுதி நிறுவனத்தின் பிரதிநிதி இழப்பீட்டுத் தொகை வழங்குவதைப் படத்தில் காணலாம்.



அண்மையில் விபத்தினால் மரணமான காரைநகரைச் சேர்ந்த சண்முகநாதனுக்கு யூனியன் அஸூரன்ஸ் நிறுவனத்தினர் ஆயுள் காப்புறுதித் தொகையை வழங்கியுள்ளனர்.

காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலயத்தில் கற்கும் காப்புறுதியாளரின் பிள்ளைகளிடம் வித்தியாலய அதிபர் எஸ்.கணேசமூர்த்தி காப்புறுதித் தொகையை வழங்குகிறார். அபிவிருத்தி முகாமையாளர் கோ.சிறீவரதனும் உத்தியோகத்தர்களும் அருகில் நிற்பதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
22 ✱ 11 ✱ 1975



இறப்பு
04 ✱ 01 ✱ 2009

### ஜீவாகரன் குணாளினி (குணா)

பேச்சினிலே இனிமை கொண்டாய்
பார்வையிலே கனிவு கொண்டாய்
பழகியவர் மனதிலெல்லாம்
பண்புடையவள் என்றானாய்
பூமியிலே வாழ்ந்த நாள்கள்
போதுமென்று நினைத்தாயோ
விதி வந்து விளையாட
எம்மையெல்லாம் கலங்க வைத்து
உந்தன் பூவிழிகள் மூடியதேன்.

(82348)

தியேட்டரடி, சங்கானை.
தகவல்:
குடும்பத்தினர்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
11 ✱ 09 ✱ 1973

உதிர்வு
21 ✱ 12 ✱ 2008

### அமரர் கல்பனா சுகந்தன்

நேற்று வரை கூடியிருந்து
படுத்துறங்கி ஊனுண்டு வீற்றிருந்தீர்!
அம்மாவாய், அக்காவாய்
அன்புத் தங்கையாய், மகளாய், மனைவியாய்
எல்லோர்க்கும் எல்லாமாய்
கூற்றுவன் வரும் வழி - நேரம்
கூறுதற்கு யாருளார்
நேற்றுப்போல் இன்றும் நாளையும்
என்றென்றும் எவ்வேளையும்
எம்மோடு தானென்று நீங்களும்
நாங்களும்
நம்பிய வேளையிலே
கணப்பொழுதில் காலன் வந்து கதை
முடித்துப் போனதென்ன
உங்களின் நினைவு சுமந்த
காற்றினையே
சுவாசிக்கும்.....

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட மற்றும் தொலைபேசி, தந்திமூலம் ஆறுதல் தெரிவித்த அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

1A,9, சொய்சாபுர,
மொரட்டுவ,
011-2623146
(சி/556991)
குடும்பத்தினர்.
4A, West Gardens,
London.

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கமணி பழனிச்சாமி

இல.115, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது பிரான்சில் வசித்து வந்த திருமதி தங்கமணி பழனிச்சாமி 01.02.2009 அன்று பிரான்சில் சிவபதமடைந்தார்.

அன்னார் அமரர் நல்லதம்பி பழனிச்சாமியின் அன்பு மனைவியும், அமரர் இராசையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் அமரர் நல்லதம்பி - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும் தயாபரன்(லண்டன்), பத்மசுந்தரி (பிரான்ஸ்), தயானந்தன் (பிரான்ஸ்), பிரேமலதா(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் மதசாலினி, சின்னராசா, மகேந்திரன், தர்ஷினி ஆகியோரின் அன்பு மாமியாரும் அமரர் கதிரவேற்பிள்ளை மற்றும் பஞ்சாட்சரம், பாலசுந்தரம் (கொழும்பு), சிவகங்கை (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் சுப்பிரமணியம், இரத்தினகோபால் மற்றும் சுந்தரலட்சுமி, லீலாவதி, நாகேஸ்வரி (பத்மா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், நிருஷன், சிவஜன், சுகிர்தன், இந்துகா, இந்திரப்பிரதாபன், சுமுகன், சுகந்தன், சிந்தூரா, லக்ஷனா, அபிதேஷ், திபீஷனா, சுபீக்ஷா, நிபிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(03.02.2009) பிரான்சில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சகோதரர்கள்
S.R.பஞ்சாட்சரம் (கடுக்கன்) T.P:6852
S.R.பாலசுந்தரம் (கொழும்பு) T.P:112503237

தொலைபேசி:
ப.தயாபரன் (மகன்) 00442083370755 (லண்டன்)
ப.தயானந்தன் (மகன்) 0033634021237 (பிரான்ஸ்)
சி.பத்மசுந்தரி (மகள்) 0033147060814 (பிரான்ஸ்)
ம.பிரேமலதா (மகள்) 00442082869153 (லண்டன்)

## கண்ணீர் அஞ்சலி

### ஆறுமுகம் நவநீதகிருஸ்ணன்

அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மசாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

(82406)

95, ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தகவல்:
பூ.துவாகரன் (போகா).

## கிணறுகள் இறைக்கும் பணிக்கு மக்கள் சிறப்பாக ஒத்துழைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.3

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிணறுகள் இறைத்து சுத்தம் செய்யும் பணிகளுக்கு மக்களின் ஒத்துழைப்பு சிறந்த முறையில் உள்ளது என உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் தெரிவித்தார்.

குடாநாட்டில் குறைந்தது நாள் ஒன்றிற்கு ஐந்திற்கும் மேற்பட்ட கிணறுகள் இறைத்துச் சுத்தம் செய்யப்பட்டு வருகின்றன. இந்தப் பணிக்கு மக்களின் ஒத்துழைப்பு சிறப்பாக உள்ளது.

விவசாயக் கிராமப் பகுதியில் உள்ள மக்களின் கிணறுகள் இறைக்கும் பணிகள் மந்த கதியிலேயே இடம்பெற்று வருகின்றன.

விவசாயத் தேவைக்கு பயன்படுத்தப் படும் நீரிறைக்கும் இயந்திரத்தைக் கொண்டு தத்தம் கிணறுகளை அவர்கள் தாமே இறைத்துச் சுத்தம் செய்வதே இதற்குக் காரணம்.

இந்தக் கிணறு இறைப்புப் பணிகள் குறைந்த கட்டணத்திலேயே நடைபெற்று வரு கின்றது என்றும் அவர் தெரிவித்தார். (202-224)

## நவாலி மகாவித்தியாலயத்தில் புதிய சமையலறை திறக்கப்பட்டது

மானிப்பாய்,பெப்.3

நவாலி மகாவித்தியாலயத்தில் சமையல் பகுதிக்கென பிரத்தியேக அறை சண்டிலிப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.கந்தசாமியினால் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

நவாலி மகாவித்தியாலய அதிபர் இரா. வசந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மேற்படி புதிய அறை திறந்துவைக்கப்பட்டது.

உளவளத்துணை செயற்பாட்டு அலுவலகம், நவீன வடிவிலான விஞ்ஞான ஆய்வுகூடம் மற்றும் சோமசுந்தரப் புலவர், பாடசாலை நிறுவுநர் தம்பையா பண்டிதர் ஆகியோரது சிலைகள் ஆகியன மீள்புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டன. (203-95)

## இளைஞர் கழகங்களின் நிர்வாகிகளைத் தெரிவுசெய்க

இணுவில்,பெப்.3

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்திற்கு உட்பட்ட இளைஞர் கழகங்கள் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்களுக்கு வசதியாக குறித்த காலத்திற்குள் புதிய நிர்வாகத்தைத் தெரிவுசெய்யவேண்டுமென்று தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் இதுதொடர்பான விவரங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-45)

## அல்வாய்ப் பகுதிகளில் கட்டாக்காலிகள் தொல்லை

வடமராட்சி,பெப்.3

அல்வாய் வடக்கு, அல்வாய் வடமேற்கு, அல்வாய் மேற்கு ஆகிய பகுதிகளில் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளன.

இப்பகுதிகளில் குடியிருப்புக்களுடன் அண்டி தோட்ட நிலங்கள் இருப்பதால் கட்டாக்காலி ஆடு, மாடுகளைக் கட்டி வளர்க்குமாறும் இல்லையேல் கட்டாக்காலிகள் பிடிக்கப்பட்டு உரிய பயிரழிவு நஷ்டம் கால்நடை வளர்ப்போரிடமிருந்து அறவிடப்படும் என இப்பகுதிகளைச் சேர்ந்த கமக்காரர் அமைப்புக்கள் கால்நடை வளர்ப்போருக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளன. (203-226)

## மின்வயர்கள் உரசுவதால் தீப்பிளம்பு ஏற்படுகிறது

மானிப்பாய்,பெப்.3

நவாலி வடக்கு - புலவர் வீதியில் மின் வயர்கள் ஒன்றுடன் ஒன்று உரசி தீப்பிளம்பாக எரிகின்றன என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் கடந்த சில நாள்களாக இரவுவேளைகளில் மின் சாரம் தடைப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - மேற்படி வீதியில் மின் வயர்கள் எரிவது தொடர்பாகவும், மின்சாரம் இரவுவேளைகளில் துண்டிக்கப்படுவது தொடர்பாகவும் முறைப்பாடு செய்யப்பட்டபோதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதற்குரிய நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று கூறப்படுகிறது. (203-95)


## காணி விற்பனைக்கு

யாழ்.மாநகர எல்லைக்குள் யாழ்.பிரதான வீதி, புதிய நீதிமன்றத்திற்கு தெற்குப் பக்கமாக 4 பரப்பு கிணற்று வசதியுடன் கூடிய காணி உடன் விற்பனைக்கு.

தொடர்பு:- 0779522521
சிறி:- 0775924845
0776111419


ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

## நான்காம் ஆண்டு நினைவுகளில்



அமரர்
செல்லத்துரை
பாலசிங்கம் (பத்தர்)

மலர்வு
19✱05✱1933

உதிர்வு
18✱01✱2005


திதி: தைமாசப் பூர்வபஞ்ச அட்டமி (03.02.2009)

அன்பின் உறைவிடமே! குடும்பத்தின் ஒளிவிளக்கே!
கண்ணீரில் கரைந்தன நான்காண்டுகள்
அன்பு மனங்களில் உங்கள் இனிய நினைவுகள் என்றும் அழியாது.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.
(82345)
என்றும் உங்கள் நினைவுடன்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## நான்காம் ஆண்டு நினைவு

மலர்வு
09 ✱ 06 ✱ 1949



உதிர்வு
18 ✱ 01 ✱ 2005

### அமரர் சின்னத்துரை மகாலிங்கம்

(முன்னாள் பிரதம எழுதுநர், தொழில்நுட்பக் கல்லூரி,
கௌரவ செயலாளர், ஊழியர் ஐக்கிய நாணய சங்கம், கொக்குவில்)

திதி: 03.02.2009

இனிமையாக வாழ
இனிய வழி காட்டிய - ஜீவனே
இமைப்பொழுதில் நீங்கினாலும்
இழக்கமுடியவில்லை உங்கள் நினைவலைகள்.

(82313)

ஏழாலை மேற்கு, ஏழாலை.
குடும்பத்தினர்.



## ஓராண்டு நினைவில்...

### இராசலிங்கம் மதிமாறன்

தோற்றம்: 02.03.1977
திதி: அட்டமி (03.02.2009)
மறைவு: 14.02.2008

ஆல்போல் விழுதுவிட்டு ஆண்டுகள் பல வாழ்வீர் என
ஆவலுடன் காத்திருந்தோம் ஆசையுடன் பார்த்திருந்தோம்
பாச உறவுகளைப் பாரினிலே பரிதவிக்கவிட்டு
பாதி வயதுதன்னில் பரமனடி சேர்ந்தீரே

ஓராண்டு பறந்தோடி மறைந்திடினும் – நின்
பசுமை நினைவுகளில் பகலிரவாய் நனைகின்றோம்
ஆயிரம் சோதனைகள் அடுக்கடுக்காய் வந்திடினும் – நின்
நினைவுகள் மட்டும் எம்மை விட்டு மறைவதில்லை.

(82344)

நாராயணன் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
என்றும் நினைவுடன்:
குடும்பத்தினர்.
த.ஷேந்திரன் (மைத்துனர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொக்குவில் வளர்மதி சன சமூக நிலையம் விக்ரம்- இராஜன்-கங்கு ஞாபகார்த்தமாக நடத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டுக் கழகமும், யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொள்வதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்:நேசன்)

## கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அரியாலை ஐக்கிய வி.க. சம்பியனானது

வலிவடக்கு,பெப்.3

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் சம்பியன் பட்டத்தை வென்றது.

அரியாலை புங்கங்குளம் சனசமூக நிலைய கரப்ப்ந்தாட்ட மைதானத்தில் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் வண்ணார்பண்ணை விளையாட்டுக் கழகமும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இப் போட்டியில் முதல் இரண்டு சுற்றுக்களையும் ஐக்கிய விளையாட்டுக் கழகம் கைப்பற்றிச் சம்பியனானது.

இரு அணிகளும் வெற்றியைப் பெற்று சம்பியனாக வரவேண்டும் என்ற துடிப் புடன் விளையாடியமை ரசிகர்களையும், பார்வையாளர்களையும் மிகவும் உற்சாகப்படுத்தியது.

முதல் இரண்டு சுற்றுக்களையும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 25:23, 27:25 புள்ளிகள் அடிப்படையில் வண்ணார்பண்ணை விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டது.

இச்சுற்றுப் போட்டியில் மூன்றாம் இடத்தை திருநெல்வேலி முத்துத்தம்பி விளையாட்டுக் கழகம் பெற்றுக்கொண் டது.

(04-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## சிறந்த கூடைப்பந்தாட்ட வீரர், வீராங்கனைகள் தெரிவு

வலி.வடக்கு,பெப்.3

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்திய கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சிறந்த கூடைப்பந்தாட்ட வீரர், வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆண்களுக்கான இறுதிப் போட்டியின் போது ஆட்ட நாயகனாக யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக வீரர் வாகீசனும், போட்டிகளின் தொடர் ஆட்ட நாயகனாக சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழக வீரர் பிரசன்னாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

பெண்களுக்கான இறுதிப் போட்டியின் போது ஆட்டநாயகியாகிய யாழ்ப்பாணம் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக வீராங்கனை க.சானுகாவும், தொடர் ஆட்ட நாயகியாக கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக வீராங்கனை இ.வினோஜாவும் தெரிவு செய்யப்பட்டார்கள். (86)



உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

இறுதிப் போட்டியில் உடுவில் மத்தி விளையாட்டுக் கழகமும், ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொள்வதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்: நேசன்)

## லீக் முறையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டி; இன்னிங்ஸால் வென்றது பற்றிக்ஸ் கல்லூரி!

வலி.வடக்கு,பெப்.3

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 20 வயது பிரிவினர்களுக்கு இடையே நடைபெற்றுவரும் லீக் முறையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி இன்னிங்ஸினால் வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 59.2 ஒவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 225 ஒட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

கமில்டன் 70 ஓட்டங்களையும், நவதீபன் 70 ஓட்டங்களையும், மிலாண்டோ 35 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். உதிரிகளாக 20 ஓட்டங்களும் பெறப்பட்டன.

மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த கோகுலதாஸ் 1.2 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டத்திற்கு 3 விக்கெட்டுக்களையும் கஜதீபன், டிலக்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி 49 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 70 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. கஜந்தசீலன் 26 ஓட்டங்களைப் பெற்றார். உதிரிகளாக 15 ஓட்டங்களும் பெறப்பட்டன.

சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த நிலோஜன் 11 ஓவர்கள் பந்து வீசி 6 ஓட்டமற்ற ஓவர்களுடன் 9 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், மிலாண்டோ 10 ஓவர்கள் பந்து வீசி 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 13 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், சயீந்திரன், மனோஜ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இன்னிங்ஸில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி துடுப்பெடுத்தாடாது, மீண்டும் மகாஜனக் கல்லூரியையே துடுப்பெடுத்தாட அழைத்தது.

இதில் மகாஜனக் கல்லூரி 39.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றதால் பற்றிக்ஸ் கல்லூரி இன்னிங்ஸால் வெற்றி பெற்றது.

கஜந்தசீலன் 35 ஓட்டங்களையும், கோகுலதாஸ் 26 ஓட்டங்களையும், பார்த்தீபன் 22 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டார்கள்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த மிலாண்டோ 6.4 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 18 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், லவதீபன் ராஜீவ், நிலோசன், சஜீந்திரன், நவதீபன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (202-86)

## ஆட்டங்கள்

வலி.வடக்கு,பெப்.3

யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு மாவட்ட மட்டத்தில் நடத்தும் ஆண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம் நாளை புதன்கிழமை பகல் 9 மணிக்கு யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி உள்ளகப் பூப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெறும்.

இறுதிப் போட்டியில் உடுவில் மான்ஸ் பாடசாலை விளையாட்டுக்கழகமும், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

(50-86)

* * *

வலி.வடக்கு,பெப்.3

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான எல்லே விளையாட்டுப் போட்டி நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

(50-86)

## எல்லே சுற்றுப் போட்டியில் சம்பியனாகியது அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம்

வலி.வடக்கு,பெப்.3

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற ஆண்களுக்கான எல்லே சுற்றுப் போட்டியில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும், அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் விளையாடிய மனோகரா விளையாட்டுக் கழகம் 4 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.


5 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் ஒரு ஓட்டத்தை மட்டும் முதல் இன்னிஸிசில் பெற்றுக் கொண்டது.

இரண்டாவது இன்னிங்ஸில் 2 ஓட்டங்களை மட்டுமே அந்த அணி பெற்றுக் கொண்டது.

ஆட்ட நிறைவில் 4:3புள்ளிகள் என்ற அடிப்படையில் டயமன்ஸ் விளை யாட்டுக் கழகத்தை வென்று மனோகரா விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகமும் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. இதில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் 1:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டு மூன்றாம் இடத்தைத் தட்டிக் கொண்டது.

(202-86)



யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. மாணவர்களின் அணிவகுப்பு இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

(படம்:ஐங்கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயலமர்வுகள்

வடமராட்சி கல்வி வலயத்தில் ஆங்கில பாடம் போதிக்கும் ஆசிரியர்களுக்கும், தகவல் தொழில்நுட்ப பாடம் போதிக்கும் ஆசிரியர்களுக்குமான செயலமர்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆங்கிலபாட ஆசிரியர்களுக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரிய நிலையத்திலும் தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்களுக்கு வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள கணனி வள நிலையத்திலும் இச் செயலமர்வுகள் இடம்பெறும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா அறிவித்துள்ளார். (203-236)

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன்
தம்பையா அருட்சோதி
(அருள் ஸ்ரோர்ஸ் - கொழும்பு)
அவர்களின் அன்புத் தாய்
**திருமதி தம்பையா நாகம்மா**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய ஈழத்துச் சிவனைப் பிரார்த்திக்கின்றோம்

மதுரா மாளிகை,
யாழ்ப்பாணம். (82409)

S.தாசன்.

## மரண அறிவித்தல்

### சிவபாதசுந்தரம் கனகமணி



அரியாலையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சிவபாதசுந்தரம் கனகமணி நேற்று(02.02.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாகுட்டி-பொன்னம்மா தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற சிவபாதசுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-செல்லம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புச் சகோதரியும், மகேஸ்வரி, தியாகேஸ்வரி, வனேஸ்வரி, உதயநாதன் ஆகி யோரின் சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(03.02.2009) செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி கணேசபாலன்
(ஈசா-பேர்த்தி)

இல.44, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்



திருமதி. இரத்தினசிங்கம் புவனேஸ்வரி

யாழ்.தட்டாதெருவைப் பிறப்பிடமாகவும் கொழும்பு பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.இரத்தினசிங்கம் புவனேஸ்வரி (30-01-2009) வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற செல்லையா இரத்தினசிங்கம் (நில அளவையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசையா - தங்கரெத்தினம் அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னம்மா அவர்களின் அன்பு மருமகளும், ரஞ்சன், Dr.மோகன் (பல் வைத்தியர்), இராகுலன் (மக்கள் வங்கி), ரமணி, காலஞ்சென்ற ராஜன், இரத்தினகுமார், ரஜனி, றங்கன், றமணன், ராஜினி, ராகவன், ராகினி ஆகியோரின் அன்புத் தாயாரும் கதிர்காமசோதி, சிவகௌரி (பல் வைத்தியர்), யோகேஸ்வரி, காலஞ்சென்ற குகதாசன், கிருஷ்ணவேணி, பரமேஸ்வரி, தியாகராஜன், ஜெயந்தி, ஜெயகௌரி, லோகநாதன், பாலகுமார் ஆகியயோரின் அன்பு மாமியும், டிலினி, டிலானி, விதுனன், விதுர்பன், ஜீவிதா, ரமேஸ், சதீஸ், திவ்யா, பிரகாஷ், அபினா, அஸ்வினி, லோஜினி, ஹரிஹன், சாருஜன், அனோஜன், அபிநாஜ், மதிநாத், சுஜித்தா, றபித்தா, சகானா, ஷைலன், சாருகா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக (02-02-2009) திங்கள் காலை 9 மணி முதல் G1 பம்பலப்பிட்டி தொடர்மாடியில் வைக்கப்பட்டு (04-02-2009) புதன்கிழமை காலை 9 மணிக்கு ஈமக்கிரியைகள் நடைபெற்று 10 மணியளவில் தகனக் கிரியைக்காக (தெஹிவளை - கல்கிசை) இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.ரஞ்சன் - 0777 676482
இ.இராகுலன் - 0777 676479
த.லோகநாதன் 011-2580130

## விடத்தற்பளைக் கிராமத்துக்கு விரைவில் மின் வெளிச்சம்

தென்மராட்சி கிழக்கு விடத்தற்பளைக் கிராமம் முதன்முறையாக மின்வெளிச்ச வசதி பெறவுள்ளது.

அப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் முயற்சியினால் இலங்கை மின்சார சபையினால் மின் இணைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு கடந்த வாரம் மின் மாற்றியும் வைக்கப்பட்டது. இம்மாதம் மின்விநியோகம் வழங்கப்படலாமெனத் தெரிவிக்கப்பட்டது. (202-207)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
இரத்தினம்
கிருஷ்ணபிள்ளை

பிறப்பு:-
1946.11.15

இறப்பு:-
2009.01.05

அன்புடனே எமை வளர்த்து அறிவூட்டி
பண்புடனே பார்புகழ எமை வளர்த்து
இன்புடன் எல்லாம் எமக்களித்து
இறைவனுடன் நீ கலந்து இன்றுடன்
திங்கள் ஒன்று ஆனதுவோ! நெஞ்சம்
உள்ள மட்டும் நாம் மறவோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடிவந்து உதவிகள் ஒத்தாசை புரிந்த அன்பு உள்ளங்களுக்கும்; ஆறுதல், அஞ்சலிகள் தெரிவித்து, கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (04.02.2009) புதன்கிழமை கொழும்பு கொட்டாஞ்சேனை ஐங்கரன் மண்டபத்திலும், பத்தமேனி அச்சுவேலியில் உள்ள இல்லத்திலும்நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

85/95,சென்.ஜேம்ஸ் பிளேஸ்,
மோதரை, கொழும்பு -15.

விமான நிலைய வீதி,
பத்தமேனி, அச்சுவேலி.

குடும்பத்தினர்.

# 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
31.08.1964

அழிப்பு
16.01.1997

## சிவரட்ணம் உதயகுமார்
## (கலட்டிக் கண்ணன்)

திதி: அட்டமி (03.02.2009)



தாராள குணமும் தகவுடைய பேரன்பும் சீரான குணவியல்பும்
சேர்ந்தே பிறந்த எம் கண்ணா!-இன்று
திருமண வாழ்வில் இருபதாண்டு நிறைவும்
திரு உருவமானதில் ஈராறு ஆண்டு நினைவும் ஆனதே!
எம் நெஞ்சங் குமுறுதப்பா
பிஞ்சுகள் எங்களோடு பெருங் கதைகள் பேசிடுவீர்கள்
தஞ்சமென்று வந்தவர்க்குத் தாராள உதவிகள் செய்தீர்கள்-அப்பா!
இன்று குஞ்சுகள் எமைவிட்டு எங்குதான் சென்றீர்-அப்பா
இது இறைவனின் நியதியோ இல்லை இடையில் உள்ளவர்கள்
இட்ட சதியான விதியோ!
ஏராளம் பணிகள் செய்த எங்களப்பா-உங்களை
நீராளும் கண்களுடன் நினைக்கின்றோம்-எந்நாளும்.
பெறுக சாந்தி!

91, இராமநாதன் வீதி,
[illegible]ணம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி பிரதேச சபையால் ஆதனவரி அறவிட நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.3

தென்மராட்சிப் பகுதியில் 2000ஆம் ஆண்டு இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையால் ஆதனவரி அறவீடு செய்யப்படவில்லை. இதனால் அந்த ஆதன வரி அறவீட்டை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஆனால் சாவகச்சேரி பிரதேச சபையின் வலய உப அலுவலகங்களான கச்சாய், மிருசுவில், வரணி, சரசாலை ஆகிய பிரதேசங்களில் எக்காலத்திலும் ஆதனங்களுக்கான ஆதனவரி அறவீடு செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே எதிர்வரும் காலங்களில் சாவகச்சேரி பிரதேச சபையின் 47 கிராமசேவையாளர் பிரிவுகளிலும் ஆதனவரியை அறவீடு செய்து அதன்மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு அப்பிரதேசங்களை அபிவிருத்தி செய்யமுடியும்.

இதனைக் கருத்திற்கொண்டு சாவகச்சேரி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் ஆதனவரி முறையை அமுல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-131)

# கிராம அலுவலர் பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் வெளியாகின

யாழ்ப்பாணம்,பெப்.3

யாழ்.மாவட்டத்திலிருந்து கிராம அலுவலர்களைத் தெரிவுசெய்வதற்காக இடம்பெற்ற போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் பரீட்சை திணைக்களத்தினால் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

2007ஆம் ஆண்டு இடம்பெற்ற இப்பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சார்த்திகளுக்குக் கிடைத்ததைத் தொடர்ந்து பல பரீட்சார்த்திகள் பெரும் அதிர்ச்சிகளுக்கு ஆளாகியுள்ளனர்.

அவர்கள் விண்ணப்பித்த பிரதேச செயலகங்களுக்குப் பதிலாக வேறு பிரதேச செயலகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் தென்பகுதிப் பிரதேச செயலகங்களுக்கு விண்ணப்பித்ததாகவும் அப்பகுதிகள் குறிப்பிடப்பட்டு பெறுபேறுகள் வந்துள்ளன.

பரீட்சைக்கு விண்ணப்பித்த பிரதேச செயலகங்களின் வெட்டுப்புள்ளிக்குக் கூடிய புள்ளிகள் பெற்றுள்ள பரீட்சார்த்திகளின் பெறுபேற்று அட்டையில் வேறு பிரதேச செயலகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனால் பரீட்சார்த்திகள் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இவ்வாறு பாதிக்கப்பட்டோர் [illegible] நிலைப்பாட்டை எங்கு முறை[illegible] என்று தெரியாது திண்டாடி வருகின்[illegible] (203-[illegible])

# கொட்டடி மீன்சந்தையில் தேங்கும் கழிவுகளால் அப்பகுதியில் துர்நாற்றம்

யாழ்ப்பாணம்,பெப்.3

கொட்டடி மீன்சந்தையில் உள்ள கழிவுப்பொருள்கள் உடனுக்குடன் அகற்றப்படாமையால் அப்பகுதிகளில் துர்நாற்றம் வீசுவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

மீன்களின் வெட்டிய கழிவுகள் அனைத்தும் அங்கு வைக்கப்பட்ட கொள்கலன்களில் போடப்பட்டு வருகின்றன.

இந்தக் கழிவுப்பொருள்கள் உடனுக்குடன் அகற்றுவதே சிறந்ததும் மற்றும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதைத் தவிர்க்கக் கூடியதுமாக இருக்கும்.

ஆனால் இவை அகற்றப்படாது உள்ளமையால் சுகாதாரச் சீர்கேடு நிலவும் நிலைமையும் காணப்படுகின்றது.

தற்போது சந்தைக்குக் கூடுதலான மீன்கள் வந்து சேர்வதால் மீன்களை வெட்டிச் சுத்தம் செய்யப்படும் பகுதியில் உள்ள மீன் கழிவுகளால் தினமும் கொள்கலன் நிரம்புவதாகத் தெரிவிக்கப்பட்டது.

உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனமெடுத்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வரவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-224)

# மாவட்டக் கண்காணிப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.3

யாழ்.சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் சம்பந்தப்பட்டோர் தவறாது சமுகமளிக்குமாறு சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (201)

# மத்திய கல்லூரியில் பாராட்டு விழா

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கடந்த ஆண்டு உயர்தரப்பரீட்சையில் சிறப்பான பெறுபேறு பெற்ற மாணவர்களையும் கடந்த ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு கல்லூரி அதிபர் எல்.ஓங்கார மூர்த்தி தலைமையில் கல்லூரியின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ்.மத்திய கல்லூரியின் சுவிற்ஸர்லாந்து பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தப்படுகின்ற இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் உயர் தரத்தில் வர்த்தகப் பிரிவில் மாவட்ட நிலையில் முதலாவது இடத்தைப் பெற்ற மத்திய கல்லூரியின் கனகசபாபதி மிதுலன், கலைப் பிரிவில் மாவட்ட நிலையில் ஒன்பதாம் இடத்தைப் பெற்ற சந்திரகுமார் கோபிநாத் ஆகியோரும்- புலமைப் பரிசில் பரீட்சையில் தேசிய நிலையில் முதலாவது இடத்தைப் பெற்ற மீசாலை வீரசிங்க மகா வித்தியாலய மாணவன் தர்மலிங்கம் பாசுபதன், தேசிய நிலையில் இரண்டாவது இடத்தைப்பெற்ற நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவி மோகன் சங்கீர்த்தனா ஆகியோரும் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (50-9)

# கால்நடைத் தீவனங்கள் விநியோகம்

யாழ்ப்பாணம்,பெப்.3

யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் இம்மாதம் தனியார் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட கால்நடைத் தீவனங்கள் சகல கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சமாசத்தால் வழங்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதாக மேற்படி சமாச பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார். (201)

# விவாதத் தமிழிற்கு பழங்காலம் தொட்டே வரலாறு இருக்கிறது

## மத்திய கல்லூரி பட்டறையில் பேராசிரியர் சிவலிங்கராஜா

யாழ்ப்பாணம்,பெப்.3

மிகப்பழங் காலத்திலேயே தமிழில் விவாதங்கள் நடைபெற்றுள்ளன. மணிமேகலையில் 'பட்டிமன்றம் பாங்கறிந்து ஒழுகுமின்' என்ற குறிப்பு இருக்கிறது. எனவே இதற்கு ஒரு நீண்டவரலாறு இருக்கின்றது.

இவ்வாறு கூறினார் யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா.

யாழ்.மத்திய கல்லூரி கலை மாணவர் மன்றமும் விவாதமன்றமும் இணைந்து வழங்கிய விவாதப் பயிற்சிப் பட்டறையில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அவர் உரை நிகழ்த்தினார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியவை வருமாறு:

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழில் இயற்றமிழை வளர்க்க இங்கு பயிற்சிப்பட்டறை நிகழ்த்தப்படுவது பாராட்டத் தக்கதாகும். பேச்சுத்துறையில் நான் சிறுபராயத்தில் நிகழ்த்திய முயற்சிகள், வென்ற தங்கப்பதக்கம் என்பன பின்னாளில் நான் தமிழ்த்துறைத் தலைவராகப் பணிபுரியும் அளவிற்கு எனக்கு நம்பிக்கையையும், ஆளுமை விருத்தியையும் ஏற்படுத்தின என்று கூறலாம்.

விவாதத்துறையைப் பொறுத்தமட்டில் மிகப்பழங் காலத்திலேயே விவாதம் இடம்பெற்றுள்ளது. மணிமேகலையில் ''பட்டிமன்றம் பாங்கறிந்து ஒழுகுமின்'' என்ற குறிப்பு வருகிறது. எனவே இதற்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. ஈழத்தமிழர் தமிழ் இலக்கிய வரலாற்றில் இரண்டு வகையான விவாதம் இடம்பெற்றுள்ளது. ஒன்று எழுத்து மூலமான கண்டனம்,



கண்டன மறுப்புக்கள். இத்துறையில் தமிழக அறிஞர்களுடன் தொல்காப்பியம் பற்றி விவாதம் புரிந்த வித்துவ சிரோன்மணி கணேசையரைக் கூறலாம். அவ்வாறே யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவனாகவும், ஆசிரியராகவும் விளங்கிய நல்லைநகர் நாவலர் அவர்களைக் குறிப்பிடலாம். நாவன்மையால் எழுத்திலும் சொல்லிலும் விவாதம் புரிந்தவர் அவர்.

இக்கல்லூரி தேசிய மட்டத்தில் பல தடவைகள் தமிழ்ப்பேச்சு, தமிழ் விவாதம் என்பவற்றில் முதலாம் இடம் பெற்றமையைப் பத்திரிகை மூலம் பார்த்து மகிழ்ந்தேன். எனது மாணவர்கள் ஆசிரியர்களாக இருந்து இந்த வெற்றிகளுக்கும், பயிற்சிப் பட்டறைகளுக்கும் காரணமாகவிருப்பது பெருமையாக உள்ளது என்று கூறினார். கடந்த 17ஆம் திகதி கல்லூரி தம்பர் மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்குக் கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி தலைமை வகித்தார். (ப)

# நீர்வேலி, கோப்பாய் பிரதேச கிணறுகளில் தண்ணீரின் மட்டம் வரட்சியால் குறைகிறது

யாழ்ப்பாணம்,பெப்.3

நீர்வேலி, கோப்பாய்ப் பிரதேச வயல்களில் உள்ள பொதுக்கிணறுகளில் தற்போதைய வரட்சியால் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

வயல்களில் உள்ள நெற்பயிர்களுக்கு விவசாயிகள் கிணறுகளில் இருந்து தண்ணீர் இறைத்து வருகின்றனர்.

இந்த நிலையில்தான் கிணற்றுநீரின் மட்டமும் குறைந்து காணப்படுகின்றது.

தற்போதைய கடும் வரட்சி காரணமாகத் தினமும் ஒருமுறையாவது நெற்பயிர்களுக்கு தண்ணீரை இறைக்கவேண்டியிருப்பதாக விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (203-224)

# குடாநாட்டில் விவசாய அபிவிருத்திக்கு மூன்றாண்டுத் திட்டம் நடைமுறையில்

சித்தங்கேணி,பெப்.3

''நாம் பயிரிடுவோம் தேசத்தைக் கட்டியெழுப்புவோம்'' எனும் செயற்றிட்டத்தின் கீழ் எட்டு விவசாயத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணம் கமநலசேவைத் திணைக்களத்தினால் 2007ஆம் ஆண்டு தொடக்கம் 2010ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்தவென இத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வீட்டுத்தோட்டம் அமைத்தல், கமநல சேவைகள் நிலைய வளங்களை வளப்படுத்தல், மா, பலா போன்ற மரங்களை நடுகை செய்தல், கைவிடப்பட்ட வயல் நிலங்களில் மீள் பயிர்ச்செய்கை மேற்கொள்ளல், பேண்தகு விவசாயத்தை மேற்கொள்ளல், கமநல சேவைகள் நிலையங்கள் மூலம் விவசாயத் தேவைக்கான உள்ளீடுகளை விநியோகித்தல், கட்டாக்காலி கால்நடைகளால் ஏற்படும் இழப்பீடுகளைத் தவிர்க்க வயல்நிலங்களிற்கு முட்கம்பி வேலிகள் அமைத்தல், 15 தொடக்கம் 18 வயது வரையான இளைஞர் யுவதிகளிற்கான வீட்டுத் தோட்டம் அமைத்தல் போன்ற நடவடிக்கைகள் விவசாயத் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (1-112)






தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் வெளியிடப்படும் ஞானச்சுடர் சஞ்சிகையின் 133ஆவது மாதாந்த இதழ் வெளியீடு கடந்தவாரம் ஆச்சிரமத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். நிகழ்வில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையுரை நிகழ்த்துவதையும் காரை எம்.பி.அருளானந்தம் வெளியீட்டுரை நிகழ்த்துவதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.

ஞானச்சுடர் மலரில் ஆக்கங்கள் எழுதியோரும் இந்த நிகழ்வில் வைத்துக் கௌரவிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவரான எழுத்தாளர் யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்களுக்கு நல்லை ஆதீன குருமுதல்வர் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கும்போது [illegible] தலைவர் [illegible] அருள்லிங்கம் நடுவில் நிற்பதை மூன்றாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை நான்காவது படத்தில் காணலாம். (படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழருக்காக உயிரை விட்டாலும் உண்ணாவிரதப் போரைக் கைவிடோம்!

## களத்தில் குதித்துள்ள திருச்சி மாணவர்கள் சூளுரை

சென்னை, பெப்.3

இலங்கையில் தமிழர்கள் மீது நடைபெறும் தாக்குதலைத் தடுத்து நிறுத்தக் கோரி திருச்சியில் சட்டக்கல்லூரி மாணவர்கள் நேற்றுமுன்தினம் 4 ஆவது நாளாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சோர்வடைந்த மாணவர்களிடம் மருத்துவர்கள் வலியுறுத்தியும் அவர்கள் உண்ணா நிலை போராட்டத்தைக் கைவிட மறுத்துவிட்டனர்.

இலங்கைத் தமிழர்கள் மீது நடத்தப்படும் தாக்குதலை உடனே தடுத்து நிறுத்த வேண்டும், சிங்கள இராணுவத்துக்கு இந்திய அரசு உதவிகள் செய்யக்கூடாது என்பன உள்ளிட்ட பல கோரிக்கைகளை வலியுறுத்தி திருச்சி சட்டக்கல்லூரி மாணவர்கள் 27 பேர் கடந்த வெள்ளிக்கிழமை காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினர்.

நேற்றுமுன்தினம் 4ஆவது நாளாக அவர்களின் போராட்டம் நீடித்தது. உண்ணாவிரதம் இருந்தவர்களில் சதீஷ், சதீஷ்குமார், தமிழரசன் ஆகிய 3 மாணவர்கள் கடந்த சனியன்று மயங்கி விழுந்தனர். அவர்கள் உடனடியாக திருச்சி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு குளுக்கோஸ் செலுத்தப்பட்டது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் காலை உண்ணாவிரதம் இருப்பவர்களில் மேலும் 12 மாணவர்கள் மயக்கம் அடைந்தனர். அவர்கள் உண்ணாவிரதப் பந்தலிலேயே சோர்ந்து போய் படுத்து கிடந்தனர். இது தொடர்பான தகவலை பொலிஸார் அரச மருத்துவர்களுக்கு தெரிவித்தனர்.

இதைத்தொடர்ந்து அரசு மருத்துவமனை மருத்துவர்கள் குழுவினர் உண்ணாவிரதப் பந்தலுக்கு வந்து 12 மாணவர்களின் உடல்நிலையையும் பரிசோதித்தனர். அவர்களை உடன்டியாக மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

இதையொட்டி சட்டக் கல்லூரி முதல்வர் இசைமதி, திருச்சி மாநகர காவல்துறை துணை ஆணையாளர் சின்னச்சாமி ஆகியோர் அங்கு வந்து போராட்டத்தைக் கைவிடும்படி மாணவர்களிடம் கேட்டனர்.

ஆனால், மாணவர்களோ நாங்கள் உயிரை விட்டாலும் இங்கேயேதான் விடுவோமே தவிர உண்ணாவிரதத்தைக் கைவிடமாட்டோம் என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டனர்.

உடல் நிலை கருதி மயக்கம் அடைந்த மாணவர்களாவது சிகிச்சைக்கு செல்லும்படி கேட்டும் அவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் காவல்துறையினருக்கும் மாணவர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. மாணவர்கள் தாங்கள் கொண்ட கொள்கையில் பிடிவாதமாக இருந்ததால் காவல்துறையினரும் அவர்களுடன் பேசுவதைக் கைவிட்டுச் சென்றனர்.

## ரஷ்யாவிடம் இந்தியா வாங்கிய 'மிக்' விமானம் இலங்கையில்..!

புதுச்சேரி, பெப். 3

ஈழத் தமிழர்கள் மீது மிக் ரக விமானங்கள் இலங்கையில் குண்டு மழை பொழிகின்றன. மிக் ரக விமானத்தை ரஷ்யாவிடம் இருந்து இந்தியா வாங்கியது. இந்தியா வாங்கிய விமானம் வழிதவறி இலங்கைக்குச் சென்று விட்டதா?

- இவ்வாறு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் கேள்வி யெழுப்பியுள்ளார்.

புதுச்சேரியில் கடந்த சனியிரவு நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் பேசியபோதே அவர் இதனைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு-

இலங்கையில் நடக்கும் போரை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. இலங்கையில் இரும்பு உருக்கு ஆலைகள் கிடையாது. பெரும்பாலும் விவசாயம்தான் நடக்கிறது. அப்படியிருக்கும் போது துப்பாக்கி, விமானம், குண்டுகளை எப்படித் தயாரிக்கின்றனர்.

மிக் ரக விமானம் இலங்கையில் குண்டு மழை பொழிகிறது. மிக் ரக விமானத்தை ரஷ்யாவிடம் இருந்து இந்தியா வாங்கியது. இந்தியா வாங்கிய விமானம் வழிதவறி இலங்கைக்குச் சென்று விட்டதா?.

ஆவடியில் உருவாக்கப்பட்ட டாங்கிகள், கான்பூரில் தயாரிக்கப்பட்ட குண்டுகளால் தமிழர்களை கொன்று வருகின்றனர். இந்தியர்களிடம் வாங்கிய வரிப்பணத்தில் செய்த ஆயுதங்களைக் கொண்டு தமிழர்களை இலங்கை இராணுவம் கொன்று வருகிறது - என்றார்.

# போர் நிறுத்தம் கோரி உண்ணாவிரதமிருந்த சென்னை சட்டக்கல்லூரி மாணவர்கள் கைது

## சட்டத்தரணிகளின் பணிப் புறக்கணிப்பு தொடர்கிறது

சென்னை, பெப்.03

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தொடர் உண்ணாவிரதத்தைத் ஆரமபித்த சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள் 15 பேர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இதனிடையே சட்டத்தரணிகள் நேற்று இரண்டாவது நாளாகவும் நீதிமன்றப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதால் தமிழகம் முழுவதும் நீதிமன்றப் பணிகள் பாதிக்கப்பட்டன.

சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள் 15 பேர் நேற்றுத் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினர். சட்டக் கல்லூரி வாசலின் முன்பு பந்தல் அமைத்து அவர்கள் அங்கே அமர்ந்திருந்தனர். தகவலறிந்ததும் பொலிஸார் அங்கு விரைந்து சென்று அந்த மாணவர்களைக் கைது செய்து வாகனத்தில் ஏற்றிச் சென்றனர்.

இதனிடையே, இலங்கைத் தமிழர் பாதுகாப்பை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் சட்டத்தரணிகள் நடத்தி வரும் கால வரையற்ற நீதிமன்றப் புறக் கணிப்புப் போராட்டம் இரண்டாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

இது குறித்து தமிழ்நாடு சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் பிரபாகரன் கூறும்போது -

எங்கள் சங்கத்தின் சார்பில் நாளை வரை இந்தப் போராட்டம் தொடரும். இது நீதிமன்றத்திற்கோ, நீதித்துறைக்கோ எதிரான போராட்ட மல்ல. இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக எங்களுடைய உணர்வுகளை தெரிவிப்பதற்கான போராட்டம்தான்- என்றார்.

இதனிடையே உயர்நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத்தின் பொதுக் குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் நாளை இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் அறிவித்துள்ள முழு அடைப்புக்கு ஆதரவு வழங்குவது என்றும், 5 ஆம் திகதி வரை புறக்கணிப்புப் போராட்டத்தைத் தொடர்வது என்றும் முடிவு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# உலகத் தமிழர்களின் அஞ்சலிக்கு அனுப்பப்படும் முத்துவின் அஸ்தி!

சென்னை, பெப். 2

ஈழத் தமிழருக்காக தீக்குளித்த முத்துக்குமாரின் அஸ்தி, உலகமெங்கும் வாழும் தமிழர்களின் அஞ்சலிக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண வலியுறுத்தி பத்திரிகையாளர் முத்துக்குமார் (வயது - 26), கடந்த வியாழக்கிழமை சென்னையில் தீக்குளித்துத் தற்கொலை செய்துகொண்டார்.

அவரது இறுதிச்சடங்கு மூல கொத் தளம் மயானத்தில் கடந்த சனிக்கிழமை நள்ளிரவு நடைபெற்றது.

முத்துக்குமாரின் அஸ்தி ஞாயிற்றுக்கிழமை 9 கலசங்களில் சேகரிக்கப்பட்டது. பின்னர் அவரது தந்தை மற்றும் உறவினர்கள் சென்னை கடற்கரையில் ஒரு கலசத்தில் இருந்த அஸ்தியைக் கரைத்தனர். மீதமுள்ள 8 அஸ்திக் கலசங்களும், கொளத்தூர் வணிகர் சங்கக் கட்டடத்தில் வைக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு அஸ்திக் கலசம் முத்துக்குமாரின் சொந்த ஊரான கொலுவை நல்லூரில் அமைக்கப்படவுள்ள நினைவுத் தூணில் வைக்கப்படுகிறது.

மூல கொத்தளம் மயானத்தில் நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டு அங்கு ஒரு அஸ்தி கலசம் வைக்கப்படுகிறது.

மேலும் 5 கலசங்கள் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் வைக்கப்பட்டு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு சென்னை, பூம்புகார், இராமேஸ்வரம், திருச்செந்தூர், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் கடலில் கரைக்கப்படுகின்றன.

மீதமுள்ள ஒரு அஸ்திக் கலசம் இந்தியா மற்றும் உலகம் முழுவதிலும் தமிழர் வாழும் பகுதிக்கு அவர்கள் அஞ்சலி செலுத்துவதற்காக அனுப்பி வைக்கப்படுகிறது என்று தமிழ்நாடு வணிகர் சங்கத் தலைவர் வெள்ளையன் தெரிவித்துள்ளார்.

## ஈழத் தமிழரை காப்பாற்றக் கோரி தீக்குளிக்க முயன்ற இருவர் கைது

சென்னை, பெப். 3

இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வுகாணக் கோரியும், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்தும் தீக்குளிக்க முயன்ற இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வி.கே.என். கொலனியை சோந்தவர் ராஜசேகர் (வயது - 29). இவர் நேற்றுமுன்தினம் மெமோரியல் ஹோல் முன்பு மண்ணெண்ணை கானுடன் நின்று கொண்டிருந்தார். திடீரென இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வுகாணக் கோரி தீக்குளிக்க போகிறேன் எனக் கூறினார்.

தகவல் கிடைத்த பூக்கடை பொலிஸார், அந்த வாலிபரைப் பிடித்து, பொது அமைதிக்கு பங்கம் விளைவித்ததாக வழக்குப் பதிவு செய்து கைது செய்தனர். பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டார்.

இதேவேளை, இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து நெல்லை பொலிஸ் நிலையம் முன்பு ஜோதிடர் ஒருவர் தீக்குளிக்க முயற்சி செய்தார். அவரை பொலிஸார் கைதுசெய்தனர்.

நெல்லையில் நேற்று ஜோதிடர் நடராஜன் என்ற கருணாநிதி (வயது 44) பொலிஸ் நிலையம் முன்பு நின்று கொண்டு ''இலங்கை தமிழர்கள் வாழ்க, சிங்கள ஜனாதிபதி ராஜபக்ஷ ஒழிக, போரில் விடுதலைப் புலிகள் வெற்றிபெற வேண்டும்'' - என்று கோஷங்கள் எழுப்பினார். பின்னர் மண்ணெண்ணையை உடலில் ஊற்றி தற்கொலை செய்ய முயன்றார்.

இதைக்கண்ட பொலிஸார் விரைந்து வந்து தற்கொலை செய்ய முயன்ற நடராஜனைக் கைது செய்து மத்திய சிறையில் அடைத்தனர்.

# ஈழத் தமிழருக்காக நடத்தப்படும் முழு அடைப்புக்கு பா.ஜ.க. ஆதரவு

சென்னை, பெப்.3

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் நாளை நடத்தவுள்ள முழு அடைப்பு



போராட்டத்திற்கு பா.ஜ.க. முழு ஆதரவளிக்கும் - என்று அக்கட்சியின் மாநிலத் தலைவர் இல.கணேசன் கூறியிருக்கிறார்.

இது குறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு-

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் நாளை நடத்துவதாக அறிவித்துள்ள முழு கடையடைப் புக்கு பா.ஜ.க. ஆதரவு தருகிறது.

தற்போது பத்திரிகைகளில் வரும் செய்திகள், இலங்கையில் தவிக்கும் தமிழர்களை பாதுகாக்கவும், அவர்களுக்கு நிரந்தரமாக சம உரிமை பெற்றுத்தரவும் ஒவ்வொருவரும் தன் பங்குக்கு ஏதேனும் செய்ய வேண்டும் என்று கருதுகிறார்கள் என்பதை உணர்த்துகிறது. சிலர் உணர்ச்சி வசப்பட்டு தங்களை மாய்த்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள். 'செய் அல்லது செத்து மடி' என்பது ஏற்புடையதல்ல. மாறாக 'வாழ்ந்து லட்சியத்தை அடைந்து காட்டு' என்பதில் நாம் உறுதியுடன் இருக்க வேண்டும்.

அரசியல் கட்சிகளும், அமைப்புகளும் தம் பங்குக்கு செய்ய வேண்டியவைகளை செய்தும், மத்திய [illegible] அரசின் செயற்பா[illegible] திருப்திகரமாக இல்லை. எனவே மக்கள் அனைவரும் பங்கேற்கும் ஒரு சாத்வீகப் போராட்டம் நடத்துவதால் மக்களுக்கு தங்களது உணர்வுகளை வெளியிட ஒரு வடிகால் கிடைக்கும். இந்த அறிவிப்பை வெற்றிகரமாக்கிட மக்கள் தாங்களாக முன்வர வேண்டும். தங்களது ஆதரவை ஒன்றுபட்டு மத்திய அரசுக்கு உணர்த்த வேண்டும்.

பா.ஜ.கவின் தொண்டர்கள் இந்த முழு அடைப்புக்கு ஒத்துழைப்பார்கள். மக்கள் முன் வந்து தங்களது உணர்வை வெளிப்படுத்தும் வாய்ப்பு [illegible]து என்பதால் கட்சியின் தொண்டர்கள் தெருவில் இறங்கி எவரையும் வற்புறுத்த மாட்டார்கள்.

இது அச்சுறுத்தி வெற்றிகரமாக்கிய போராட்டம் என்கின்ற அவப்பெயர் வராது. ஆனால் அதே நேரத்தில், மாநில அரசும் தங்களது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒடுக்க முனைவதும் கூடாது. எந்தவிதமான வன்முறைச் சம்பவங்களும் நடைபெறாது. அமைதி காக்கும் பணியினை அரசு செய்யட்டும். ஆனால் போராட்டம் வெற்றி பெற்றால் அதன் காரணமான அரசியல் லாபம் யாருக்குப் போகும் எனக் கணக்கிட்டு தடுக்க முனைதல் கூடாது என அரசை வற்புறுத்துகிறேன்.

தமிழர்கள் அனைவரும் இலங்கை தமிழர்களைக் காக்கவும், அவர்களுக்கு சம உரிமை பெறவும் முனையும் விடயத்தில் ஒன்றுபட்டு நிற்போம் - என்றுள்ளது.

## அரச பணியாளர் சங்கமும் பங்கேற்பு

சென்னை, பெப். 03

இலங்கையில் போர் நிறுத்தம் செய்யக்கோரி ஈழத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் நாளை மறுதினம் நடத்தப்படவுள்ள முழு அடைப்புப் போராட்டத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் சங்கம் பங்கேற்கும் - என்று சங்கத் தலைவர் கு.பாலசுப்பிரமணியன் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

ஈழத்தில் கொன்று குவிக்கப்படும் தமிழர்களின் பாதுகாப்புக்காகப் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென தமிழக அரசியல் இயக்கங்கள், கலை உலகத்தினர், மாணவர் அமைப்புகள், [illegible] மற்றும் அனைத்து தொழிற்சங்கங்கள் என அனைவரும் மத்திய அரசை வலியுறுத்தி வருகிறார்கள்.

இருப்பினும், ஈழத்தில் நடைபெற்று வரும் நிகழ்வுகளில் எவ்வித மாற்றமும் இல்லை. அங்கு, அப்பாவித் தமிழர் சொல்லலொணாத் துயரத்துக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்.

இதையடுத்து, இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம், நாளை பொது வேலைநிறுத்தம் நடத்திடுமாறு தமிழக மக்களிடம் அறைகூவல் விடுத் துள்ளது. 07.02.09 அன்று கறுப்புக் கொடி ஊர்வலம் நடத்தவும் முடிவெடுத்துள் ளது. இவற்றில் தமிழ்நாடு அரசு பணி யாளர் சங்கம் பங்கேற்க முடிவு செய்துள்ளது - என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசின் கட்டுப்பாடுகளையும் மீறி தமிழகத்தில் நாளை முழு அடைப்பு

## ஈழ உறவுகளுக்காக அங்கு தமிழர்கள் கொந்தளிப்பு

கொழும்பு, பெப். 03

இலங்கையில் போர் நிறுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி ஈழத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் நாளை நடத்தப்படவுள்ள முழு அடைப்புப் போராட்டம் திட்டமிட்டபடி நடைபெறும் என்று ஈழத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

முழு அடைப்புப் போராட்டம் சட்ட விரோதமானது என்று தமிழக அரசு தவறான பிரசாரம் செய்கின்றது என்று கூறிய அவர் அதனை வன்மையாகக் கண்டித்துள் ளார்.

இதுகுறித்து நேற்று முன்தினம் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கையில் உடனடியாகக் போர் நிறுத்தம் ஏற்பட இந்திய அரசு முழுமையான முயற்சிகளை மேற்கொண்டு அப்பாவித் தமிழர்களின் உயிர்களைப் பாதுகாக்க முன்வர வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி பெப்ரவரி 4 ஆம் திகதி பொது வேலை நிறுத்தம் மேற்கொள்ளும்படி இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் வேண்டுகோள் விடுத்திருப்பது சட்ட விரோதமானது எனத் தமிழக அரசு தவறான பிரசாரம் செய்வதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

உச்சநீதிமன்றம் முழு அடைப்பு செய்வதற்கு எதிராகக் கூறியுள்ள கருத்தைத் திரித்துக் கூறி மக்களை மிரட்டுவதற்கு தமிழக அரசு முயல்கிறது. உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்புக்குப் பிறகுதான் மேற்கு வங்கத்திலும், கேரளத்திலும் சுய வேலை மறுப்புப் போராட்டங்களும், கடையடைப்புப் போராட்டங்களும் நடந்திருக்கின்றன என்பதைத் தமிழக அரசின் கவனத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழ் நாட்டிலுள்ள வணிகர்கள், தொழிலாளர்கள், மீனவர்கள், மாணவர்கள், திரைப்படத் துறையினர் உள்ளிட்ட அனைத்து தமிழர்களும் எதிர்வரும் 4 ஆம் திகதி தங்களுக்குத் தாங்களே சுயவேலை மறுப்புச் செய்து தங்கள் இல்லங்களிலேயே இருக்குமாறு மிக்க பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

**ஜனநாயக உரிமைகளை பறிக்கும் செயல்**

பொது வேலை நிறுத்தத்தை முறியடிக்க தமிழக அரசு தவறான பிரசாரத்திலும், மிரட்டல் நடவடிக்கையிலும் ஈடுபட்டு இருப்பது அப்பட்டமான ஜனநாயக உரிமைகளைப் பறிக்கும் செயலாகும்.

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக அனைத்துத் தமிழர்களும் பொது வேலை நிறுத்தம் வெற்றிபெற துணை நிற்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

போராட்டங்களின் போது எந்த இடத்திலும் சிறு அளவு வன்முறை ஏற்படாமலும், பொதுச்சொத்துக்களுக்குச் சேதம் இல்லாமலும் கவனமாகப் பார்த்துக் கொள்ளும்படி அனைவரையும் வேண்டிக் கொள்கிறேன்.

பொது வேலைநிறுத்தம், கறுப்புக்கொடி ஊர்வலம் ஆகியவற்றை நடத்துவது குறித்து இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மற்றும் அமைப்புக்களின் மாவட்டப் பொறுப்பாளர்கள் அவசரமாகக் கூடித் திட்டங்கள் வகுத்துச் செயற்படுமாறு வேண்டிக் கொள்கிறேன்-என்றுள்ளது.

அதேவேளை, ஈழத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் நடத்தவுள்ள முழு அடைப்பு சட்ட விரோதமானதல்ல என்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் டாக்டர் ராமதாஸும் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக இலங்கைத்தமிழர் பாதுகாப்பு இயக்கம் அழைப்பு விடுத்துள்ள பொது வேலை நிறுத்தத்தில் தி.மு.க., அ.தி.மு.க., காங்கிரஸ், சி.பி.எம். ஆகிய கட்சிகள் பங்கேற்க வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் நாளை நடத்த உள்ள முழு அடைப்பு போராட்டத்திற்கு பி.ஜே.பி. ஆதரவு அளிக்கும் என்று அக்கட்சியின் மாநிலத் தலைவர் இல.கணேசன் கூறியிருக்கி றார்.

## மாணவர்களுக்கு உதவி

வண்ணை, பெப்.03

யாழ்.சமாதானத்திற்கும், நல்லிணக்கத்துக்குமான நிலையய் பணியாளர்களால் முன்னெடுக்கப்படும் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான சமாதான கல்விக் கருத்தரங்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை உயரப்புலம், ஞானபாலன் வித்தியாலயத்தில் நடைபெற உள்ளது.

நண்பகல் 12 மணியில் இருந்து 2 மணி வரை நடக்கும் இரு மணி நேரக் கருத்தரங்கில் சமாதானத்தின் முக்கியத்துவம் சிறுவர் சிறுமிகளுக்கு எடுத்துரைக்கப்படுமென பணியகப் பொறுப்பாசிரியை தெரிவித்தார்.

## கப்பலில் எடுத்துவரப்பட்ட பொருள்களுக்கு விலை நிர்ணயம்

யாழ்.மாவட்டத்திற்கு கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட அத்தியாவசியப் பொருள்களிற்கு புதிய விலை நிர்ண[illegible]கப்பட்டுள்ளதாக அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

இப்பொருள்கள் மாவட்டத்திலுள்ள 24 ப.நோ.கூ. சங்கங்களிற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது. இதற்கான வங்கற் கட்டளைகளை சங்கத்தினர் இன்று மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

இவ்வகையில் ஒரு கிலோ சிவப்பு நாட்டரிசி 79.50 ரூபா, 77.50 ரூபாவிற்கும், ஒரு கிலோ சீனி 77 ரூபா, ஒரு கிலோ கோதுமை மா 72 ரூபா, ஒரு கிலோ பருப்பு 167 ரூபாவிற்கும் கட்டுப்பாடின்றி விநியோகிக்குமாறும் எக்காரணம் கொண்டும் விலை அதிகரித்து விற்பனை செய்வதற்கு அனுமதிக்கப்படவில்லையெனவும் அறிவித்தார். (1-7)

## செலான் வங்கி ஊழியர்கள் மக்களுடன் "வாசலுக்கு வாசல்" நேரடிச் சந்திப்பு நடைமுறை

இரு தசாப்த காலமாக மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான செலான் வங்கியானது தொடர்ந்துவரும் காலங்களிலும் அவ்வாறே சிறப்புற தனது பணியைத் தொடர திடம் கொண்டுள்ளதுடன் செலான் வங்கியின் மூலம் மக்களுக்கான சகல கொடுக்கல் வாங்கல்களும் வழமை போல் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை மத்திய வங்கியின் ஆலோசனைக்கு உட்பட்டு, புதியதோர் தலைமைத்துவத்துடனும், நிர்வாக சபையினருடனும், சிறந்த முகாமைத்துவத்துடனும் கூடிய பலம்பெற்று ''ஜயமக'' என்னும் வெற்றிப்பாதையில் புதிய தகவல்களை மக்களுடன் பகிர்ந்துகொள்ள செலான் வங்கி ஊழியர்கள் மக்களின் இல்லம் நோக்கி கடந்த சனிக்கிழமை ''உள்ளத்திற்கு உள்ளம், வாசலுக்கு வாசல்'' என்ற தொனிப் பொருளுடன் சந்திப்பொன்றை நடத்தினர். அந்தச் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு உறுதியளிக்கப்பட்டது.

அன்புடன் அரவணைக்கும் வங்கியான செலான் வங்கி, மேலும் உறுதியான நிலையில் தற்போது தனது வாடிக்கயைாளர்களுக்கு புதிய பலத்துடன் அதியுயர் மட்டத்தில் வங்கிச் சேவைகளை வழங்கிக் கொண்டிருக்கிறது என்ற செய்தியும் அப்போது எடுத்துக் கூறப்பட்டது.

அன்றைதினம் மக்களுக்குச் செலான் 'ஜயமக' சீட்டிழுப்பு ஸ்டிக்கர் ஒவ்வொன்றையும் வழங்கியிருந்ததுடன், இச்சீட்டிழுப்பில் தகுதிபெறும் 10பேரில், ஏற்கனவே உள்ள வாடிக்கையாளராயின் 15,000 ரூபாவை கணக்கில் வரவு வைப்பதுடன், புதியவர்களுக்கு கணக்கொன்றைத் திறந்து அதில் 10,000ரூபாவை வைப்பில் இடுவதாகவும் கூறியிருந்தனர்.

மேற்படி சீட்டுழுப்பின் வெற்றி எண்களாக 19287, 10589, 52704, 24402, 28761, 25240, 67141, 20233, 67230, 76175 தெரிவு செய்யப்பட்டன. வெற்றியீட்டியோரை செலான்வங்கி கிளையுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

## தலைநகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் 4 ஆயிரம் பொலிஸாரும் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் கொழும்பின் வான் பகுதியை பாதுகாப்பதற்கான நடவடிக்கையை விமானப்படையினர் மேற்கொண்டுள்ளனர்.

பம்பலப்பிட்டியிலிருந்து மருதானை வரையிலான ரயில் சேவைகள் நேற்று நள்ளிரவு முதல் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பாக நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் நிமல மெடிவகே தெரிவித்தவை வருமாறு:-

வடபகுதியில் பாரிய தோல்வியை சந்தித்துள்ள தருணத்தில் விடுதலைப் புலிகள் கொழும்பில் சுதந்திர தின நிகழ்வுகளை குழப்ப முயலலாம் என்பது தெளிவாகியுள்ளது.

கடந்த சில நாள்களில் பொலிஸாரும் முப்படை யினரும் பல கிளைமோர் குண்டுகளையும் தற்கொலை அங்கிகளையும் கண்டு பிடித்துள்ளனர். இதன் காரணமாகச் சுதந்திர தின நிகழ்வின் போது கொழும்பிற்கும் அதன் புற நகர்ப் பகுதி களுக்கும் ஆகக் கூடுதலான பாதுகாப்பை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

61 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் காலி முகத் திடலில் இடம்பெறும். இதற்குப் போதிய பாதுகாப்பை உறுதிச் செய்வதற்காகப் பொலிஸாரும் முப்படையினரும் விசேட போக்குவரத்துத் திட்டத்தை உருவாக்கியுள்ளனர்.

கொள்ளுப்பிட்டி செரெமிக் சந்தியிலிருந்து இராணுவத் தலைமையகம் வரையிலான பகுதி மூன்றாம், நான்காம் திகதிகளில் முழுமையாக மூடப்படும்.

கடந்த வருடம் இடம்பெற்ற சம்பவங்களை கருத்திற்கொண்டு பம்பலப்பிட்டி முதல் மருதானை வரையிலான ரயில் சேவை நேற்றிரவு 12 மணியுடன் இடை நிறுத்தப்பட்டது. நான்காம் திகதி மாலை வரை இந்தத் தடை நீடிக்கும் -என்றார்.

நேற்றுக் காலை முதல் பிற்பகல் வரை நடத்தப்பட்ட தேடுதலில் 28 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

பொறல்லை, மருதானை, கொழும்பு -7 மற்றும் கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, மட்டக்குளி, கொட்டாஞ்சேனை ஆகிய பிரதேசங்களில் நேற்று திங்கட்கிழமை நடத்தப்பட்ட தேடுதலில் வாகனங்கள் அனைத்தும் வழிமறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டன.

பயணிகளின் பஸ்களும் வழிமறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டன. இதன் போது ஐந்து பெண்கள் உட்பட 28 தமிழர்கள் கைதாகினர் என்று தெரிவிக்கப்படு கிறது.

விசேட அதிரடிப்படையினரும் இராணுவத்தினரும் இணைந்து நடத்திய தேடுதலில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். பலர் நீண்ட நேரமாக வீதி ஓரமாக தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். கைதான இளைஞர்கள், யுவதிகள் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-சி)

## கண்ணீர் அஞ்சலி



எமது கலாமன்ற கௌரவ உறுப்பினர் தம்பையா தயாபரன் அவர்களது பாசமிகுதாயார்

**திருமதி**

**தம்பையா நாகம்மா**

அவர்களது மறைவினால் துயருற்றிற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா ஈழத்துச் சிதம்பர தில்லைக்கூத்தன் திருவடி சேர பிரார்த்திக்கின்றோம்.

கிழவன் காடு கலாமன்றம்,
காரைநகர்.

நிர்வாக சபையினர்
ஆசிரியர்கள், மாணவர்கள்

## கண்ணீர் அஞ்சலி

**அமரர்**

**ஆ.நவநீதகிருஷ்ணன்**

(ஓய்வுபெற்ற தபால் தந்தி பொறியியலாளர்)

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



இல.28/3, திருமகள் வீதி,
அரியாலை மத்தி, யாழ்ப்பாணம்.

வேதாயகுமாரன்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா பரமானந்தம்

(ஓய்வுபெற்ற ரயில் நிலைய அதிபர்)

மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் பட்டியோலை, உடுவில் தெற்கு, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பரமானந்தம் நேற்று (02.02.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், கலாநந்தி, யோகானந்தி, பிறேமானந்தன் (பிரான்ஸ்), தயானந்தி (லண்டன்), ஜீவானந்தி, மகேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறீதரன், சிவராணி (பிரான்ஸ்), ராஜ்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நல்லம்மா, சின்னம்மா, செல்லம்மா, திலகவதி, திருநாவுக்கரசு, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராஜேஸ்வரி, காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் யோகேஸ்வரி, ஞானேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சிவனேசசுந்தரம், சிவபாலசுந்தரம் மற்றும் சிவஞானசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் பிரசாந்தன், ரிசானி, ரிசாந், கஜன், லவன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2009) செவ்வாய்க்கிழமை ந.ப. 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பட்டி ஓலை,
உடுவில் தெற்கு, உடுவில்.

தகவல்:
மனைவி.

### மடுத்தீஸ் சின்னப்பு

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், வர்த்தகத் திணைக்களம், கச்சேரி)



ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் பண்டியன்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட மடுத்தீஸ் சின்னப்பு நேற்று (02.02.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மடுத்தீஸ்-றோசம்மா தம்பதியினரின் மூத்த மகனும், மேரி மெக்டலீனின் (மலர்) பாசமிகு கணவரும், மெரினா, அனஸ்ரீன் (மெக்கானிக்), கனிஸ்ரெலா, றுமினா, டொறீனா (கியுடெக்- கரித்தாஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தாசன், அனித்தா ஜீவன் ஆகியோரின் மாமனும் ஏஜினஸ்சகாணா(யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடம்), ஜனாத்-அபிசேக் (புனித பத்திரிசியார் கல்லூரி), மிர்ஜா, ஒபினா (புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயம்), அஜித்டார்வின் (புனித பத்திரிசியார் கல்லூரி), அஜினத், அஜித்தா, அஜிணோல்ட், அஜிஸ்ரா, கனிஜீவனா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற அருளப்பு, ஜக்கினேசு மற்றும் பூமணி ஆகியோரின் சகோதரனும், டொமினிக்கா, விக்ரர், ஜெராட், நெல்சன், பசில்மேரி, அனா, மொறின், சூட்டி அனட், எட்வேட் ஆகியோரின் மாமனும், தவம், ராசரத்தினம், குணம், ராசேந்திரம், ராசன் ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று 03.02.2009 பி.ப. 3 மணிக்கு பண்டியன்தாழ்விலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பின்னர் பூதவுடல் கொய்யாத்தோட்டம் கிறிஸ்த்துராசர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி நடைபெற்று புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6/2, புனித அன்னம்மாள் வீதி,
பண்டியன்தாழ்வு.

தகவல்:
குடும்பத்தினர்
(டொறின்- மகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்புப் பகுதியில் நேற்றும் ஷெல் தாக்குதல்

கொழும்பு பெப். 03

வன்னிப் பகுதியில் ஞாயிறு, திங்கட்கிழமை இடம்பெற்ற கடுமையான பீரங்கி மற்றும் ஷெல் தாக்குதல்களில் வைத்திய சாலை, தேவாலயம், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பணிமனை என்பன நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 8 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

இவ்வாறு இணையத்தளங்கள் நேற்றிரவு செய்தி வெளியிட்டன. அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு:

முல்லைத் தீவிலுள்ள புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு அருகில் உள்ள செஞ்சிலுவைக் குழுவின் பணிமனை மீது நேற்று மதியம் 12 மணியளவில் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 12 பேர் காயமடைந்தனர்.

புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததில் 2 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்கள் இராசரத்தினம் (வயது 48) மற்றும் ஆர். பிரதீபன் (வயது 30) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கோம்பாவில் பகுதியை நோக்கி நேற்று நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் 3 பொதுமக்கள் காயமடைந்தனர். அத்துடன் சுதந்திரபுரம் பகுதியை நோக்கி நேற்று முழு நாளும் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் 2 பொதுமக்கள் உயிரிழந்ததுடன், 11 பேர் காயமடைந்தனர்.

உடையார் கட்டுப்பகுதியில் நேற்று நடத்தப்பட்ட ஷெல் வீச்சில் 2 பேர் உயிரிழந்தனர். தேவிபுரம் பகுதியை நோக்கி நேற்று நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் 2 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 6 பேர் காயமடைந்தனர்.

## கருணா குழு உறுப்பினர் செங்கலடியில் கொலை!

மட்டக்களப்பு,பெப்.03

மட்டக்களப்பு, ஏறாவூர், செங்கலடிப் பகுதியில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் கருணா குழு உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சிகாமணி மோகனதாஸ்(வயது 31) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவர்.

இவர் தமது அலுவலகத்தில் இருந்து வீட்டிற்குச் சென்றுகொண்டிருந்த வேளையில் எல்லை வீதியில் வைத்து இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது.

## வன்னி மக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு :

இந்திய அரசு ஏற்கனவே அறிவித்ததுபோல், வன்னியில் மோதல்களில் சிக்குண்டுள்ள மக்களுக்கு உதவும் பொருட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ள ஒரு பகுதி நிவாரணங்களே இந்த மருத்துவப் பொருள்கள்.

இலங்கைக்கான இந்தியப் பிரதித் தூதுவர் விக்ரம் நிஸ்ரி, இலங்கை சுகாதார சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவிடம் இந்த மருந்துப் பொருள்களைக் கையளித்தார்.2 கோடி ரூபா பெறுமதியான மருந்துப் பொருள்கள் கையளிக்கப்பட்டன.

இந்த மருந்துப் பொருள்கள் வன்னியில் மோதல்களில் சிக்கியுள்ள மக்களுக்கு ஓரளவுக்காவது உதவும் என இந்திய அரசு எதிர்பார்க்கின்றது - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)


INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Science and Technology

MPCS Building,
127, K.K.S.Road, Jaffna, Sri Lanka.
Office : 021 222 3641
Fax : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்

Diploma Courses
- Diploma in DTP
- Diploma in MS Office
- Diploma in Hardware Technology

On-Line Class
- Diploma in PC Application & Office Management (MS Office syllabus included)

Work Shop Classes
- PC Maintenance & Hardware
- Adobe Photoshop

Certificate Courses
- MS Word
- MS Excel
- MS Access
- CorelDRAW
- PageMaker
- Visual Basic
- Java
- HTML & J Scripts
- Pascal
- C/C++

விண்ணப்பப்படிவங்களுக்கும், பதிவுகளுக்கும் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்

வாரநாள் வகுப்புக்கள் ஆரம்பம் : 20/02/2009
வாரஇறுதி வகுப்புக்கள் ஆரம்பம் : 21/02/2009

சகல கற்கை நெறிகளுக்குமான பதிவுக் கட்டணம்: 250/-

Centre for Information Technology
-Executive Officer


# தடுத்து வைக்கப்பட்டுள்ள கணவன்மார், பிள்ளைகளை விடுவிக்கக்கோரி நேற்று முதல் முஸ்லிம்கள் உண்ணாவிரதம்

அம்பாறை பெப். 03

அம்பாறை, பொத்துவில் பிரதேச செயலகம் முன்பாக நேற்றுமுதல் நூற்றுக் கணக்கான முஸ்லிம்கள் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டமொன்றை ஆரம்பித்திருக்கின்றனர்.

கடந்த 6 மாதகாலமாக மொனராகலைச் சிறைச்சாலையில் எதுவித குற்றங்களுமின்றித் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமது கணவன்மார், பிள்ளைகள் ஆகியோர் உட்பட தமது உறவினர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் அல்லது அவர்களை பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டும் எனக் கோரியே முஸ்லிம் பெண்கள், குழந்தைகள் உட்பட நூற்றுக் கணக்கானோர் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று முதல் ஆரம்பித்திருக்கின்றனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காரணமின்றிச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் கடுமையான சித்திரவதைக்குள்ளாக்கப்படுகின்றனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஈழத் தமிழருக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலமாக அறிந்து தினமும் கவலையுடன் இருந்தார் முத்துக்குமார் தீக்குளித்ததை நினைத்து மிகவும் கவலையுடன் காணப்பட்டார். இதனால் மனமுடைந்த எனது கணவன் ரவி தனது உடலில் எண்ணையை ஊற்றித் தீக்குளித்தார் என்றும் தெரிவித்துள்ளார். ஆனால் பொலிஸார் கூறுவது போன்று எனக்கும் அவருக்கும் எதுவிதத்தகறாறும்இல்லை - என்று மேலும் தெரிவித்துள்ளார். (அ-சி)

## நிலத்துக்கடியில்....,

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது விடுதலைப் புலிகளின் தலைவர்பிரபாகரன் மறைந்திருந்த இடமென்றும், இந்த இடத்தின் பாதுகாப்பிற்காக பதுங்கு குழிகளும் அமைக்கப்பட்டிருந்தன என்றும் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்திருக்கின்றது.

கடும் சண்டைகளின் பின்னர் கைப்பற்றப்பட்ட அந்த இடத்தில் நடத்தப்பட்ட தேடுதலின் போது பலவிதமாண பொருள்களையும் விடுதலைப் புலிகளின் 12 சடலங்களையும் இராணுவத்தினர் கைப்பற்றி இருக்கின்றனர் என்றுழ் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்திருக்கின்றது. (அ-சி)

## உடையார்கட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சமரில் இராணுவத்தினர் பலர் படுகாயமடைந்தனர் என்றும் இராணுவத்தினர் ஐவர் காணாமற்போயுள்ளனர் என்றும் படைத் தரப்பில கூறப்பட்டுள்ளது.

படைத்தரப்பால் அறிவிக்கப்பட்ட பாதுகாப்பு வலயத்தில் இருந்து விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக ஆட்லறி ஷெல் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர் என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இச்சமர் செவ்வாய்க்கிழமை அதிகாலை முதல் மாலை 6 மணிவரை தொடர்ந்தது. உடையார்கட்டுக்குளம் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகள் படைத் தரப்பால் கைப்பற்றப்பட்டன. அச்சமரில் 7 புலிகள் உயிரி ழந்தனர். வெவ்வேறு சமர்களில் மேலும் 20 புலிகள் உயிரிழந்தனர் என்றும் படைத்தரப்பில் அறிவிக்கப்பட்டது.

## வைத்தியசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும் வெளியாகியுள்ள செய்திகள் வெறும் வதந்திகள் என்று அவர் தெரிவித்துள்ளார். வன்னியில் இராணுவ நட வடிக்கைகள் தொடர்கின்றன என்றும் விடுதலைப் புலிகள் கண்மூடித்தனமாக ஆட்லறித் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர் எனவும் இதில் ஒரு ஷெல் அந்தப் பகுதிக்குள் வீழ்ந்திருக்கலாம் என்றும் அவர் மேலும் கூறினார். (அ-சி)

## கோத்தபாயவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணவேண்டும். அச்சுறுத்தல், மிரட்டல் மூலமாக அல்ல'' என ஜேர்மனியின் வெளிவிவகார அமைச்சக அதிகாரியொருவர் பேர்லினில் கூறினார்.

கொழும்பில் உள்ள ஜேர்மன் தூதுவர் ஜேர்கன் வீரத், ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு பேசுகையில் அவரது கொலையைக் கண்டித்துப் பேசினார். அதன் பின்னர் அவர் வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டிருக்கிறார். (அ)


CHEMISTRY
- N.VAKEESAN -
ஆரம்பமாகின்றது---
2011 : Wed-3pm.
மீட்டல்: Inorganic(Thu 3pm)
இராமநாதன் வீதி
(பல்கலைக்கழகம் முன்பாக)


## ஆஸ்பத்திரியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்துள்ள பாதுகாப்பு வலயப் பிர தேசங்களான சுதந்திரபுரம், வள்ளிபுனம், உடையார்கட்டு பகுதிகள் நோக்கி இடம்பெறும் ஷெல் தாக்குதல்களில் காயமடைபவர்களை வைத்திய சாலைகளுக்கு எடுத்துவருவதில் உள்ள சிக்கல் நிலை குறித்து சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் காந்தலியனகேயுடன் தொடர்பு கொண்டு தெரியப்படுத்தினேன். அவருக்கு தகவல் தெரிவித்து இரண்டு மணிநேரத்தில் ஆஸ்பத்திரி மீது ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று டாக்டர் சத்தியமூர்த்தி மேலும் தெரிவித்தார்.

ஷெல்தாக்குதல் காரணமாக வைத்திய சாலையில் உள்ள 50 நோயாளர்களை காப்பாற்ற முடியாமல் போய்விடும். மக் கள் தொடர்ச்சியாகக் காயப்பட்டுக் கொண்டி ருப்பதனால் எங்களால் ஒன்றுமே செய்ய முடியாமல் இருக்கின்றது.

வைத்தியசாலைக்கு வெளியில் வீழ்ந்த ஷெல்களினால் 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் 6 பேர் மரணமடைந் துள்ளனர்.

இதேவேளை இறந்தவர்களின் சடலங் கள் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

அந்த சடலங்களை உறவினர்கள் எடுத்துச் செல்வதில் சிக்கல்களை எதிர்நோக்கி உள்ளதால் அவற்றை அடக்கம் செய்ய உதவுமாறு உறவினர்கள் கேட்டுள்ளனர் என்றும் - டாக்டர் சத்தியமூர்த்தி சொன்னார். (அ-1-07)

## வன்னிப் பகுதியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேசவன் (02) ஆகியோரும், நாகேந்திரனின் மகளாகிய உதய சீலன் சசீதா (30), அவரது குழந்தைகளான உதய சீலன் உசான் (10), உதயசீலன் மதியரசி (07) ஆகியோரும் நாகேந்திரனின் மருமகளாகிய கிருஷ்ணமூர்த்தி சிந்துஜா (16), நாகேந்திரனின் சகோதரரின் பிள்ளைகளாகிய இராசேந்திரன் ரபீபன் (16) ஆகியோரைக் காணவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவினரிடம் முறையிடப்பட்டுள்ளது.

இவர்கள் வன்னிப் பிரதேசத்தில் இருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்வதற்காகப் படகில் ஏறிச் சென்றனர் என்றும், அதன் பின்னர் அவர்களுடன் தொடர்பு எதுவும் இல்லையென்றும் இவர்கள் எங்குள்ளார்கள் என்பது தெரியாமல் இருக்கின்றது என்றும் நாகேந்திரன் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். இவர்கள் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்துத் தருமாறு அவர் மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளிடம் கோரியுள்ளனர்.

காணாமல் போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள இவர்கள் தொடர்பான தகவல்கள் தெரிந்திருந்தால், அதனை மனித உரிமைகள் ஆணைக்குழுவினருக்குத் தெரிவித்து உதவுமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா மாவட்ட இணைப்பதிகாரி, பாதுகாப்புத் துறை அதிகாரிகள், யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை மாவட்டங்களில் உள்ள சிவில் அதிகாரிகள் மற்றும் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-சி)

## புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதுக்குடியிருப்பு மருத்துவமனையின் சிறுவர் விடுதி முழுமையாக நிரம்பியிருந்த நிலையில் அங்கு ஷெல்கள் வீழ்ந்து வெடித்துள்ளன என ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு அலுவலகப் பேச்சாளர் கோர் டென் வெய்ஸ் தெரிவித்துள்ளார்.

மருத்துவமனையில் உள்ள தமது பணியாளர்களைத் தாம் இறுதியாகத் தொடர்பு கொண்ட வேளை அவர்கள் இறந்தவர்களின் உடல்களை எண்ணிக்கொண்டிருக்கின்றனர் எனத் தெரிவித்தனர் என்றும் ஐ.நா. அதிகாரி வெய்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வைத்தியசாலை தாக்கப்பட்டமை குறித்து தாம் அதிர்ச்சியடைந் துள்ளார் என்று தெரிவித்துள்ள செஞ்சிலுவை சர்வதேசக்குழுவின் கொழும்புப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் டோல் கஸ்பெலர், ஒருவாரகாலத்துக்குள் மருத்துவமனை இரண்டாவது தடவையாக தாக்கப்பட்டுள்ளதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

மருத்துவமனையை இலக்குவைத்து ஷெல் தாக்குதல்கள் ஏன் நடத்தப்படுகின்றன என்பது தனக்குப் புரியவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நோயாளர்கள், மருத்துவப் பணியாளர்கள், மருத்துவ நிலையங்கள் அனைத்தும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களின் கீழ் பாதுகாக்கப்பட வேண்டியவை என்பதை சுட்டிக்காட்டியுள்ள ஐக்கிய நாடுகளின் பேச்சாளர், எந்தக் காரணத்திற்காகவும் இவற்றின் மீது தாக்குதலை மேற்கொள்ள முடியாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மூன்று தடவைகள் தாக்குதல்களுக்கு உள்ளானது எனவும், பெண்கள், சிறுவர்கள் பிரிவு மற்றும் சமையலறை என்பன தாக்கப்பட்டன என்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் பேச்சாளர் சரசி விஜயரட்ணவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டும், 20 பேர் காயமடைந்தும் உள்ளனர் என்றும் அவர் உறுதிசெய்துள்ளார். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.02.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உதயன்
நற்சிந்தனை
உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக் காதே. அப்படி நினைப்பது ஆன்மீகத்துக்கு முற்றிலும் முரண்பட்டது

க.பொ.த.உயர்தர
# கல்விச்சுடர்
03.01.2009 செவ்வாய்க்கிழமை
Special Guidance For A/L 2009&2010

க. பொ.த உயர்தர மாணவர்களுக்கென தனியாக வெளிவரும்
கல்வி இணைப்பிதழ்

பொருளியல் மாணவர்களுக்கான விசேட நடை முறை விடய வெளியீடு- 6 ம்பக்கத்தில்.

## காப்பிடப் பட்ட ( எண்ணெய்க் கொள்வனவு ) உடன்படிக்கையும் எண்ணெய்விலையும்

இன்று எண்ணெய் விலை பற்றியும் எண்ணெய் தொடர்பான ஹெட்ஜிங் () உடன்படிக்கை பற்றியும் எல்லோராலும் பேசப்பட்டு வருகின்றதே. இந்த எண்ணெய்ப் பிரச்சினை உயர்நீதிமன்றம் தலையிடும் அளவுக்கு முக்கிய விடயமாகி விட்டது. இதுபற்றி மாணவர்களுக்குத் தெளிவான விளக்கத்தை அளிப்பதற்காக ஆசிரியர் முரளிதாஸ் இந்தக் கட்டுரையை வரைந்துள்ளார். இது 6 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இது குறிப்பாக வர்த்தக மற்றும் கலைப் பிரிவு மாணவர்களுக்கு பரீட்சையில் கைகொடுக்கும் என்பது கல்விச் சுடரின் நம்பிக்கை. இக்கட்டுரையை உதயன் - கல்விச் சுடருக்கு விசேடமாக வழங்கிய ஆசிரியர் முரளிதாஸ் மாணவ உலகின் நன்றிக்குரியவர். கல்விச் சுடரும் அவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
General Certificate of Education (Advance.Level) Model Examination - 2009 August

## பொருளியல் - 1

ஆசிரியர் :V.முரளி (Eco.SPL). M.A( Eco)

கடந்தவாரத் (27.01.2009) தொடர்ச்சி.......

பகுதி - 11

இப்பகுதியிலுள்ள "அ" பிரிவிலிருந்து இரண்டு வினாக்களையும், "ஆ" பிரிவிலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிந்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

### பிரிவு "அ"

01. 1)பொருளியலில் அருமை என்னும் எண்ணக்கருவை விளக்குக.
2)அமையச் செலவானது வழக்கமாக நேர்க்கணியமானதாகும். எனினும், சில சந்தர்ப்பங்களில் அமையச் செலவானது பூச்சியமாகக் காணப்படும். இவ்வாறான சந்தர்ப்பங்கள் யாவை?
3)நடைமுறைக்குச் சாத்தியமான ஆக்க இயல்தகவு வளையி ஒன்றினை வரைந்து அதன் சந்தர்ப்பச் செலவினை நிறுவுக.

02. ஒரு பொருளாதாரம் தனக்குக் கிடைக்கத்தக்க வளத்தைக்கொண்டு 400 மில்லியன் அலகு கோதுமை உற்பத்தியினையோ அல்லது 150 மில்லியன் அலகு புடைவை உற்பத்தியினையோ மேற்கொள்ள முடியும் எனக் கொள்க.
1) உற்பத்தி இயல்தகவு எல்லை ஒன்றினை வரைக.
2) பொருளாதாரம் எப்பண்டத்தின் உற்பத்தியில் தங்கியிருப்பது சிறந்தது என நீர் கருதுகிறீர்? நிறுவிக் காட்டுக.
3) புடைவை உற்பத்தியில் 100 மில்லியன் அலகும், கோதுமை உற்பத்தியில் 300 மில்லியன் அலகும் என்ற உற்பத்திச் சேர்க்கை இடம்பெறுகிறது. எனின், இதிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது?
4) பூரண சிறப்புத் தேர்ச்சி என்றால் என்ன? உற்பத்திச் சாத்திய வளையியில் விளக்குக.
5) பொருளாதாரமானது 15% வளர்ச்சி அடைகின்றதாயின், இதனை உற்பத்தி இயல்தகவு எல்லையில் விளக்குக.

03. ஒரு பொருளின் சமநிலை விலை 10 ரூபாவாக இருக்கும்போது சமநிலைத் தொகை 400 அலகுகள் ஆகும். சமநிலை விலையில் கேள்வியின் நெகிழ்ச்சிக் குணகம் 2 ஆகவும், நிரம்பல் நெகிழ்ச்சிக் குணகம் 0.5 ஆகவும் உள்ளது. இப்பண்டத்திற்கு அரசு 4 ரூபாவை மானியமாக வழங்குகின்றபோது இம் மானியம் வழங்கல் காரணமாக சமநிலை விலை, தொகை என்பவற்றைக் காண்க.
1) மானியத்தின் பின் புதிய சமநிலை விலை, தொகை என்பவற்றைக் காண்க.
2) மானியத்தின் பின் உற்பத்தியாளன், நுகர்வோன் மிகை யாது?
3) அரசாங்கத்திற்கு ஏற்படும் மொத்த மானியச் செலவு யாது?
4) நுகர்வோர், உற்பத்தியாளர் ஆகியோர் ஓர் அலகிற்குப் பெறும் மானியத்தின் அளவு யாது?

04. நீர் கற்ற பொருளாதார எண்ணக்கருக்களைப் பயன்படுத்திப் பின்வருவனவற்றை விளக்குக.
1) 15% ஆல் விலை அதிகரிக்கின்றபோது அ் பண்டத்தின் உற்பத்தியாளரது வருமானமும் 15% ஆல் அதிகரிக்கின்றது. ஙு பண்டத்தின் உற்பத்தியாளரது வருமானம் 20% ஆல் குறைவடைகின்றது.
2) X பண்டத்தினது விலை 12% ஆல் குறைவடைகின்றபோது, Y பண்டத்தினது கேள்வி 10% ஆல் அதிகரிக்கின்றது. ஆனால், Z பண்டத்தின் கேள்வி 15% ஆல் அதிகரிக்கின்றது. T பண்டத்தின் கேள்வி 8% ஆல் வீழ்ச்சியடைகின்றது.
3) பொதுவாக மக்களது வருமானம் அதிகரிக்கின்றபோது ஒரு பகுதி மக்கள் X பண்டத்திற்கான கேள்வியில் 15% அதிகரிப்பை ஏற்படுத்த மற்றைய பிரிவினர் 8% பண்டத்திற்கான கேள்வியைக் குறைத்தனர்.

### பிரிவு "ஆ"

இப்பிரிவிலிருந்து இரண்டு வினாக்களைத் தெரிவுசெய்க.

05. 1) தன்னிச்சையான நுகர்வு, தன்னிச்சையான முதலீட்டு மட்டம் என்னும் கருத்தை விளக்குக.
2) பேரண்டப் பொருளாதாரத் தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன.
$C = 180 + 0.8\ Yd$ $I = 150$ $G = 250$ $T = 100$
C - நுகர்வு, I - முதலீடு, G - அரச செலவு.
1. சமநிலை தேசிய வருமான மட்டம் யாது?
2. முதலீடானது 50M ஆல் அதிகரிக்கின்றபோது சமநிலை ம்ட்டம் எவ்வாறு மாற்றமடையும்?
3. நிறை தொழில் மட்டத் தேசிய வருமானம் 3250M ஆக இருப்பதற்கு முதலீடானது எவ்வளவால், எவ்வாறு மாற்றமடைய வேண்டும்?

06. 1) மூடப்பட்ட பொருளாதாரம் ஒன்றின் வருமான வட்டப் பாய்ச்சல் மாதிரி ஒன்றை வரைந்து அவற்றின் பிரதான எடுகோளை விளக்குக.
2) தேசிய வருமானக் கணிப்பீட்டில் காணப்படும் குறைபாடுகள் யாவை?
3) தேசிய வருமானத் தரவுகள் அபிவிருத்தியை அளவிடப் போதுமானதா?


07. 1) நிறைபோட்டிச் சந்தை ஒன்றில் சந்தைத் தோல்வி (Marlet failure) எவ்வாறு ஏற்படுகின்றது? விளக்குக.
2) எல்லைச் செலவு (Marginal cost), சராசரி மாறும் செலவு (Average Variable cost) - வேறுபடுத்துக.
3) அளவுத்திட்ட சிக்கனங்களும் சிக்கனமின்மையும் - விளக்குக.
4) செலவுக் கோட்பாட்டில் உத்தம இயலளவு, மிகை இயலளவு - விளக்குக.

08. 1) அரச பாதீட்டின் அரசாங்க சேமிப்பு (எணிதிஒனுரணட் ஓுணணு குச்திடிணஞ்) என்றால் என்ன? அதன் முக்கியத்துவம் யாது?
2) பாதீட்டுப் பற்றாக்குறை என்றால் என்ன? அதனை எவ்வாறு நிதியீட்டம் செய்யலாம்?
3) வெளிநாட்டுக் கடன்கள், உதவி என அழைக்கப்படுகின்றது - விளக்குக.
4) அரசிறைத் தொழிற்பாட்டின் விரிவுத்தாக்கம் - விளக்குக.

120 நிமிடங்களுக்குள் செய்துமுடிக்க முயற்சிக்கவும்...

### பொருளியல் மாணவர்களுக்கு (27.01.2009 இன் தவறுகள்)

* வினா இல - 04 நேரடிச் செலவு ஆண்டு ஒன்றுக்கு 100,000 ரூபா என திருத்திக்கொள்ளவும்.
* வினா இல - 06 புதிய பழத் தோட்டத்தை உருவாக்குதல் என திருத்திக்கொள்ளவும்.
* வினா இல - 08 4 ரூபாவை 14 ரூபா என திருத்திக்கொள்ளவும்.
* வினா இல - 11 பின்வரும் வரைபைக் கருத்திற்கொண்டு விடையளிக்கவும்.




மாணவர் கவனத்திற்கு.....

* கடந்தவாரத்திற்கான உயர்தரக் கல்விச்சுடரின் விடைகள் அனைத்தும் அடுத்த சனிக்கிழமை வெளிவரும்.
* இப்பகுதியில் வெளிவரும் அனைத்து வினாக்களையும் நேரகணித்து உரிய நேரத்துக்குள் பயிற்சிபெறுங்கள்.
* இப்பகுதிகளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளிவரும்போது ஒப்பிடுசெய்து நீங்கள் சுயமாகவே திருத்திக்கொள்ளுங்கள்.
* இப்பகுதியில் வெளிவரும் பல்கோண வினாக்களில் ஏதாவது சந்தேகங்கள், தெளிவின்மைகள் இருப்பின் எமது கல்விச்சுடர் பகுதிக்குத் தெரியப்படுத்தின் உரிய ஆசிரியர் ஊடாக ஆலோசனை வழங்கப்படும்.

ஆசிரியர், உதயன்-கல்விச்சுடர்,
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 071-6850005, 0212229933, 071-4273035
தொலைநகல் :-0212229944
மின்னஞ்சல் :-newkalvisudar@yahoo.com

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
General Certificate of Education (Advance.Level) Model Examination - 2009

## இணைந்த கணிதம் - 01

கல்விச்சுடர் ஆசிரியர் குழு, உதயன்

6 வினாக்களுக்குமாத்திரம் விடை தருக.

01. a) a > o BPவும் $b^2 - 4ac < 0$ ஆகவும் இருப்பின் $|(x) = ax^2 + bx + c$ என்னும் கோவை து இன் எல்லா மெய்ப்பெறுமானங்களுக்கும் நேரானது எனக் காட்டுக.
$|(x) = 9+2(k+4)x+2kx^2$ $(k^10)$ என்னும் சார்பு x இன் எல்லா மெய்ப்பெறுமானங்களுக்கும் நேராக இருக்குமாறு உள்ள k இன் பெறுமான வீச்சைக் காண்க.

b) $x^2+px+l=0$ என்னும் சமன்பாட்டின் மூலங்கள் a,b ஆகவும் $x2+qx+l=0$ என்னும் சமன்பாட்டின் மூலங்கள் ஞ்,ஞீ ஆகவும் இருப்பின் $(a-g)(b-g)(a+d)(b+d) = q^2 - p^2$ என நிறுவுக.

c) $x^3 - lx^2 + mx + g$ என்பதை $(x-2)^2(x+1)$ ஆல் வகுக்கும்போது மீதி 5x+6 ஆகும். l,m,g என்பவற்றைக் காண்க.

02. 1) 5 வீடுகளுக்குரிய கடிதங்களுக்கு சரியாக 5 விலாசம் இடப்பட்ட கடித உறைகள் உண்டு. 5 கடிதங்களும் பிழையான கடித உறைகளில் இடுவதற்கான வழிகளின் எண்ணிக்கையைக் காண்க.

2) $\left(\frac{2+3து}{8}\right)^{110}$ என்பது து இன் ஏறுவலுக்களில் எழுதப்படும் போது 4 ஆம் உறுப்பு அதியுயர் எண்பெறுமதியைக் கொண்டிருப்பின் து இன் பெறுமான வீச்சைக் காண்க.

03. 1) கணிதத் தொகுத்தறிவு முறையினால் ண எனும் எல்லா நேர் நிறை எண்களுக்கும், $7^{2n} + (2^{3n-3})(3^{n-1})$ என்பது 25 இனால் சரியாக வகுபடும் எனக் காட்டுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. a) Z, $Z^1$ எனும் சிக்கலெண்கள் ஆகண் வரிப்படத்தில் முறையே A,B எனும் புள்ளி களால் வகைக்குறிக்கப்படின், $[Z-Z^1] = AB$ எனக் காட்டுக.

b) $Z^2 + 2Z + 10 = 0$ எனும் இருபடிச் சமன்பாட்டின் மூலங்கள் $Z_1$, $Z_2$ என்பவற்றைக் காண்க. ($lmZ_1>0$)

1) $Z_1$ இன் மட்டு, வீச்சம் முறையே r, q எனின், $Z_2$ இன் மட்டு, வீச்சம் என்பவற்றை முறையே r,q இல் தருக.

2) $[Z_1-Z_2] = 6$ எனக் காட்டுக.

3) $[Z-Z_1] =6$ ஆகுமாறு p <arg($Z-Z_2$)£ 3p ஆகுமாறு அமையும் சிக்கலெண்கள்

Z I BPs வரிப்படத்தில் வகைக்குறிக்கும் புள்ளிகளைக்கொண்ட பகுதியைக் காட்டுக. இப்பகுதியில் (Z) இழிவாக அமையும் புள்ளியின் சிக்கலெண்ணைத் தருக.

05. a) $y_n = cosecx.cot^n x$ எனின், $dy_n + (n+1)y_{n+1} + ny_{n-1} = 0$ எனக் காட்டுக.

b) $x^2 + y^2 - 4xy - 1 = 0$ எனின்,

$d^2y$ ● $dy^2$

புள்ளி (1,0) இல் பெறுமானங்களைக் காண்க.

c) ஒரு செவ்வட்ட கூம்புப் பாத்திரத்தின் அடி ஆரை 4cm உம் குத்துயரம் 20cm உம் ஆகும். உச்சி கீழே அமையுமாறும், அதன் அச்சு நிலைக்குத்தாக இருக்குமாறும் நிலைப்படுத்தப்பட்டுள்ளது. அதனுள் நிரம்ப நீர் உள்ளது. இதனுள் $1.5cm^3 s^{-1}$ வீதத்தில் மெதுவாக நீர்சேர்க்கப்படுகிறது. அதேநேரம் அதன் உச்சியிலுள்ள சிறிய துவாரத்தினூடு $2cm^3s^{-1}$ வீதத்தில் நீர் வெளியேறுகின்றது. நீரின் ஆழம் 12cm ஆக இருக்கும்போது உயரமாற்ற வீதத்தைக் காண்க.

06. a) உகந்த பிரதியீட்டைச் செய்து, தொகையீடு.
dx ஐப் பெறுமானம் காண்க.
5+4cos x.

1) பகுதிகளாகத் தொகையிடலைப் பயன்படுத்தி,

x $sin^{-1}x$
$1-x^2$

2) பகுதிப் பின்னங்களைப் பயன்படுத்தி,
4x ஐக் காண்க.
$(x+2)(x^2+4)$

b) x அச்சுக்கும் $y = 6x-x^2$ என்னும் வளையியிற்கும் இடையிலுள்ள பரப்பளவைக் காண்க.

07. நேர்கோடு ஒன்றின் சமன்பாடு $x - x_1 = y - y_1 = l$ ஆகும். $a^2 + b^2 = 1$ ஆகும்போது [l] என்பது $(x_1,y_1)$ என்ற புள்ளியிலிருந்து (x,y) இற்குரிய தூரமாகும் எனக் காட்டுக. சாய் சதுரம் ஒன்றில் $2x - 3y + 8 = 0$, $3x - 2y + 2 = 0$ எனும் அடுத்துள்ள பக்கங்கள் சாய்சதுரத்தில் கூர்ங்கோணம் ஒன்றை ஆக்குகின்றது. இப்பக்கங்கள் இடை வெட்டும் புள்ளியினூடான மூலைவிட்டத்தின் நீளம் 10 2 அலகுகள் ஆகும். சாய்சதுரம் முற்றாக முதலாம் காற்பகுதியில் அமைந்துள்ளது.சாய்சதுரத்தின் மற்றைய் இருபக்கங்களினதும் சமன்பாடுகளைக் காண்க.
மற்றைய மூலைவிட்டத்தின் நீளம் யாது?
இதிலிருந்து சாய்சதுரத்தின் பரப்பளவைக் காண்க.

08. $y = mx + c$ எனும் நேர்கோடானது $x^2 + y^2 - 2ax - 4ay - 4a^2 = 0$ எனும் வட்டத்தைத் தொடுவதற்கான நிபந்தனையைக் காண்க. $x^2+y^2-2ax-4ay-4a^2=0$, $x^2+y^2-3ax+4ay =0$ எனும் இரு வட்டங்களும் இடைவெட்டும் எனக்காட்டி பொதுநாணின் நீளத்தைக் காண்க.
இவ்விரு வட்டங்களின் பொதுத் தொடலிகளின் சமன்பாடுகளைக் காண்க.
இதிலிருந்தோ, வேறு வழியிலோ பொதுத் தொடலியின் நீளம் 4a எனக் காட்டுக.

09. a) வழமையான குறியீடுகளுடன் யாதேனும் ஒரு முக்கோணிக்குரிய சைன் நெறியைக் கூறி நிறுவுக.
ஒரு முக்கோணி அஆஇ யிற்குரிய வழக்கான குறிப்பீட்டுடன், ( a+b+c) tan A + tan B =2C cot-C என நிறுவுக.
இதிலிருந்து அல்லது வேறுவிதமாக a+b- c +b+c = tan A tan B எனக் காட்டுக.

b) $cos^{-1}x + cos^{-1}y + cos^{-1}z = p$ எனின், $x^2+y^2+z^2+2xyz =1$ என நிறுவுக.

## இணைந்த கணிதம் - 02

ஆறு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

01. a) ஒரு மோட்டார் வண்டியின் உயர் ஆர்முடுகல் 6ட்ண் ஆகவும் உயர் அமர்முடுகல் 8ட்ண் ஆகவும் உள்ளது. மோட்டார் வண்டியின் உயர் வேகம் 48ட்ண் ஆகும். மட்டமான நேர் வீதியில் ஒரு வண்டியானது ஓய்வில் இருந்து புறப்பட்டு மீண்டும் தரப்பட்ட தூரத்தில் ஓய் விற்கு வருகின்றது. வேக - நேர வரைபுகளைப் பயன்படுத்தி,
1) 189m 2) 336m 3) 606m என்னும் தூரங்களை
மோட்டார் வண்டி செல்வதற்கு எடுக்கும் மிகக் குறைந்த நேரங்களைக் காண்க.

b) ஒரு உதைபந்தாட்ட நிகழ்ச்சி ஒன்றிலே A,B என்பவர்கள் ஒரே அணியையும், C என்பவர் எதிரணியையும் சேர்ந்தவர்கள். Aயும் B யும் சமாந்தரமாக ஒரே கதி u உடன் ஓடிக்கொண்டிருக்கின்றனர். C என்பவர் இவர்களுக்கு சரி நடுவில் சமாந்தரமாக ஆனால், எதிர்திசையில் 2u என்ற வேகத்துடன் ஓடிவருகின்றார். ஒரு கணத்தில் இம் மூவருக்கும் இடைப்பட்ட தூரங்கள் சமனாக வரும்போது B என்பவருக்குப் பந்து கிடைக்கின்றது. அவர் அப்பந்தை C க்குக் கிடைக்காது A ஏன்பவர் பெறத்தக்க வகையில் மாறா வேகத்துடன் தரையில் பந்து செல்லுமாறு அடிக்கின்றார். பந்து அடிக்கப்பட்ட வேகம் v ஆயின் v >2u எனக் காட்டுக.


02. a) M கிலோகிராம் திணிவுடைய ஒரு கார் a சாய்வுள்ள சாய்தளத்தில் R நியூற்றன் தடை விசைக்கு எதிராக, மேல்நோக்கி இயங்கும்போது அதன் எஞ்சின் P கிலோவாற்று வலுவில் வேலை செய்கிறது. 1000P = (R+9.8M sina +M¦)V எனக் காட்டுக.

R = 400, M = 500 எனின், காரின் அதி உயர் கதியைக் காண்க. இக்கதியுடன் இயங்கும் போது சடுதியாக எஞ்சினின் வலு 25 கிலோவாற்றாக அதிகரிக்கப்படுகிறது. இந் இந்நிலையில் அதன் ஆர்முடுகல் அண்ணளவாக $ms^{-2}$ எனக் காட்டுக.

b) படத்தில் காட்டியவாறு ஒப்பமான கிடைத்தளத்தில் வைக்கப்பட்ட M திணிவுள்ள ஒப்பமான ஆப்பின் கிடை முகத்தின் மீது $m_1$ திணிவுள்ள P எனும் துணிக்கையும், கிடையுடன் கோணம் q இல் சாய்ந்துள்ள சாய்முகத்தின் மீது $m_2$ திணிவுள்ள Q எனும் துணிக்கையும் வைக்கப்பட்டு தொகுதி ஓய்விலிருந்து மெதுவாக விடுவிக்கப்படுகிறது. தொடரும் இயக்கத்தில்,
a) ஆப்பின் ஆர்முடுகல், துணிக்கை P இன் ஆர் முடுகலில் தங்கியிருக்கவில்லை எனவும்,
b) எல்லா தொடுகைகளிலும் உள்ள மறுதாக்கங்களையும் காண்க.

இங்கு, அதன் வேகம் $Vms^{-1}$, ஆர்முடுகல் ¦ $ms^{-2}$, $g = 9.8ms^{-2}$ ஆகும். sin a = 1 , P=20, R = 400, M = 500 எனின், காரின் அதி உயர் கதியைக் காண்க. இக்கதியுடன் ஆர்முடுகல் அண்ணளவாக 1 $ms^{-2}$ எனக் காட்டுக.

b) படத்தில் காட்டியவாறு ஒப்பமான கிடைத்தளத்தில் வைக்கப்பட்ட M திணிவுள்ள ஒப்பமான ஆப்பின் கிடை முகத்தின் மீது $m_1$ திணிவுள்ள P எனும் துணிக்கையும், கிடையுடன் கோணம் q இல் சாய்ந்துள்ள சாய்முகத்தின் மீது $m_2$ திணிவுள்ள Q எனும் துணிக்கையும் வைக்கப்பட்டு தொகுதி ஓய்விலிருந்து மெதுவாக விடுவிக்கப்படுகிறது.தொடரும் இயக்கத்தில்,
a) ஆப்பின் ஆர்முடுகல், துணிக்கை P இன் ஆர் முடுகலில் தங்கியிருக்கவில்லை எனவும்,
b) எல்லா தொடுகைகளிலும் உள்ள மறுதாக்கங்களையும் காண்க.




40 நிமிடங்களுக்குள் செய்துமுடிக்க முயற்சிக்கவும்...

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
General Certificate of Education (Advance.Level) Model Examination - 2009

## பௌதிகவியல் - I

ஆசிரியர் : - சி.சிந்தனைச்செல்வன் (B.Sc) Dip in Edu
கொழும்பு விவேகானந்தா கல்லூரி

### அலகுகளும் பரிமாணங்களும்

கடந்தவாரத் (27.01.2009) தொடர்ச்சி....

31. ஒரு துணிக்கையின் வேகம் $V = (b/t) + ct^2 + dt^3$ எனும் சமன்பாட்டினால் தரப்படுகின்றது. இதில் b இன் பரிமாணம், (இங்கு t - நேரம்)
1) $m^0LT^0$ 2) $mL^0T^0$ 3) $m^0L^0T$
4) $mLT^{-1}$ 5) $mLT^{-2}$

32. $y = a + bt + ct^2$ இல் தூஆனது M இலும் t ஆனது செக்கனிலும் குறிக்கப்படுமாயின், c இன் அலகு
1) m 2) $m^{-2}$ 3) $mS^{-2}$
4) $mS^{-2}$ 5) $m^{-1}S^{-1}$

33. பின்வருவனவற்றில் எதன் அலகு $gcms^{-2}$
1) சக்தி. 2) விசை. 3) உந்தம்.
4) ஆர்முடுகல். 5) வலு.

34. PV இன் ப்ரிமாணத்தைக் கொண்டிருப்பது, (இங்கு P - அமுக்கம், V - கனவளவு)
1) வேலை. 2) வலு. 3) மீள்தன்மை மட்டு.
4) அமுக்கம். 5) உதைப்பு.

35. அமுக்கத்தின் அலகு,
1) தைன் / $cm^2$ 2) atm 3) cmhg
4) பஸ்கால். 5) mmhg

36. பின்வருவனவற்றில் எதன் பரிமாணம் $T^{-2}$ ஐக் கொண்டிருக்கும்?
1) விசை. 2) அமுக்கம். 3) ஈர்வை மாறிலி.
4) மேற்கூறிய யாவும். 5) மேற்கூறிய யாவும் அன்று.

37. $(P+a/v^2)(V-b) = RT$எனின், a இன் SI அலகு
1) $Nm^2$ 2) $Nm^1$ 3) $Nm^3$
4) $Nm^{-2}$ 5) $Nm^{-1}$

38. கோளமானி ஒன்றானது 250 வட்ட அளவிடைப் பிரிப்புகளைக் கொண்டது. வட்ட அளவிடையானது, ஒரு பூரண சுற்றுச் சுற்றும்போது பிரதான அளவிடை 0.0625 cm நகர்கிறது. இதன் இழிவு எண்ணிக்கை
1) $2.5 \# 10^{\&4}$ cm 2) $25 \# 10^{\&3}$ cm 3) $2.5 \# 10^{\&2}$ cm
4) $2.5 \# 10^{\&1}$ cm 5) மேற்கூறிய எதுவுமல்ல.

39. $y = a \sin (Wt-kx)$ எனின், W இன் பரிமாணம்,
1) $M^0L^0T^{-1}$ 2) $M^0L^1T^{-1}$ 3) $M^0L^0T^0$
4) $M^0L^{-1}T^0$ 5) $ML^{-1}T^{-1}$

40. வினா இல 39 இல் K இன் பரிமாணம்,
1) $M^0L^0T$ 2) $M^0LT$ 3) $ML^0T$
4) $M^0L^{-1}T^0$ 5) $ML^{-1}T$

41. வினா இல 39 இல் W/K இன் பரிமாணம்,
1) $M^0LT^{-1}$ 2) $M^0L^0T^{-1}$ 3) $M^{-1}LT^0$
4) $M^0L^0T^0$ 5) $ML^{-1}T^{-2}$

42. $ML^{-1}T^{-2}$ எனும் பரிமாணத்தைக் கொண்டிராதது,
1) தகைப்பு. 2) வலு. 3) அமுக்கம்.
4) யங்கின் மட்டு. 5) பிணைப்பு மட்டு.

43. ஏகபரிமாண உந்தமும் கோண உந்தமும் ஒரே பரிமாணங்களைக் கொண்டிருப்பது,
1) திணிவு, நீளம். 2) நீளம், நேரம். 3) திணிவு, நேரம்.
4) திணிவு, நீளம், நேரம். 5) திணிவு மட்டும்.

44. துணிக்கை ஒன்றின் வேகமானது $V = a + (b/t) + ct^2$ இனால் தரப்படுகிறது. இங்கு b இன் அலகு,
(t -நேரம்)
1) m 2) $ms^2$ 3) $ms^{-1}$
4) $ms^{-2}$ 5) $m^{-1} s^{-1}$

45. அமுக்கத்தின் SI அலகு,
1) $kg(ms^{-1})^2$ 2) $kgm(s^{-1})^3$ 3) $(kgs)^2m$
4) $kg^{-1} m^{-1}s^{-1}$ 5) $(kgm)^{-1} s^{-2}$

46. வேணியர் இடுக்கிமானி ஒன்றின் பிரதான அளவிடையின் 10cm, 200 பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது. வேணியர் அளவிடையின் 25 பிரிவுகள் பிரதான அளவிடையின் 12 ட்ட் பிரிவுகளுடன் பொருந்துகின்றது. இக்கருவியின் இழிவு எண்ணிக்கை,
1) 0.02cm 2) 0.002cm 3) 0.01cm
4) 0.001cm 5) 0.10cm



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. $MT^{-2}$ எனும் பரிமாணத்தைக் கொண்டிருப்பது,
1) மேற்பரப்பிழுவை. 2) அடர்த்தி. 3) சூரிய மாறிலி.
4) அமுக்கப்படுகாரணி. 5) பாகுநிலைக்குணகம்.

48. W - கோணவேகம், V - ஏகபரிமாண வேகம் எனின், y = a sin (x/V-k) இல் k இன் பரிமாணம் யாது?
1) LT 2) T 3) $T^{-1}$
4) $T^2$ 5) $T^{-2}$

49. விசை மாறிலியின் பரிமாணத்தைக் கொண்டிருப்பது,
1) பிசுக்குமைக் குணகம். 2) மேற்பரப்பிழுவை. 3) மீடிறன்.
4) கணத்தாக்கு. 5) உந்தம்.

50. h - உயரம், g - ஈர்வையிலான ஆர்முடுகல் எனின் $\sqrt{2h/g}$ இன் பரிமாணத்தைக் கொண்டிருப்பது,
1) நேரம். 2) திணிவு. 3) கனவளவு.
4) வேகம். 5) உந்தம்.

51. புள்ளி ஏற்றங்கள் $q_1$,$q_2$ என்பவை தூரம் r இனால் வேறாக்கப்படும்பொழுது அவற்றிற்கிடையே தொழிற்படும் மின் விசையானது $F = Kq_1,q_2 /r^2$ இனால் தரப்படும். k ஆனது,
1) ஏற்றங்களுக்கிடையேயான ஊடகத்தில் தங்கியுள்ளது.
2) அலகுத் தொகுதியில் தங்கியுள்ளது.
3) 1, 2 இரண்டிலும் தங்கியுள்ளது.
4) 1, 2 இரண்டிலும் தங்கவில்லை.
5) ஏற்றங்களுக்கிடையேயான ஊட்கத்தில் தங்கவில்லை.

52. கோண உந்தத்திற்கும் ஏகபரிமாண உந்தத்திற்கும் இடையேயான விகிதம் குறிப்பது,
1) $M^0LT^0$ 2) MLT 3) $ML^2T^{-1}$
4) $M^{-1}L^{-1}T^{-1}$ 5) $ML^{-1}T$

53. அமுக்கப் படித்திறனின் பரிமாணம்,
1) $MLT^{-2}$ 2) $ML^2T^{-2}$ 3) $ML^{-2}T^{-1}$
4) $M^{-1}L^{-1}T^{-1}$ 5) $ML^{-1}T$

54. விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் தசை மடங்கு கதி வலு என்றார். தசை என்பதன் பரிமாணம்,
1) $MLT^{-2}$ 2) $ML^2T^{-2}$ 3) MLT
4) MLT 5) $MLT^{-3}$

55. வட்ட வேணியரின் 30 பிரிவுகளானது பிரதான அளவிடையின் 29 பிரிவுகளுடன் பொருந்துகிறது. ஒரு பிரதான அளவிடைப்பிரிப்பானது 1/2 எனின், கருவியின் இழிவெண்ணிக்கை யாது?
1) 30 கலை 2) 10 கலை 3) 1 கலை
4) 0.1 கலை 5) 0.01 கலை

56. கோளமானியைப் பயன்படுத்தி வளைவினாரை அளக்கப்படும் போது வளைவினாரை கீ ஆனது. (இங்கு ட - நடுக்கால் உயர்ந்த உயரம், டூ - இரு கரைக்கால்களுக்கு இடைப்பட்ட தூரம்)
1) $R = (h^2/6) + (1/l)$ 2) $R = (l^2/6h) + (h/2)$ 3) $R = (h^2/2l) + (l/h)$
4) $R = (2l^2/h) + (6/l)$ 5) $R = (6l^2/h) + (h/2)$

57. L- மின்கடத்தாறு,]- மின்னோட்டம் எனின் ஃஜ² இன் பரிமாணம்
1) $MLI^{-2}$ 2) $ML^2T^{-2}$ 3) $M^2L2I^{-2}$
4) $ML^{-1}T$ 5) M,L,T

58. பின்வருவனவற்றுள் G¨ பௌதீக கணியத்தின் SI அலகிற்கும் சகிசெ அலகிற்கும் இடையிலான விகிதம் $10^3$
1) யங்கின் மட்டு. 2) போல்ட்ஸ்மானியின் மாறிலி.
3) வாயு மாறிலி. 4) பிளாங்கின் மாறிலி. 5) அகில ஈர்ப்பு மாறிலி.

59. $mC^2$ இன் பரிமாணம்,
1) $MLT^{-1}$ 2) $ML^0T^0$ 3) $ML^2T^{-2}$
4) $M^{-1}L^3T^6$ 5) $M^{-1}LT^{-1}$

60. பின்வருவனவற்றில் எதன் பரிமாணம் மீடிறன் பரிமாணத்தை ஒத்தது. ( W - கோணவேகம், T - அலைவு காலம்)
1) 1/Tw 2) $1/\sqrt{Tw}$ 3) $\sqrt{w/T}$
4) W/T 5) 1/T

61. வீனின் ஒருமையின் பரிமாணம்,
1) $M^0LT^0$ 2) ML 3) LTq
4) Mq 5) $M^0Lq^{-1}$

62. வாயு மாறிலியின் பரிமாணம்,
1) $MT^{-2}$ 2) $MLT^{-2}$ 3) Lq
4) $ML^2T^{-2}q^1$ 5) Mq

63. அம்பியர் மாணி எதன் அலகு,
1) சக்தி. 2) வலு 3) மின்கணியம்
4) மின் அழுத்தம். 5) மின்னோட்டம்.

64. $\sqrt{I/VR}$ இன் பரிமாணம் யாது? ( I - மின்னோட்டம், R - தடை, V - மின்னழுத்தம்)
1) $M^0L^0T^0A^0$ 2) $M^0L^0T^1A^0$ 3) $M^1L^2A^1T^1$
4) $M^0L^2A^1T^1$ 5) $M^1L^{-2}T^3I^2$

65. பரிமாணமற்ற கணியம்,
1) இயற்கையில் காணப்படுவதில்லை.
2) எப்போதும் ஓர் அலகைக் கொண்டிருக்கும்.
3) ஒருபோதும் அலகு காணப்படமாட்டாது.
4) அலகைக் கொண்டிருக்கலாம்.
5) எப்போதும் ஒரு மாறிலியாகும்.


உதயன் கல்விச்சுடர் வழங்கும் வெளியீடுகள்

செவ்வாய்க் கிழமை - க.பொ.த.உயர்தரமாணவர்களுக்கான தனியான வெளியீ்டு.

வியாழக் கிழமை - தரம் 05 மாணவர்களுக்கான தயார்படுத்தல் பரீட்சைத் தொடர்.

வெள்ளிக் கிழமை - இலகு வழி ஆங்கிலம்.



கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்

General Certificate of Education (Advance.Level) Model Examination - 2009


# கணக்கீடு - 1


ஆசிரியர் : - R.ஜனதன் (B.BA.Hons)
உதவி:- N.ஜெயானந்தன்


கடந்தவாரத் (27.01.2009) தொடர்ச்சி.......

## பகுதி - 1

இல. 21 - 30 வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

21. செயற்பாட்டு அமைப்பு எண்ணக்கருவினால் நிதிக்கூற்றுகளில் தோன்றும் ஓர் விளைவைக் குறிப்பிடுக.
..........................................................................
..........................................................................
..........................................................................

22. கணக்கீட்டின் உள்ளீடுகள் எவை?
..........................................................................
..........................................................................
..........................................................................

23. கணக்கீட்டுத் தகவல் வழங்கும் பொறுப்பை வலியுறுத்தும் சட்டம் எது?
..........................................................................
..........................................................................

24. தற்சமனாக்கும் பேரேட்டு முறை என்பது யாது?
..........................................................................
..........................................................................
..........................................................................

25. இருப்புக் கிரயத்தில் உள்ளடங்குபவை எவை?
..........................................................................
..........................................................................
..........................................................................

26. சொத்து ஒன்றின் பயன்தரு ஆயுட்காலத்தைத் தீர்மானிக்கும் காரணிகள் எவை?
..........................................................................
..........................................................................
..........................................................................

27. பங்குடைமை ஒன்றின் நன்மதிப்புக் கணிப்பிடப்படும் சந்தர்ப்பங்கள் 4 தருக.
..........................................................................
..........................................................................
..........................................................................
..........................................................................

28. 1.1.2008 இல் சில்லறைக் காசு மீதி 2,500 ரூபா. பிரதான காசாளரிடமிருந்து பெற்றது 10,000 ரூபா, உரிமையாளர் பற்று 1,750 ரூபா, கடன்கொடுநர் வசந்தாவுக்குக் கொடுத்தது 3,250 ரூபா. உட்பட்ட மொத்தச் செலவுகளின் தொகை 11,300 ரூபா. 1.3.2008 இல் சில்லறைக் காசேட்டு வசக்கட்டு மீள் நிரப்பப்பட வேண்டிய தொகை யாது?
..........................................................................
..........................................................................
..........................................................................

29. கயனும், கமலும் இலாப நட்டங்களை 3:2 எனும் விகிதத்தில் பங்கிடும் பங்காளர்களாவர். இவர்கள் கஜமுகன் என்பவரை ஒரு புதிய பங்காளராக இலாபத்தில் 25% பங்குபெறும் வகையில் சேர்த்துக் கொண்டனர். இப் பங்குடைமையின் புதிய இலாபநட்ட விகிதம் என்ன?
..........................................................................
..........................................................................
..........................................................................

30. பாலனும் கமலும் இலாப நட்டங்களை 5:4 என்னும் விகிதாசாரத்தில் பகிர்வுசெய்யும் பங்காளர்கள். இவர்களின் கணக்குப் புத்தகங்கள் ரூபா 90,000 ஐ நன்மதிப்பாகக் காட்டியது. பரமன் என்பவர் 1/5 பங்கு இலாபத்துடன் பங்குடைமையில் சேர்க்கப்பட்டார். பரமனைப் பங்காளராகச் சேர்க்கும்போது இவ் வியாபாரத்தின் நன்மதிப்பு 360,000 ரூபாவாகக் காணப்பட்டது. இந் நன்மதிப்பை மூலதனக் கணக்கின் ஊடாக சீராக்குவதற்கான, பதிவழிப்பதற்கான நாட்குறிப்புப் பதிவைத் தருக.
..........................................................................
..........................................................................
..........................................................................

இல. 31 - 35 வரையான வினாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகள் உண்மையானதா அல்லது பொய்யானதா என்பதைக் குறிப்பிடுக.

31. எழுத்து மூலமான உடன்படிக்கை இன்றி பங்குடமை ஒன்று காணப்படமுடியாது.
(.....................)

32. விற்பனைத் திரும்பல் நாளேட்டினது மூல ஆவணம் கொடுகடன்தாள் ஆகும்.
(.....................)

33. காணி ஒன்றில் கட்டடம் கட்டுவதற்கான திட்ட அறிவிப்புப் பலகை நாட்டியமை மூலதனச் செலவு ஆகும்.
(.....................)

34. பெறுமானத் தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு ஓர் மெய்க்கணக்காகும்.
(.....................)

35. சிறப்பு நோக்கம் கருதிப் பெறப்பட்ட நன்கொடைகள் பயன்படுத்தப்படும்போது, பயன்படுத்தப் பட்ட தொகை திரண்ட நிதியுடன் சேர்க்கப்படும்.
(.....................)

தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல. 36 - 40 வரையான வினாக்களுக்கு இடைவெளியில் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக. 36. சொத்து ஒன்றின் புத்தகப் பெறுமதியைப் பெறுவதற்குக் கிரயமானது,
................................ ஆல் குறைக்கப்படுதல் வேண்டும்.

37. நிலையான சொத்து ஒன்றை விற்போனும் வாங்குவோனும் அறிவுடனும், முழு மனதுடனும் சொத்தினைப் பரிமாற்றிக்கொள்ள இணங்கிய தொகை ................................ ஆகும்.

38. பெற்ற கழிவு, வருமதி உண்டியல் ஆகியவற்றின் மூல ஆவணம் முறையே
................................ ................................ ஆகும்.

39. நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்படும்போது பின்பற்றப்படும் விதிகளும், நடைமுறைகளும்
................................ ஆகும்.

40. உற்பத்திப் பகுதியிலிருந்து இலாபம் சேர்த்து வியாபாரப் பகுதிக்கு மாற்றப்படும் பொருட்களில் வியாபாரப் பகுதியில் விற்பனை செய்யப்படாத பொருட்களுக்குரிய இலாபம்
................................ எனப்படும்.

**30 நிமிடங்களுக்குள் செய்துமுடிக்க முயற்சிக்கவும்...**

# கணக்கீடு - 1

## பகுதி - 11

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. கமல், பரன், ரூபன் ஆகியோர் பங்குடமை ஒன்றின் பங்காளர்கள் ஆவர். அவர்களுக்கிடையிலான உடன்படிக்கை வருமாறு :-
   1) இலாப நட்டங்கள் 2:2:1 என்ற விகிதப்படி பகிரப்படும்.
   2) பங்காளர் ஒவ்வொருவரும் வருடாந்தம் 20 ,000 ரூபா சம்பளம் பெற உரித்துடையவர்கள்.
   3) பங்காளர் மூலதனத்திற்கு வட்டி 5% அனுமதிக்கப்படும்.
   4) பங்காளர் பற்றுக்களுக்கு வட்டி 6%.

31 டிசம்பர் 2006 இல் எடுக்கப்பட்ட பரீட்சை மீதி வருமாறு :-

| | | ரூபா (00) | ரூபா (00) |
|---|---|---|---|
| மூலதனக் கணக்கு | கமல் | | 300 |
| | பரன் | | 150 |
| | ரூபன் | | 250 |
| நடப்புக் கணக்கு | கமல் | | 15 |
| | பரன் | | 12 |
| | ரூபன் | 10 | |
| இருப்புக்கள் 01. 01. 2006 இல் | | | |
| | மூலப்பொருள் | 15 | |
| | முடிவுப்பொருள் | 20 | |
| | குறைவேலை ( மூலக்கிரயம்) | 10 | |
| கொள்வனவுகள் | மூலப்பொருள் | 65 | |
| | முடிவுப்பொருள் | 25 | |
| விற்பனை | | 450 | |
| காணிக்கட்டடம் (கிரயம்) | | 600 | |
| பொறி (கிரயம்) | | 400 | |
| நிலையான வைப்பு 24% | | 50 | |
| மோட்டார் வாகனம் (கிரயம்) | | 300 | |
| பெறுமானத்தேய்வு ஏற்பாடு 01. 01 2006இல் | | | |
| | காணிகட்டடம் | | 150 |
| | பொறி | | 80 |
| | மோட்டார் வாகனம் | | 80 |
| காப்புறுதி | | 15 | |
| மின் கட்டணம் | | 18 | |
| வாடகை | | 34 | |
| உட்சுமைக் கூலி | | 05 | |
| சம்பளம் கூலி | | 48 | |
| நேர்கூலி | | 17 | |
| வெளிச் சென்ற கூலி | | 04 | |
| அறவிடமுடியாக்கடன் | | 06 | |
| ஐயக்கடன் ஏற்பாடு | | | 10 |
| கமல் கடன் | | | 50 |
| கடன்பட்டோர், கடன்பொருனர் | | 45 | 75 |
| பற்று | கமல் ( 31.05. 2006 இல்) | 10 | |
| | ரூபன்( 01.09. 2006 இல்) | 20 | |
| வங்கி | | | 95 |
| | | 1717 | 1717 |

மேலதிக தகவல்கள்:-

01. 31. 12. 2006 இல் இருப்புக்கள்
    மூலப்பொருள் - 30,000 ரூபா, முடிவுப்பொருள் 45,000 ரூபா
    குறைவேலை (மூலக்கிரயம்) 12,000 ரூபா
02. சம்பளம் கூலி என்பதனுள் 1/3 பங்கு தொழிற்சாலை மேற்பார்வையாளர் சம்பளமாகும்.
03. 20,000 ரூபா உற்பத்திக் கிரயத்தைக் கொண்டிருக்கும் முடிவுப்பொருட்கள் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் சேதமுற்றன. இந்நட்டத்தின் 75% காப்புறுதி நிறுவனம் தருவதாக ஒப்புக்கொண்டது. இது தொடர்பில் எப் பதிவுகளும் இடம்பெறவில்லை.
04. 01.01. 2004 இல் 10,0000 ரூபாவுக்கு வாங்கிய மோட்டார் வாகனம் 30 ஜுன் 2006 இல் 70,000 ரூபா இற்கு விற்கப்பட்டிருந்தது. விற்றுப்பெற்ற காசு மோட்டார் வாகனக்கணக்கில் செலவு வைத்தது தவிர வேறு பதிவுகள் இடம்பெறவில்லை.
05. கடன்பட்டோரிடம் அறவிட முடியாக்கடனாக 5000 ரூபா பதிவழிப்பதுடன், ஐயக்கடன் ஏற்பாட்டை 20% ஆகச் சீராக்குக.
06. நிலையான வைப்பு வட்டி 5 மாதங்களுக்குமைய நிலுவையாக உள்ளது.
07. மின்சாரம், காப்புறுதி, வாகனம் என்பதனுள் 60% தொழிற்சாலைக்குறியனவாகும்.
08. 31.12. 2006 இல் முற்பண கொடுப்பனவுகளும் நின்ற செலவுகளும்

| | முன் செலுத்தியது | சென்மதி |
|---|---|---|
| வாடகை | 4,000 | - |
| மின்கட்டணம் | 6,000 | 8,000 |

09. நிலையான சொத்துக்களுக்கு 10% கிரயத்தில் பெறுமானத் தேய்விடுக.
10. பங்குடமையிலிருந்து பரன் 31. 12. 2006 இல் விலகுகிறார். விலகும்போது தன் மதிப்பு 50,000 ரூபா. இதனை பங்காளர்கள் மூலதனக்கணக்கினூடாக சீராக்க இணங்கினர். பரனுக்கு சோரவேண்டியதில் 50% காசாக செலுத்தப்பட்டு மிகுதி கடன்கணக்குக்கு மாற்றுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

வேண்டப்படுவது :-
1) உற்பத்தி வியாபார, இலாபநட்ட, இலாபநட்டப் பகிர்கணக்கு.
   (31. 12. 2006 இல் முடிவடைந்த ஆண்டுக்குரியது)
2) பங்காளர் மூலதனக்கணக்கு, நடைமுறைக்கணக்கு.
3) ஐந்தொகை 31. 12. 2006 இல்

02. அ) ராஜா நிறுவனத்தின் 2008 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற நடவடிக்கைகளைத் தரப்படுகின்றன.
   1) கடனுக்கு கொள்வனவு செய்த பண்டங்கள் ரூபா 18,000
   2) 20,0000 கிரயமான மோட்டார் வாகனமொன்று உரிமையாளரின் சொந்த வங்கிக்கணக்கின் காசோலை வழங்கப்பட்டு வாங்கப்பட்டது. இதன் எஞ்சும் பெறுமதி 20,000 ரூபா, பாவனைக் காலம் 6 வருடங்கள்.
   3) 9000 ரூபா கொள்விலையான பண்டங்கள் 12,000 ரூபாவுக்கு விற்கப்பட்டது.
   4) வங்கியில் 30,000 ரூபா கடன் பெறப்பட்டு அதில் 20,000ரூபா கடனும் வட்டி 300 ரூபாவும் செலுத்தப்பட்டது.
   5) அலுவலகத் தேவைக்கு பயன்படுத்திய பண்டங்கள் 4,000 ரூபா.
   6) டிசெம்பர் 2007 ஆம் மாதத்திற்கான மின் கட்டணம் 6,000 ரூபா செலுத்தப்பட்டன.
   மேற்குறித்த நடவடிக்கைகளை பின்வரும் சமன்பாட்டில் அதிகரிப்பு / குறைவு என பெறுமதியுடன் காட்டுக.
   நடைமுறையல்லாச் சொத்துக்கள் + நடைமுறைச் சொத்துக்கள் = மூலதனம் + பொறுப்புக்கள்.

ஆ) அனுசியா கம்பனியின் ஒக்டோபர் 2007இற்கான வங்கிக் கூற்று ரூபா 27,500 ஐ மேலதிகப்பற்று மீதியாகக் காட்டியது. ஆனால், காசேட்டின் வங்கி நிரல் 18200 ரூபாவை செலவு மீதியாகக் காட்டியது.

வேறுபாட்டிற்கான காரணங்கள் வருமாறு :-

தேறாத காசோலைகள் ரூ. 12,800,
சமர்பிக்கப்படாத காசோலைகள் ரூ. 4000, வங்கிக்கட்டணம் ரூ. 200, மேலதிகப்பற்று வட்டி - ரூ. 1300, நேர வைப்பு ரூபா 350, பங்குலாபம் - 150. வங்கி தவறுதலாக செலவு வைத்தது ரூ. 500.

வேண்டப்படுவது :-
1) காசேட்டு வங்கி நிரலின் சீராக்கம்
2) ஒக்டோபர் 2007 இற்கான வங்கி கணக்கிணக்கக் கூற்று

03. 2007 ஜனவரியில் தர்மராஜா நிறுவனத்தின் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கிலுள்ள மீதிகள்
வரவு மீதி - 84,000 ரூபா
செலவு மீதி - 1,800 ரூபா
31. 12. 2007 இல் முடிந்த வருடக் கொடுக்கல் வாங்கல்கள்.

| | ரூபா |
|---|---|
| விற்பனை | 169,000 |
| காசு விற்பனை | 39,000 |
| காசோலைப் பெறுவனவு | 47,000 |
| பணப் பெறுவனவுகள் | 33,000 |
| கடன் கொடுனர் பேரேட்டுக்கு மாற்றம் | 3,700 |
| கடன்பட்டோரில் அறவிட்ட வட்டி | 500 |
| உட்திரும்பல் | 9,500 |
| மறுக்கப்பட்ட காசோலை | 7,000 |
| 31. 12. 07 இல் செலவு மீதி | 2,900 |

மேலதிகத் தகவல்கள் :-
கடன்பட்டோரது கட்டுப்படுத்தும் கணக்கு மீதியும், பட்டியல் மீதியும் இணக்கம் கொள்ளவில்லை. ஏடுகளை ஆராய்ந்து பின்வரும் தகவல்கள் திரட்டப்பட்டன.
   1) கடன்பட்டோர் ஜெயராஜ் தந்த காசு 7600 ரூபா அவரது ஆள்குறி கணக்கில் வரவு வைக்கப்பட்டது.
   2) விற்பனை நாளேட்டின் கூட்டுத்தொகை 7400 ரூபாவால் குறைத்துக் கணக்கிடப்பட்டது.
   3) உட்திரும்பல் 3,750 ரூபா நாளேட்டில் பதியப்படாது நேரடியாகப் பேரேட்டுக் கணக்குகளில் பதியப்பட்டது.
   4) காசு விற்பனை 4,700 கடன் விற்பனையாகக் கருதப்பட்டு நானேட்டில் பதியப்பட்டது.
   5) கொடுத்த காசு 3,400 ரூபா கட்டுப்பாட்டுக்கணக்கில் விடுபட்டது.

வேண்டப்படுவது :-
1) திருத்த முன் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு.
2) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கில் திருத்தங்கள்.
3) திருத்திய கட்டுப்பாட்டுக்கணக்கு மீதியுடன் கடன்பட்டோர் பட்டியல் மீதினய இணைக்கும் கூற்று.

04. ஒரு சில்லறை வியாபாரத்தின் உடமையாளரான ரன்பண்டா தமது வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்காகப் பயிற்சி யாளரான கணக்குப் பதிவாளர் ஒருவரை அமர்த்தியிருந்தார். வரிவிவரத்திட்டத்தை உரிய தேதிக்கு முன் சமர்ப்பிப்பதற்காக அவர் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்குமாறு கணக்குப் பதிவாளரைப் பணித்தார். பின்வரும் ஐந்தொகை 2007 டிசம்பர் 31 இல் தயாரிக்கப்பட்டது.

| பொறுப்புக்கள் | ரூபா | நிலையான சொத்து | கொள்விலை | திரண்ட தேய்வு | தேறிய பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 2007.01.01 இல் மூலதனம் | 60, 000 | பெ. இயந்திரசாதனம் | 40,000 | 12,000 | 28000 |
| ஆண்டுக்கான இலாபம் | 13,150 | மோட்டார் கார்கள் | 22,500 | 4100 | 18400 |
| ஈட்டுக் கடன் | 30, 000 | தளபாடம் | 15,000 | 2,000 | 13000 |
| கடன் கொடுத்தோர் | 7, 250 | | 77,500 | 18,100 | 59400 |
| | | முதலீடுகள் | | | 21000 |
| | | பண்டக்கையிருப்பு | | | 11500 |
| | | கடன்பட்டோர் | | | 9300 |
| | | வங்கியிலுள்ள காசு | | | 9200 |
| | 110400 | | | | 110400 |

இக் கணக்குகளை மீளப்பார்வையிட்டு எவ்வையேனும் தவறுகள் இருப்பின் அவற்றை திருத்துமாறு ரன்பண்டா உம்மைக் கேட்டுக் கொண்டார். பரீசீலனை செய்ததில் பின்வருமாறு சீராக்கங்கள் கணக்கிற் கொள்ளப்படவில்லை என்பதை நீர் காண்கின்றீர்.
   ச்) மோட்டார் கார்களை பழுதுபார்த்தற் செலவு ருபா 1500,மோட்டார் வாகனக் கணக்கு ஒரு மூலதனச் செலவாகப் பதியப்பட்டது. தேய்மான வீதம் ஆண்டுகளுக்கு கொள்விலையில் 5% ஆகும்.
   ஞ) ஐயக்கடன்களின் பொருட்டுக் கடன்பட்டோரின் 5% ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற முடிவு புறக்கணிக்கப்பட்டுள்ளது.
   ஞி) 2007. 12. 31 இல் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 1, 000 இற்கான கொள்வனவு விலைப்பட்டியல் கொள்வனவு நாளேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பண்டங்கள் 2008. 01. 15 இலேயே வியாபார நிலையத்துக்கு கிடைத்தன. வியாபார நிலையத்தினாற் பெற்றுக்கொள்ளப்பட்டிராத எந்தக் கையிருப்பையும் கணக்கிற் கொள்ளாது விடுவதே இந்த வியாபாரத்தின் கொள்கையாகும்.
   ஞீ) கட்டடத்தின் வாடகையாக 2007. 01. 01 இலிருந்து ஆரம்பமாகும் 15 மாதகாலப் பகுதிக்கு ரூபா 4, 800 கொடுக்கப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்ட முழுத்தொகையும் இந்த ஆண்டின் இலாப நட்டக் கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.
   ஞு) ஈட்டுக்கடன் 2007. 01. 01 இல் 12% வட்டிக்கு எடுக்கப்பட்டது. வட்டி தொடர்பாக கணக்கேடுகளில் ஒரு பதிவு செய்யப்பட்டிருக்க இல்லை.
   நீர் தயாரிக்க வேண்டியவை:-
1) குறித்த ஆண்டுக்கான இலாபத்திற்குத் தேவையான சீராக்கங்களைக் காட்டும் ஒரு கூற்று.
2) 2007 டிசம்பர் 31 இல் உள்ளவாறான திருத்திய ஐந்தொகை?

இவ் இதழில் ,மாவட்ட ரீதியாக முன்னிலையில் திகழும் ஆசிரியர்களினதும் , மூத்த அனுபவமிக்க ஆசிரியர்களினதும் மாதிரி வினாத்தாள்கள் தொடர்ச்சியாக வெளிவரவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
## General Certificate of Education (Advance.Level) Model Examination

# அரசியல் - I

ஆசிரியர் : - அ.கியூபேட்
B.A

கடந்தவாரத் (27.01.2009) தொடர்ச்சி.......

* இரு பிரதான பிரதிநிதித்துவ முறைகளுடன் சம்பந்தப்படும் சில இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளன.
- அ - கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கைக்குச் சமனான ஆசனங்களின் எண்ணிக்கை நேரடியாகத் தொடர்புபடுகிறது.
- ஆ - கணிசமானளவு எண்ணிக்கையான வாக்காளர்கள் எத்தகைய பிரதிநிதித்துவத்தையும் பெறத்தக்க வாய்ப்பு உண்டு.
- இ - கட்சித் தலைவர்களை உயர்நிலையில் வைக்கின்றது.
- ஈ - சிறு கட்சிகளுக்குப் பாதகமாய் உள்ளது.
- உ - பிரதேசத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிந்தனை அடிப்படையாகக் கொண்டது.
- ஊ - கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முறையை அடிப்டையாகக் கொண்டது.

21. விகிதசம முறைக்குப் பெறுமதியான சேர்மானத்தைக் காட்டுக.
1) அஇஈஊ. 2) ஆஇஈ. 3) அஇஊ. 4) அஆஇஉ.
( ............ )

22. பெரும்பான்மை முறைக்குப் பெறுமதியான சேர்மானத்தைக் காட்டுக.
1) ஆஇஈ. 2) ஈஉஊ. 3) இஈஉ. 4) ஆஈஉ.
( ............ )

23. குடிமுனைக்குப் பொருத்தமான சேர்மானத்தை அடையாளம் காண்க.
- அ - சட்டங்களை இயற்றுவதிலும் மக்களுக்கு வாய்ப்பளிப்பதிலும் அது வழிகாட்டுகின்றது.
- ஆ - சட்டசபைகளின் அதிகாரத்தைக் குறைக்கின்றது.
- இ - மக்களின் அதிகாரத்தை வெளிக்காட்டுகிறன்து.
- ஈ - அது முறைப்பாடு செய்வது போன்றது.

1) அஆஇ. 2) ஆஇஈ. 3) இஈஅ. 4) அஆஈ.
( ............ )

24. பாசிச அரசுக்குப் பொருத்தமான சேர்மானக் கூற்றுக்களை அடையாளம் காண்க.
- அ - சமூகத்தினை இராணுவ மயமாக்கல்.
- ஆ - தனியார் சொத்துரிமையினை ஏற்றல்.
- இ - தலைவர்களுக்கு மேன்மையான இடம் வழங்குதல்.
- ஈ - சட்டத்தின் ஆட்சி நிலவுதல்.

1) அஆஇ. 2) ஆஇஈ. 3) இஈஅ. 4) ஈஅஆ.
( ............ )

25. பின்வருவனவற்றில் அரசியல் யாப்பு ஒன்றில் உள்ளடக்கப்படுவதற்குக் குறைந்தளவு வாய்ப்புடையது எது?
1) அரசாங்கத் தாபனங்களுக்கிடையில் அதிகாரப் பங்கீடு.
2) அரசியல் யாப்பைத் திருத்தும் வழிமுறை.
3) நிருவாக அதிகாரிகளைச் சேர்த்துக்கொள்ளும் வழிமுறை
4) பிரதிநிதித்துவ முறை.

( ............ )

26. நெகிழா யாப்புக்கு அதிகம் பொருந்தும் கூற்றைத் தெரிவுசெய்க.
1) யாப்பை விரும்பியவாறு மாற்றலாம்.
2) யாப்பை மாற்றுவதற்கு விசேட வழிமுறையைப் பின்பற்றவேண்டும்.
3) யாப்பு பிரஜைகளின் உரிமைகளை உறுதிப்படுத்துகின்றது.
4) யாப்பை ஒருபோதும் மாற்ற இயலாது.

( ............ )

27. சோவியத் அரசாங்க முறைக்குப் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவுசெய்க.
- அ - அது சட்டரீதியாகவேனும் வலுநோக்கற் கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லை.
- ஆ - சோவியத் யூனியனின் பிராந்திய அலகுகள் பிரிந்துசெல்லும் உரிமையைப் பெற்றிருந்தன.
- இ - நீதிபதிகள் சட்டத்துறையாலும் நியமிக்கப்பட்டனர்.
- ஈ - அங்கு பல கட்சித் தேர்தல்கள் இடம்பெற்றன.

1) அஆஇ. 2) ஆஇஈ. 3) இஈஅ. 4) ஈஅஆ.
( ............ )

28. பிரித்தானிய அரசாங்க முறைக்குப் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவுசெய்க.
- அ - மகாராணியார் ஆளுகிறார். ஆனால், ஆட்சி புரிவதில்லை.
- ஆ - இன்று பிரபுக்கள் சபையில் ஆயுட்காலப் பிரபுக்களே பெரும்பான்மையினராவர்.
- இ - பாராளுமன்றம் நிறைவேற்றும் சட்டங்கள் நீதிப்புனராய்வுக்கு உட்படுகின்றன.
- ஈ - பிரதமர் தமது அமைச்சரவையைப் பாராளுமன்றத்திலிருந்து தெரிவுசெய்யப்படவேண்டும்.

1) அஆஇ. 2) ஆஇஈ. 3) ஆஈஅ. 4) ஈஅஇ.
( ............ )

29. பிரான்சிய ஜனாதிபதிக்குப் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவுசெய்க.
- அ - தேசியப் பேரவையைக் கலைப்பதற்குத் தற்துணிவு அதிகாரம் உண்டு.
- ஆ - ஜனாதிபதி அமைச்சரவைக்குத் தலைமை தாங்குகின்றார்.
- இ - அவர் மக்களால் நேரடியாகத் தெரிவுசெய்யப்படுகின்றார்.
- ஈ - அரசுப் பேரவையும் அரசியலமைப்புப் பேரவையும் மேற்கொள்ளும் செயற்பாடுகளின் சட்டரீதியான தன்மையை மேற்பார்வை செய்கின்றார்.

1) அஆஇ. 2) ஆஇஈ. 3) இஈஅ. 4) ஈஅஆ.
( ............ )

30. மீள அழைப்பிற்குப் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவுசெய்க.
- அ - அது அரசாங்க அதிகாரிகளைப் பதவிநீக்கம் செய்யும் நடைமுறை ரீதியானதும் செயற்றிறன் மிக்கதுமான ஒரு முறையாகும்.
- ஆ - இம்முறை பின்பற்றப்படும் நாடுகளில் அதன் பிரயோகம் பிரதேச அல்லது மாகாண மட்டங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப் பட்டிருக்கும்.
- இ - அது அரசாங்க அதிகாரிகளை நீக்குவதற்கு வாக்காளர்களுக்கு அதிகாரத்தை வழங்கும் ஒரு முறையாகும்.
- ஈ - அதிகாரிகள் அதிக பொறுப்புடன் செயற்படுவதற்கு உதவுகிறது.

1) அஆஇ. 2) ஆஇஈ. 3) இஈஅ. 4) ஈஅஆ.
( ............ )

31. சமஷ்டித் தத்துவங்களை விவரிப்பதில் பிழையான கூற்று.
1) யாப்பினூடாக அரசாங்க அதிகாரத்தை முறைப்படி பிரித்தல்.
2) அரசாங்கத்தின் பிராந்திய அலகுகளை உருவாக்குதல்.
3) தத்தமது அலகினால் நிறைவேற்றப்பட்ட சட்டங்களுக்கு மாத்திரம் மக்கள் பணிந்து நடப்பர்.
4) யாப்பின் அதி உயர் தன்மையான ஒரு முன்னணி இயல்பு.

( ............ )

32. கீழே தரப்படும் சமஷ்டி முறைகள் தொடர்பான பிழையான கூற்றுக்களை அடையாளம் காண்க.
1) இந்திய யாப்பு மிகவும் பலம் வாய்ந்தது, மத்திய அரசாங்கம் ஒன்றிற்கு இடமளிக்கிறது.
2) சோவியத் யூனியனில் பிராந்திய அலகுகள் பிரிந்துசெல்ல உரிமை இருந்தது.
3) கனடாவில் பிராந்திய அலகுக்கு எல்லா எஞ்சிய அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன.
4) ஐக்கிய அமெரிக்காவில் செனற்சபை சம அரசுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

( ............ )

33. தெய்வீக உரிமைகள் கோட்பாட்டிற்குப் பயன்படுத்த முடியாத கூற்று எது?
1) கடவுளுக்கு மட்டுமே கணக்குச் சொல்லவேண்டிய ஆட்சியாளர்கள்.
2) ஒரு துஷ்ட அரசன் கடவுளின் தண்டனையைப் பெறுகிறான்.
3) அரசர்களின் அதிகாரங்களைப் பாராளுமன்றங்கள் கட்டுப்படுத்துகின்றன.
4) அரசுக்கு அடிபணிதல் மக்களின் கடமையாகும்.

( ............ )

34. நூலாசிரியர்களோடு பொருந்தக்கூடிய சரியாகச் சேர்மானமாகின்ற சோடியினைக் காண்க.
- அ - இயல்பில் மனிதன் ஓர் அரசியல் பிராணியாவான் - அரிஸ்ரோட்டில்.
- ஆ - மனிதன் சுதந்திரமாகப் பிறக்கின்றான். ஆனால், எல்லா இடங்களிலும் அவன் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கின்றான் - மக்கியவல்லி.
- இ - ஆட்சியாளன் நரியையும் சிங்கத்தையும்போன்று நடிக்கவேண்டும் - ரூசோ.
- ஈ - இயற்கை நிலையில் வாழ்வு தனியானது. மனவெறுப்பூட்டுகின்ற மிருகத்தன்மையானது, போட்டியானது, குறுகியது - தோமஸ் ஹொப்ஸ்.

1) அஆ. 2) ஆஇஈ. 3) இஈ. 4) அஈ.
( ............ )

35. அரசின் இயல்பு சரியாகப் பொருந்துகின்ற அரசு மாதிரியை அடையாளம் காண்க.
1) நிலப்பிரபுத்துவ ஆதிக்கம் - மானியமுறை
2) போட்டிக்கட்சி முறை - சோசலிஷ அரசு
3) பாட்டாளியின் அதிகாரம் - பாசிச அரசு
4) அரசின் புகழ் பாடுதல் - தாராண்மை ஜனநாயக அரசு

( ............ )

* 36 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றினதும் இரு கூற்றுக்கள் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு வினாவிலும் இடம் பெறும் சோட்க் குற்றக்குப் பொருத்தமானவிவரிப்புக்களை ,கீழே தரப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து தெரிவு செய்து ஒவ்வொரு வினாவிற்கும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் 1, 2, 3,4 என அடையாளம் இடுக.

| கூற்று -1 | கூற்று -11 | இலக்கம் |
|---|---|---|
| உண்மை | உண்மை | 1 |
| பொய் | உண்மை | 2 |
| உண்மை | பொய் | 3 |
| பொய் | பொய் | 4 |

36. கூற்று-1 : ஐக்கிய அமெரிக்க உயர் நீதிமன்றுக்கு நீதிப்புனராய்வு அதிகாரமுண்டு.
கூற்று-11 : காங்கிரஸ் மூன்றில் பெரும்பான்மை மூலம் ஜனாதிபதியின் அதிகாரத்தை நிராகரிக்க முடியும்.
( ............ )

37. கூற்று-1 : பிரான்சிய ஜனாதிபதி தமது சுயவிருப்பில் அமைச்சர்களை நியமிக்க முடியாது.
( ............ )
கூற்று-11 : பிரான்சின் அரசியலமைப்புப் பேரவை அந்நாட்டின் சட்டவாக்கத்தை முற்புனராய்வு செய்யும் அதிகாரம் பெற்றுள்ளது.

38. கூற்று-1 : பிரித்தானியாவில் கீழ்மன்றம் நிறைவேற்றிய மசோதாக்களை பிரபுக்கள் சபை காலதாமதப்படுத்த முடியும். ( ............ )
கூற்று-11 : இங்கிலாந்துப் பாராளுமன்றம் நிருவாகத்துறையைக் கட்டுப்படுத்துகின்றது.

39. கூற்று-1 : இந்திய மாநில அரசுகள் இராஜ்ய சபையில் சமமான பிரதிநிதித்துவத்தை பெறுகின்றன.
கூற்று-11 : இந்திய ஜனாதிபதியை குற்றப்பிரேரணை ஒன்றின் மூலம் பதவியிலிருந்து நீக்க முடியும்.
( ............ )

40. கூற்று-1 : சோவியற் யூனியனின் பிரிசீடியம் சுப்ரீம் சோவியத் மன்றினால் தெரிவு செய்யப்பட்டது.
கூற்று-11 : சுப்ரீம் சோவியத் மன்றம் சமமான அதிகாரங்களுடைய இரு மன்றுகளைக் கொண்டமைந்திருக்கின்றது. ( ............ )

---

VIII ஆம் பக்கத்தொடர்ச்சி.......

02. ஆ) 1) சாரதா எனும் பாத்திரம் பற்றிய உமது மனப்பதிவை வெளியிடுக.
2) இவ்வுரைப் பகுதியில் விபரிக்கப்படும் ராமுவின் மன உணர்வு யாது?
3) அவனை இம்மன உணர்வுக்கு ஆட்படுத்திய பின்னணியை விளக்குக.
4) இவ்வுரைப்பகுதியில் வெளிப்படும் நடைச்சிறப்பை விளக்குக.

## பகுதி - 11

03. **மானம்** எனும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறுவனவற்றை ஆதாரமாகக்கொண்டு கீழ்வருவனவற்றைத் தெளிவுபடுத்துக.
அ) மானமுள்ளோரின் சிறப்பியல்புகள்.
ஆ) தாழ்வான செயல்களால் உண்டாகும் இழிவு.
இ) மானத்தின்பொருட்டால் உயிர் விடுவதன் சிறப்பு.

04. **திருவடி சூட்டுப் படலத்தில்** பரதன் இராமனைக் காணும் பகுதியில்,
அ) பரதன் நிலை கண்டு இராமன் உற்ற துயர்
ஆ) தந்தையின் மரணம் கேட்டு இராமன் அடைந்த வேதனை
இ) வசிட்ட முனிவர் இராமனுக்குக் கூறிய ஆறுதல் மொழிகள்
என்பவற்றை விளக்குக.

05. **இராஜநாயகத்தில்,**
அ) கஃபதுல்லாவின் புகழ்
ஆ) சுலைமான் (அலை) வாயிலாக வெளிப்படுத்தப்படும் நபி (ஸல்) அவர்களின் புகழ்
இ) உவமானங்களைக் கையாள்வதில் வண்ணக்களஞ்சியப் புலவரின் திறமை
என்பவற்றை எடுத்துக்காட்டுக.

06. **''திருத்தொண்டர் புராண வசன முகவுரை''** என்ற கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு,
அ) சைவர்களின் பண்புகளாக ஆசிரியர் எடுத்துக்காட்டுபவை
ஆ) பெரியபுராணத்தின் சிறப்புகள்
இ) கையாளப்பட்டுள்ள மொழிநடை
என்பவற்றை விளக்குக.

07. அ) நிர்மலானந்தரின் தவச் சிறப்பு
ஆ) இக்கதையின் ஊடாக வெளிப்படுத்தப்படும் தத்துவ உண்மை
இ) நடை குறித்து உமது அபிப்பிராயம்
ஆகியன கு.அழகிரிசாமியின் தவப்பயன் சிறுகதையில் இழையோடும் ஆற்றினைத் தெளிவுபடுத்துக.

08. அ) **வெண்ணிலாவில்** பாரதியின் கவர்ச்சி ஆற்றலையும்
ஆ) **காணி நிலம் வேண்டும்** என்ற கவிதையில் பராசக்தியிடம் பாரதி வேண்டுவனவற்றையும் பாரதி பாடல்களை அடிப் படையாகக்கொண்டு விளக்குக.

09. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றினை விளக்குக.
அ) 'கொங்குதேர் வாழ்க்கை'யில் தலைவியின் மீது தலைவன் கொண்டுள்ள காதல் சித்திரிக்கப்படும் விதம்.
ஆ) பெட்டிக்கடை நாரணன் கவிதையில் இடம்பெறும் குறியீட்டுப் படிமங்கள்.
இ) தவப்பயன் சிறுகதையின் பொருத்தப்பாடு.
ஈ) ''பிணைக்கப்பட்ட கடனை விட வெளி முதலீட்டை வரவேற்பதே நலம்'' என்ற கட்டுரையில் வெளி முதலீட்டை வர வேற்பதால் ஏற்படும் நன்மைகள்.
உ) மகாத்மா காந்தி பஞ்சகத்தில் காந்தியின் மீது பாரதி கொண்ட பற்று.

-நிறைவுபெற்றது-

கல்விச்சுடர் தொடர்பாக மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

ஆசிரியர், உதயன்-கல்விச்சுடர்,
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 071-6850005, 0212229933, 071-4273035
தொலைநகல் :-0212229944
மின்னஞ்சல் :-newkalvisudar@yahoo.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்பிடப்பட்ட (எண்ணெய்க் கொள்வனவு) உடன்படிக்கையும் எண்ணெய் விலையும்
# Hedging Agreement and Oil Price

தொகுப்பு:-
V.முரளிதாஸ் B.A.Hons (Eco.Sp), M.A (Eco),
St.Benedict's College, Col-13.

## உயர்தர மாணவர்களுக்கான ஒரு சிறப்புப் பார்வை

இன்று எண்ணெய் விலைபற்றியும் எண்ணெய் தொடர்பான ஹெட்ஜிங் (Hedging Agreement) உடன்படிக்கை பற்றியும் எல்லோராலும் பேசப்பட்டுவருகிறது. இந்த எண்ணெய்ப் பிரச்சினை உயர் நீதிமன்றம் தலையிடும் அளவுக்கு முக்கிய விடயமாகி விட்டது. இதுபற்றி மாணவர்களுக்குத் தெளிவான விளக்கத்தை அளிப்பதற்காக ஆசிரியர் முரளிதாஸ் இந்தக் கட்டுரையை வரைந்துள்ளார். இது குறிப்பாக வர்த்தக, கலைப்பிரிவு மாணவர்களுக்குப் பரீட்சையில் கைகொடுக்கும் ஹன்பது கல்விச்சுடரின் நம்பிக்கை. இக்கட்டுரையை சுடர்ஒளி-கல்விச்சுடருக்கு விசேடமாக வழங்கிய ஆசிரியர் முரளிதாஸ், மாணவ உலகின் நன்றிக்குரியவர்.

### ✱ பொருளாதார நெருக்கடி - சிறு அறிமுகம்

அண்மைக்காலமாக உலகளாவிய ரீதியில் பொருளாதாரத் துறையானது பாரிய நெருக்கடியினை எதிர்கொண்டு வருகின்றது. இவற்றுள் சர்வதேச நிதி நெருக்கடியும் அதன் தாக்கங்களும் மற்றும் எரிபொருட்களின் விலை அதிகரிப்பும் அதில் ஏற்பட்ட மாற்றங்கள், உணவு நெருக்கடிகள் என பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு தீர்வு காணவேண்டிய தேவை உலக நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளது. இதற்கென பல்வேறு ஆராட்சிகள், மகாநாடுகள் மற்றும் உடன்படிக்கைகள் என நாடுகளுக்கிடையே மற்றும் நிறுவனங்கடையே ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய வாஷிங்டனில் "ஜி - 20"(G 20) உச்சி மாநாடு (டிசம்பர் 26, 2008) நடைபெற்றபொழுது அதில் பங்கேற்ற தலைவர்கள் ஒன்றிணைந்து செயற்படவேண்டிய முக்கியத்துவம் குறித்தும், ஏற்படுத்தப்படவேண்டிய ஒப்பந்தம் குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இவ்வாறே உணவு நெருக்கடியினை போக்குவதற்கு உணவு இருப்பினை அதிகரித்துக் கொள்வதற்கும் பல்வேறு ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் தொடக்கப்பட்டுள்ளது அத்துடன் இதற்கான காரணங்களையும் தெளி வாக அறிந்து கொள்வதும் முக்கியமானதாகவுள்ளன. அண்மைக்காலங்களாக ஆசியப்பிராந்தியத்தில் உள்ள முக்கிய நாடுகளாகக் கொள்ளக்கூடிய சீனா மற்றும் இந்தியாவானது துரிதமாக பொருளாதாரத்திலும் மற்றும் இதர துறை களிலும் ஒரு உந்துதலான அதீதபோக்கான வளர்ச்சியைக் கண்டு வருகின்றது. இவை அதிக சனத்தொகையைக் கொண்ட நாடுகள் ஆகும். இம்மக்கள் தற்பொழுது நல்லதொரு பொருளாதார முன்னேற்றத்தால் பொருளாதார சுபிட்சத்தை அனுபவிக்கத்தொடங்கியுள்ளனர். இதனால் வறுமையின் பிடியில் இருந்த மக்கள் அதிலிருந்து மீண்டுவரத் தொடங்கியுள்ளனர். இதனால் குறிப்பாக மத்திய தர வர்க்கத்தினது நுகர்வு நடத்தையில் ஒரு முன் னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதாவது தரமான, போஷாக்கான உணவுக்கான கேள்வியினை ஏற்படுத்துகின்றபொழுது உணவுக்கான மொத்தக்கேள்வியில் ஓர் அதிகரிப்பினை உணர முடிந்துள்ளது. அது மாத்திரமன்றி உலக சந்தையில் எண்ணெய் விலையானது அதிகரித்தபடியினால் புதிய தீர்வுத்திட்டத்தினை காண விளைகின்ற பொழுது (Bio Gas) உயிரியல் வாயுக்கான தேவை, முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது.

எனவே அதிகளவு உயிரியல் வாயு உற்பத்திக்காக உணவுப்பயிர்கள் எரிபொருள் உற்பத்தி நோக்கிப் பயன் படுத்தப்பட்டு வருகின்றமையும் உணவு பற்றாக்குறையும் பிரதான காரணிகளில் ஒன்றாக அமைகின்றது.

அது மாத்திரமன்றி மாறிவரும் காலநிலைகள், இயற்கை அனர்த்தங்களான சூறாவளி, வரட்சி, தீயழிவு, சுனாமி அதிகரித்து வரும் உள்நாட்டு வெளிநாட்டு யுத்தம், இனக்கலவரங்களால் அதிகளவு பெறுமதிவாய்ந்த வளங்கள் நாசமாக்கப்படுவதும் பெருமளவு விவசாய நிலங்கள் பயிர்ச்செய்கைகளுக்கு உட்படுத்தப்படாமை போன்றவையும் உணவு நெருக்கடிக்கான காரணிகளில் முக்கியம் வாய்ந்தவையாக குறிப்பிடப்படுகின்றது.

### ✱ ஹெட்ஜிங் உடன்படிக்கை ரத்தும் இலங்கைப் பெற்றோல் விலையும்

எது எவ்வாறு இருந்தபொழுதிலும் இலங்கையைப் பொறுத்தவரையில் தற்பொழுது மிகவும் பரபரப்பாகப் பாராளுமன்றம் தொடக்கம் பட்டி தொட்டி வரை முக்கிய இடம்பிடித்திருப்பதுடன் அரசின் அமைச்சரது பதவியினைக் கூட அதிரவைக்கும் வகையில் இடம்பெற்றிருப்பதுதான் "ஹெட்ஜிங் உடன்படிக்கை" விவகாரம் இவ் உடன்படிக்கையை இரத்துசெய்து எரிபொருள் விலையை குறைத்து பெற்றோல் விலையை லீற்றர் ஒன்று 100/= விலைக்கு விற்பனை செய்யுமாறு உத்தரவிட்டது. இவ் உயர் நீதிமன்ற தீர்ப்புக்கு மதிப்பளிக்கும் வகையில் இந்தியன் ஓயில் கூட்டுதாபனத்தின் (Indian Oil Corporation) துணை நிறுவனமான (LIOC) ( Lanka Indian Oil Corporation) தனது பெற்றோல் விலையை லீற்றர் ஒன்று 100/= விற்பனை செய்வது என்ற முடிவினை 19-12-2008 நள்ளிரவு முதல் அமுல்படுத்தியது. ஆனால், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் (Cey Petroleum Corporation - CPC) தனது விலையை குறைக்க முன்வரவில்லை. ஆனால், (LIOC) தனது பெற்றோலின் விலையை 18 சதவீதத்தால் குறைத்திருந்தது. இதன் விளைவாக (LIOC) எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசையிலும் மக்கள் எரிபொருளுக்காக காத்து நிற்கவேண்டி ஏற்பட்டதுடன் அதிக பெற்றோலுக்கான கூடிய கேள்வியும் ஏற்படத் தொடங்கியது. இதனால் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இவற்றின் நிரம்பலும் குறைவடையத் தொடங்கியது. இதேவேளை(LIOC இலங்கையில் நாள் ஒன்றுக்கு சுமார் 5 இலட்சம் லீற்றர் பெற்றோலை விற்பனை செய்து வருவதாகவும் இது சுமார் 20 சதவீத சந்தைக் கேள்வி ஆக இருக்கக்கூடுமெனக் குறிப்பிடுகின்றது.

இது இவ்வாறு இருக்க CPC ஆனது பெற்றோல் லீற்றர் ஒன்று 122/= என்ற உறுதியான விலையை கொண் டிருந்தது. இதனால் இவ்நிரப்பு நிலையங்களில் எரிபொருளுக்கான கேள்வி பெருமளவாக சடுதியாக வீழ்ச்சி கண்டது.

இந்நிலைமையினை முன் நிறுத்தி நாட்டின் எதிர்க்கட்சிகள் பல் வேறுபட்ட வாதப்பிரதி வாதங்களிலும் அறிக்கைகள், பத்திரிகையாளர் மாநாடு என்றும், வீதியில் இறங்கிப் போராடப் போவதாகவும் சூடு பிடிக்கும் சமாச்சார மாக இன்று முக்கியம் பெறுகின்றது.

அது மாத்திரமன்றி பொருளாதார பிரச்சினை ஒருபுறமிருக்க உயர்நீதி மன்றத்தின் உத்தரவை நடைமுறைப்படுத்தாமை போன்ற சட்டப் பிரச்சினையும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. இது தொடர்பாக வழக்கறிஞர்கள் கூடி ஆராய்ந்து வருகின்றனர். எது எவ்வாறு இருந்தபோதும் பாராளுமன்றத்தின் அமைச்சர்கள் தான் முடிவெடுக்கப்போகின்றனர் என்று பலதரப்பில் பல்வேறு கோணங்களிலும் பிரசஸ்தாபிக்கப்பட்டு வருகின்றது. தற்பொழுது CPC ஆனது தனது எரிபொருள் விலையை குறைக்க முன்வந்துள்ளது.இவ்வாறு எரிபொருள்களின் விலைகளானவை முக்கியத்துவம்பெற்று விளங்குவதற்கு காரணம் இன்றைய காலத்தில் பொருளாதாரத்தின் இதயம் என அழைக்கப்படுவது பொருளாதார வளர்ச்சியாகும். இப்பொருளாதார வளர்ச்சிக்கு ஓர் இயந்திரம் போல் அமைவது எரி பொருட்கள் என அழைக்கப்படுகின்றது.

### ✱ எரிபொருள் விலை அதிகரிப்பினால் ஏற்படும் பொருளாதார விளைவுகள்

எரிபொருட்களின் விலைகளில் ஏற்படுகின்ற அதிகரிப்பானது பொருளாதாரத்தின் சகல துறை களையும் பாதிப்படையச் செய்கின்றது. எவ்வாறெனில் எரிபொருள் விலை அதிகரிக்கின்றபொழுது நேரடியாகப் போக்குவரத்துச் செலவு அதிகரிக்கின்றது. இது மககளை நேரடியாகவும், மறைமுகமாகவும் தாக்கத்தைச் செலுத்துகின்றது. அத்துடன் வாழ்க்கைச் செலவினை அதிகரிக்கச் செய்வதுடன் பொருட்களது காவுகைச் செலவு அதிகரிக்கின்றபொழுது அவற்றினது விலைகளும் அதிகரிக்கும். பொருட்கள் சேவைகளின் உற்பத்திச் செலவும் அதிகரிக்கச் செய்கின்றது மேலும் உற்பத்தி, கைத்தொழில்துறைகளிலும் மற்றும் மின் கட்டணங்கள், சமையல் எரிவாயுக்களின் விலைகள், உணவுப்பண்டங்களின் விலைகள், விமானச்சீட்டுக்களின் கட்டணம், மற்றும் சுற்றுலாத்துறைகளான ஹோட்டல்களின் தங்குமிட அறைகளுக்கான கட்டணம் விவசாயம், கைத்தொழில், சேவைத்துறைகள் என ஒட்டு மொத்த பொருளாதாரத்திலும் பெருமளவான பாதிப்பை ஏற்படுத்துவதாக காணப்படும்.

இவை அனைத்துக்கும் மூல காரணமாய் அமைவது உலக சந்தையில் ஏரிபொருள்களின் விலைத் தளம்பல்கள் ஆகும். எண்ணெய் வள நாடுகள் தமது எண்ணெய் விலையை உயர்வாகப் பேணுவதற்கு தமது OPEC அமைப்பின் ஊடாக செயற்கையாக நிரம்பலைக் கட்டுப்படுத்தி உலக சந்தையில் செயற்கைத் தட்டுப் பாட்டினை ஏற்படுத்தி எண்ணெய் விலையை உயர்ந்த விலையினை பேணுவதற்கும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டது.

### ✱ பொருளாதாரமும் உலக நிதிநெருக்கடியும்

எது எவ்வாறு இருந்தபொழுதும் அண்மைக்காலமாக தொடர்ந்து கொண்டிருக்கும் உலக நிதி நெருக்கடியினால் உலகின் பொருளாதார ஜாம்பவான்களாக கருதப்படும் நாடுகளான அமெரிக்கா, ஜேர்மன், ரஷ்யா முதல் ஜப்பான் வரை ஆட்டம் காணத் தொடங்கியுள்ளது. இதனை சரிசெய்வதற்காக அமெரிக்க அரசானது நிதி நெருக்கடியினுள் சிக்கியுள்ள தனியார் வங்கிகளைப் பாதுகாக்க நிதியுதவிகளை வழங்கிவருகின்றது. அத்துடன் ஐரோப்பிய வங்கி தனது கடன்களுக்கான வட்டி வீதத்தினைக் குறைத்துள்ளதுடன் பல்வேறு நாடுகளும் தமது பொருளாதாரத்தை பாதுகாக்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

இந்நிலைமை தொடர்வதனால் பொருளாதாரமானது ஒரு மந்த கதியான போக்கையே கொண்டிருப்பதால் அமெரிக்கா, ஐரோப்பிய மக்கள் தமது நுகர்வுப் படிக்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளனர். அதாவது, தமது வருமானம் குறைவடைந்துள்ளதா். தமது பொருட்கள், சேவைகளுக்கான கேள்வியைக் குறைக்கத் தொடங்கியதுடன். விலை குறைந்த பொருட்களை தேடிச் கொள்வனவுசெய்வதில் ஈடுபட்டுள்ளனர். இதன் காரணத்தினால் ஏற்றுமதிகளில் தங்கி வாழும் நாடுகள் தமது அன்னியச் செலாவணி வருமானம் குறை வடைந்து வருவதாக அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன. இதனை பொருளாதார வல்லுனரும் இந்தியப் பிரதமருமான கலாநிதி. மனமோகன்சிங் தமது நாடு உலகப் பொருளாதாரத்தின் தாக்கத்தால் ஏற்றுமதி சற்று குறை வடைந்துள்ளதுடன் பங்குச்சந்தையும் சற்றுத் தளம்பல் நிலைக்கு உள்ளாகியது எனக் குறிப்பிடப்பட்டுள்ளார். பொதுவாக அமெரிக்கப் பொருளாதாரத்தில் ஏதாவது மாற்றம் இடம்பெற்றால் ஏனைய நாட்டினது பொருளா தாரத்தில் அதன் தாக்கம் [illegible] உணரப்படும். [illegible] நிகழ்வுகள் இதனை உறுதிப்படுத்தியுள்ளது. அதாவது,அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் உலக வர்த்தக மையத் தாக்குதலுக்கு நடைபெற்றபோது இவை உணரப்பட்டமைகளும் [illegible]

அண்மையில் வெளியான பொருளாதார அறிக்கையில் ஜப்பான் நாட்டினது வாகனங்களினது கேள்வி ஆனது வெளிநாடுகளில் குறைந்து வருவதனால் அந்நாடு தனது வாகனங்களின் கேள்வியினை அதிகரிப்பதற் காக விலையினைக் குறைத்துள்ளது. இவை அனைத்துக்கும் காரணம் உலகில் ஏற்பட்ட நிதிநெருக்கடியும் அதன் தாக்கங்களுமே ஆகும். எனவே, ஆசியாவின் மிகப் பலமான பொருளாதார வல்லமை வாய்ந்த நாடான ஜப்பான், மற்றும் இந்தியா போன்ற நாடுகள் இதன் விளைவுகளை தவிர்க்க முடியாதுள்ளபோது மற்றைய நாடுகளது நிலைமை எப்படி இருக்கப்போகும் என்பதனை சொல்லித் தெரியவேண்டியதில்லை.

ஆனால், இலங்கையில் அதன் பொருளாதாரமானது உறுதியாக தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படுவ தாகவும், உலகின் நிதிநெருக்கடியானது இலங்கையை பாதிக்காத வகையில் சகல ஏற்ப [illegible]களும் செய்யப் பட்டுள்ளதாகவும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. இதனைச் சற்று பொறு[illegible]த்திருந்து பார்க்கலாம்.

### ✱ ஹெட்ஜிங் உடன்படிக்கையின் சுருக்கம்

இலங்கையில் இதற்கு மேலாக அரசியல், பொருளாதாரங்களில் செல்வாக்குப்பெற்று பலராலும் பேசப்பட்டு வருவதும், அரசியல்வாதிகள் முதல் சாதாரண தொழிலாளி வரை முக்கியம் பெற்றிருப்பதுடன் இலங்கை மக்களில் பெரும்பாலாரினால் சரியாக விளங்கிக்கொள்ளப்படாத உடன்படிக்கைதான் ஹெட்ஜிங் உடன்படிக்கை (Hedging Agreement) அல்லது காப்பிடப்பட்ட உடன்படிக்கை என்பதாகும். இலங்கை யில் காப்பிடப்பட்ட எண்ணெய் கொள்வனவு உடன்படிக்கையானது 2007ஆம் ஆண்டு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கும் வங்கிக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டது. இவ் உடன்படிக்கையானது கனடா நாட்டு பொருளாதார அனுபவத்தில் இருந்து தோற்றம்பெற்ற எண்ணக்கருவின் அடிப்படையில் இது இலங்கையில் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வகையான ஆறு உடன்படிக்கைகளை இவ்வாண்டு காலப்பகுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனம் மேற்கொண்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் 2007ஆம் ஆண்டு அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

காப்பிடப்பட்ட உடன்படிக்கை (hedging agreement) ஆனது பொதுவாகக் காப்புறுதிக் கொள்கையை ஒத்தது எனக் குறிப்பிடலாம். எவ்வாறெனில், ஒருவர் தமக்கு எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நட்டத்தில் இருந்து பாது காத்துக் கொள்வதற்காக நிகழ்காலத்தில் காப்புறுதி தவணைப்பணம் (Premium) செலுத்தவதனைப்போல வேதான்.

ஹெட்ஜிங் உடன்படிக்கையிலும் உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரித்துச் செல்வதனால் அதன் விலை அதிகரிப்பால் அதிகளவு அன்னியச் செலாவணி விரையமும் நாட்டில் பணவீக்கமும் ஏற்படு கின்றது இவ்வாறான விலைத்தளம்பலை இலங்கையால் தடுத்து நிறுத்த முடியாது. எனவே, இலங்கை பெற் றோலியக்கூட்டுத் தாபனமானது ஒரு நிலையான விலையில் தொடர்ச்சியாகப் பெற்றோலைக் கொள்வனவு செய்வதற்காக வங்கியுடன் ஓர் இணக்கப்பாட்டால் ஓர் பொதுவான விலையினை எதிர்கால நிலைமைகளையும் அனுபவங்களையும் கருத்தில் கொண்டு தீர்மானித்தது. இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட விலையில் எரிபொருளைக் கொள்வனவு செய்துகொள்வதற்கு வங்கி உத்தரவாதம் வழங்கியது. எனவே, உலக சந்தை விலையில் ஏற்படும் மாற்றங்களால் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை வங்கி பொறுப்பேற்றுக்கொண்டு தீர்மானிக்கப்பட்ட அல்லது முற்கணிப்பு செய்யப்பட்ட விலையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எண்ணெய்க் கொள்வனவில் ஈடுபட்டுவந்தது.

இங்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் $ 140 டொலர் எனும் அடிப்படையில் ஒரு பரல் எண் ணெய் கொள்வனவு செய்வதாக உடன்பட்டுள்ளது. எனில் சந்தை விலை 140 ஐ விட உயர்வடை கின்றதெனில் வங்கியானது நட்டத்தினை எதிர்நோக்கவேண்டி ஏற்படும். மாறாக எண்ணை விலை பரல் ஒன்று 100$ ஆக வீழ்ச்சியடைந்தால் வங்கி இலாபத்தை அனுபவிக்கும். இதுவே இவ் உடன்படிக்கையின் உட்கிடக்கை யான கருத்தாகும்.

எண்ணெய் விலை எதிர்காலத்தில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டபோதும், எதிர்பாராத விதமாக அதன் விலை வீழ்ச்சி அடைந்துசெல்ல ஆரம்பித்தது. இந் நிலைமையினால் வங்கியினது இலாபம் அதிகரித்துச் செல்ல ஆரம்பித்ததுடன் இவ்விலைக் குறைப்பின் நன்மையைக் காப்பிடப்பட்ட எண்ணெய்க் கொள்வனவு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டதால் அனுபவிக்கமுடியாத நிலை ஏற்பட்டது. இது தவறான திட்டமிடலும், திறனற்ற எதிர்காலத் தீர்மானத்தலாலும் எழுந்த விளைவுகளாகும். இவ்உடன்படிக்கையில் சுமார் ஐந்து வங்கிகள் தொடர்பு பட்டிருந்த பொழுதும் மூன்று வங்கிகள் வெளிநாட்டு வளங்கள் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

### ✱ எரிபொருள் விலையின் அண்மைய போக்கு

எண்ணைக்கான கேள்வி ஆனது உலகின் பேரின பொருளாதார தன்மையில் தங்கி உள்ளது. சில பொருளிய லாளர்களது கருத்துப்படி உயர் எண்ணெய் விலையானது பாரிய எதிர்க்கணிய விளைவுகளைப் பொருளா தாரத்தில் தோற்றுவிக்கும் என குறிப்பிட்டுள்ளனர்.

பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் ஒன்றியம் (Organigation of the Petroleum Exporting Countries - OPEC) எண்ணெய் விலையை பேணி வருகின்றது எண்ணெய் விலையானது அண்மை ஆண்டான 1999, ஜனவரியில் பீப்பாய் ஒன்று $ 16 ஐக்கிய அமெரிக்க டொலராகக் காணப்பட்டது. அதன் பின்னரான ஆசிய நிதி நெருக்கடி, ஈராக் நிலைமைகளினால் எரி பொருளுக்கான கேள்வி குறைவடையத் தொடங்கியது.

அதன் பின்னர் விலை சடுதியாக இரண்டு மடங்கிலும் அதிகமாக 2000ஆம் ஆண்டு செப்டம்பர் மாத மளவில் 35$ ஐக்கிய அமெரிக்க டொலராக உயர்ந்தது. பின்னர் 2001 இறுதி வரை குறைவடைந்து சென்று மீண்டும் 40-50$ டொலராக 2004 காலப்பகுதியில் காணப்பட்டது. 2005 ஜூனில் 60 $ டொலராகவும், 2006 ஜூலையில் 77$ டொலராகவும் பின்னர் அதே ஆண்டு டிசம்பரில் 63 $ டொலராகவும் சற்றுக் குறைவடைந் துள்ளது.

2007 செப்ரம்பரில் 80$ ஆகவும் காணப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஐக்கிய அமெரிக்காவினது எதிர் பார்ப்பளவு இருப்பு குறைவடைந்தாலும் எண்ணெய் விலை கொள்கை மாற்றமடைந்ததுடன், மெக்ஸிகோவில் எண்ணெய் ஆறு எண்ணெய் விநியோகக் குழாய்கள் தாக்க சேதத்துக்கு உள்ளானதாலும் ஒக்டோபர் மாத்தில் 90$ ஆக அதிகரிக்கத் தொடங்கியது. அத்துடன் கிழக்கு துருக்கியில் ஏற்பட்ட பதற்ற நிலமையும் டொலரின் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியும் காரணமாகக் கொள்ளப்படுகின்றது.

2008 காலப்பகுதியை எண்ணெய் விலையில் முக்கியமானு ஆண்டாக கொள்ளலாம். இவ் ஆண்டிலேயே என்றுமில்லாதவாறு 147.27$ எனும் சாதனையான விலையினை 2008 ஜூலை 11ஆம் திகதி பதிவாகியுள்ளது இதன் போதே ஈரானது ஏவுகணைப் பரிசோதனை சர்ச்சையும் முக்கியம் பெற்றது.

| 2008ஆம் ஆண்டு | பீப்பாய் ஒன்றின் விலை ஐக்கிய அமெரிக்க டொலர் |
|---|---|
| ஜனவரி | 100$ |
| மார்ச் | 110$ |
| மே | 125-130$ |
| யூன் | 140$ |
| ஜூலை - 11 | 147.27$ |
| ஜூலை - 24 | 125$ |
| ஒக்டோபர் | 70$ |
| டிசம்பர் - 21 | 33.8$ |

### ✱ முடிவுரை

இன்றைய உலக பொருளாதாரத்தில் ஒரு நாடானது தனித்து தனது பொருளாதார, அரசியல் கொள்கையினைத் தீர்மானிக்க முடியாதுள்ளது. எனவே, உலகமாயமாக்கல் மூலம் உலகின் ஒரு பொருளாதாரத்தில் ஏற்படும் தாக்கமானது ஏனைய பொருளாதாரத்தினை பாதிக்கவே செய்யும் இதனைத் தடுப்பதென்பது கடினமான ஒரு சவால் மிகுந்ததாகவே காணப்படுகின்றது. இவை அனைத்தும் ஏற்படக் காரணமாய் அமைந்திருப்பது காரணி களது கிடைப்பனவு நாடுகளுக்கிடையே வேறுபட்டுக் காணப்படுவதாகும். இதனாலேயே றிக்காடே (Ricardo) எனும் பொருறியல் அறிஞர் தனது ஆய்விலே ஒப்பிட்டு நயம் எனும் கோட்பாட்டினை முன்வைத்து விளக்கி யுள்ளார்.

-நிறைவுற்றது-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org